# எங்கள் தேசம்

மாதம் இரு முறை

QD/13/NEWS/2014

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே!

Engal Thesam  එංගල් දේසම්

மலர்: 13 | இதழ்: 12 | 2014 ஜூன் 15 – 30 | ஹிஜ்ரி: 1435 | பக்கங்கள்: 20 | விலை: ரூபா 30.00 | 271





பொது வேட்பாளர் கனவு வெறுமைதான் விஞ்சும்? 07


நேர்காணல்...

பண்டங்களின் உண்மைத்தன்மையை அறிந்து கொள்ளுங்கள் 10



எகிப்தின் மிக மோசமான பொருளாதாரம்... 13

## அலுக்கோசு இனி இல்லை



இலங்கையில் மரண தண்டனை நிறைவேற்றுகின்றவரை அழைப்பதற்கு இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்டு வந்த அலுக்கோசு என்ற பெயர் தற்போது மாற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது குறித்த பதவிக்கான பெயரானது உயிர் எடுப்பவர் என்று மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# சாட்சிகளின்றி மூடப்படப்போகிறது 167 முஸ்லிம்களின் சடலங்கள்



## அப்போதைய கிழக்கு மாகாண பொறுப்பாளர் கருணா அம்மான் சாட்சியமளிக்க தயாரா?

## உலகமே பார்த்திருக்க பட்டப்பகலில் கடத்தப்பட்டவர்களுக்கு சாட்சியமே இல்லையா?

-பஷீர் அலி-

1990 ஆம் ஆண்டு குருக்கல்மடம் என்ற இடத்தில் வைத்து புலிகளால் கடத்தப்பட்டு படுகொலை செய்து புதைக்கப்பட்ட 167 முஸ்லிம்களின் சடலங்கள் தொடர்பில் சாட்சியங்கள் இல்லாமையால் சட்டத்தை இயக்க முடியாது என காணாமல்போனவர்கள் பற்றிய விசாரணைகளுக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் பராக்கிரம பரணகம தெரிவித்துள்ளார்.

மேற்படி ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான சாட்சியமளிக்கும் அமர்வின் முடிவில், செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சில உடல்கள் அங்கு புதைக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. அதனை மட்டும் வைத்துக்கொண்டு விசாரணை மேற்கொள்ள முடியாது. சரியான ஆதாரங்களுடன்தான் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். வெறும் வாய்மூல சாட்சியங்களை வைத்துக்கொண்டு செயற்பட முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 24 வருடங்களாக தமது உறவுகளை இழந்து துன்புறும் முஸ்லிம்களுக்கு குறித்த விசாரணை ஆணைக்குழு மூலம் நீதி கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்த விடயம் இலவுகாத்த கிளியின் கதையாகி போனது. ➡16

## தம்புள்ளை பள்ளிவாசலின் இன்றைய நிலைக்கு அரச பங்காளி முஸ்லிம் கட்சிகள்தான் பொறுப்பு

### மேல் மாகாணசபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான்



தம்புள்ளை பள்ளிவாசலின் இன்றைய நிலைக்கு அரசாங்கத்திலுள்ள முக்கிய பங்காளிகளான முஸ்லிம் கட்சிகள்தான் முழுப் பொறுப்புக் கூறவேண்டும். இவர்கள் ஒன்று சேர்ந்து பள்ளிவாசலின் இருப்பை பாதுகாக்க வேண்டும். சிரேஷ்ட அமைச்சர் பௌஸி மற்றும் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், றிஷாட் பதியுதீன், அதாவுல்லாஹ் ஆகியோர் தம்புள்ளை பள்ளிவாசல் தொடர்பில் சரியானதொரு முடிவினை எடுக்கவேண்டும் என மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார். ➡16



பௌத்த பிக்கு ஒருவரின் முச்சக்கர வண்டியின் சாரதிக்கும் மற்றுமொரு முஸ்லிம் நபருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை தொடர்ந்து இருவருக்கும் இடையில் கைகலப்பு இடம் பெற்றதை அடுத்து தர்கா நகரில் ஏற்பட்ட பதட்ட நிலையையே படத்தில் காண்கிறீர்கள்.

## நீதியில்லா நாட்டில் முஸ்லிம் நீதியமைச்சர் அவர் சார் சமூகத்தினரே தாக்கப்படுகின்றனர்

### மாகாண சபை உறுப்பினர்அசாத் சாலி



நீதி இல்லாத நாட்டில் முஸ்லிம் நீதியமைச்சர் ஒருவர் இருக்கின்றார். அவர் சார்ந்த சமூகத்தினரே தாக்கப்படுகின்றனர். தாக்கியவர்கள் எவரும் பொலிஸாரினால் கைது செய்யப்படவில்லை, தாக்கப்பட்டவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதைத்தான் பொலிஸார் செய்து வருகின்றனர் என மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்தார்.

பதுளை மற்றும் அளுத்கமை வர்த்தக நிலையத் தாக்குதல் குறித்து கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது;

போலியான பாலியல் குற்றச்சாட்டுக்களை கூறி முஸ்லிம் வர்த்தக நிலையங்கள்எரியூட்டப்படுகின்றன.பகலில்ஆர்ப்பாட்டம்இடம்பெறுகிறது; பின்னர் அதே இரவில் வர்த்தக நிலையங்கள் எரிக்கப்படுகின்றன. ➡16

## பதுளை வர்த்தக நிலைய அசம்பாவிதம்: ஊவா தேர்தலில் முஸ்லிம் வாக்குகளை கொள்ளையடிக்கும் சதி?

### வடமாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின்



பதுளை புடவை வியாபார நிலையத்தில் இடம்பெற்ற அசம்பாவிதச் சம்பவம், ஊவா மாகாணத்துக்கான தேர்தல்கள் நடைபெற இருக்கின்ற நிலையில் இன முரண்பாடுகளை ஏற்படுத்தி அதனூடாக முஸ்லிம்களை அச்சுறுத்தலான மனோநிலைக்கு தள்ளிவிட்டு அவர்களது வாக்குகளைகொள்ளையிட மேற்கொள்ளப்பட்ட சதியா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. முஸ்லிம் சமூகத்தின் தேசிய தலைமை என்ற இலக்கை குறிவைத்து செயற்படுகின்ற அரசியல்வாதிகளும் இதன் பின்னணியில் இருக்கின்றார்களோ என்ற சந்தேகமும் ஏற்படுகின்றது என வடமாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின் தெரிவித்துள்ளார். ➡16

## அரசாங்கம் வெடித்துச் சிதறி வெற்றி கிடைக்கும் என எதிர்பார்க்காதீர்கள்

எல்லோரும் ஒன்றிணைந்து அரசாங்கத்திற்கு எதிராகக் குரல் கொடுப்பதன் மூலமாக வெற்றி காணலாமே தவிர, பொது அபேட்சகரினால் அல்லது அரசாங்கத்தினுள்ளே ஏற்படுகின்ற உட்பூசல்களினால் பொதுமக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவியலாது என முன்னிலை சோஷலிஸக் கட்சியின் பிரசாரச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்துள்ளார்.

மஹிந்த -வீரவன்ச, மஹிந்த - சம்பிக்க எதிர்ப்புக்கள் மேலோங்கி அரசாங்கம் வெடித்துச் சிதறும் என சிலர் எதிர்பார்த்திருக்கிறார்கள். இன்னும் சிலர் எதிர்க்கட்சியின்நிலைஎன்னவாகும்என எதிர்பார்த்திருக்கிறார்கள். பொது அபேட்சகர்தான் துன்பத்தில் துடிப்போரை மீட்டெடுப்பார் என மற்றும் சிலர் நினைக்கிறார்கள். ஆனால் இவர்கள் யாராலும் பொதுமக்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியாது. ➡16

## வட்டமடுவில் இராணுவத்தினரால் துரத்தியடிப்பு முஸ்லிம் விவசாயிகள் உண்ணாவிரதம்

அம்பாறை திருக்கோவில் பிரதேசம் வட்டமடுவிலுள்ள முஸ்லிம் விவசாயிகள் தமது நிலங்களில் விவசாயம் செய்வதற்கு இராணுவம் விதித்துள்ள தடையைக் கண்டித்து அக்கரைப்பற்றில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

வட்டமடு பகுதியிலுள்ள முறாணாவெட்டி, வேப்பையடிமடு மற்றும் புதுக்கண்டம் ஆகிய இடங்களில் ➡16

## தர்கா நகர் சம்பவத்தில் முஸ்லிம்கள் குறித்து திருப்தி

### பிரதி பொலிஸ் மா அதிபர்

அளுத்கமை தர்கா நகரில் சிங்கள-முஸ்லிம் மக்களிடையே இட [illegible] பாடு குறித்து தான் திருப்தியடைவதாக பிரதி பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக தெரிவித்தார்.

தர்கா நகரில் இரு தரப்புகளுக்கிடையில் இடம்பெற்ற ➡16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹலாலில் கை வைத்தவர்கள் இப்போது கடைகளில் வைக்கிறார்கள்

## அமைச்சர் றிஷாட் பதியுதீன்



இந்நாட்டு முஸ்லிம்கள் ஹலால் விவகாரம் முதல் பள்ளிவாசல்களை அப்புறப்படுத்தும் இனவாதிகளின் அனைத்து முயற்சிகள் தொடர்பிலும் உளவியல் ரீதியாக ஆவேசப்படாது பொறுமையை கடைப்பிடித்து வருகின்றனர். அமைதிக்கு பங்கம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் தீவிரம் காட்டுகின்ற முஸ்லிம்களின் பொறுமையை சீண்டும் வகையில் தற்போது அவர்களின் பொருளாதாரத்தை அழிக்க முயற்சிக்கப்படுகிறது என கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் றிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

தேசிய ஒற்றுமைக்காகவும் தேசிய பொருளாதாரத்துக்காகவும் பரந்தளவில் பங்களிப்பு நல்குகின்ற இலங்கை முஸ்லிம்களின் சகோதர மக்களுடனான ஒற்றுமையையும் பொருளாதாரத்தையும் சீரழித்து சின்னாபின்னமாக்குவதற்கு கடைசி உபாயமாக பாலியல் ரீதியான குற்றச்சாட்டுக்களை தோற்றுவித்து, முஸ்லிம்-சிங்கள நல்லுறவை அடியோடு இல்லாமலாக்கும் முயற்சியிலும் சில தீய சக்திகள் முயன்று வருகின்றமையை காண முடிகிறது.

பெஷன்பாக், அளுத்கமை, பதுளை ஆகிய வர்த்தக நிலைய தாக்குதல் சம்பவங்கள் அனைத்தும் பாலியல் தொந்தரவு என்ற அடிப்படையில் முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்களுக்கும் பொருளாதாரத்துக்கும் நேரடியாக விடுக்கப்பட்ட சதிச் சவாலாகும். எந்தச் சம்பவங்கள் தொடர்பிலும், குறிப்பாக அளுத்கமை, பதுளைச் சம்பவங்களில் பொலிஸாரின் பராமுகமான செயற்பாடுகள் முஸ்லிம்கள் மத்தியில் கடுமையான கவலைகளை தோற்றுவித்துள்ளன.

வேண்டுமென்றே சோடிக்கப்பட்ட பிரச்சினைகளை மையமாக வைத்துக்கொண்டு முஸ்லிம் வர்த்தக நிலையங்களை மூடச் செய்கின்ற அல்லது முற்றாக நிர்மூலமாக்குகின்ற நடவடிக்கைகள் முடுக்கிவிடப்படுகின்ற பின்புலத்தில் இருந்து செயற்படுகின்ற எவராயினும் அத்தகையோருக்கு எதிரான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் பொலிஸ் மா அதிபரை அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## ரம்புட்டான் சீசன்: பெற்றோருக்கு அவதானம் தேவை

### வைத்தியர்கள் ஆலோசனை

ரம்புட்டான் பழம் தொண்டையில் சிக்கி 4 வயது சிறுவனொருவன் உயிரிழந்த சம்பவம் கம்பஹாவில் இடம்பெற்றுள்ளது. இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவர் கம்பஹா இஹலயாகொட பிரதேசத்தைச் சேர்ந்த ஹிருச நெதுதுல் என்ற சிறுவனாவார். வீட்டிலிருந்த சிறுவனுக்கு அவனுடைய சகோதரர் றம்புட்டானை தோல் நீக்கி கொடுத்திருக்கிறார். அவர் அதனை உட்கொண்டபோதே தொண்டையில் சிக்கி கம்பஹா வைத்திய சாலையில் அனுமதித்த பின் சிறுவன் உயிரிழந்தான்.

இதுபோன்ற சம்பவங்கள் வருடாந்தம் இடம்பெறுகிறது. தற்போது ரம்புட்டான் பருவகாலமாக இருப்பதால் பெற்றோர் அவதானமாக இருக்குமாறு வைத்தியர்கள் ஆலோசனை கூறியுள்ளனர்.

## அமெரிக்காவில் இரண்டாவது இடத்தில் இஸ்லாம்

### வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகை

The Washington Post

இஸ்லாத்தை கடுமையாக எதிர்க்கும் நாடுகளில் முதன்மையாக திகழும் அமெரிக்காவில் இரண்டாவது மிகப் பெரிய மதமாக இஸ்லாம் மாறியுள்ளதாக அமெரிக்காவின் பிரபல பத்திரிகையான வொஷிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது. அமெரிக்க மக்கள் தொகை கணக்கெடுப்பு அதிகார சபை வெளியிட்டுள்ள புதிய தரவின்படி, இருபது அமெரிக்க மாநிலங்களில் இரண்டாவது மிகப் பெரிய மதமாக இஸ்லாம் மாறியுள்ளதை அறிய முடிகிறது.

வொஷிங்டன் போஸ்ட் தகவலின்படி, இஸ்லாம் அமெரிக்காவின் மத்திய, மேற்கு மற்றும் தென் பகுதிகளில் பாரிய வளர்ச்சியை கண்டு வருவதாக தெரிய வந்துள்ளது. அதேநேரத்தில், அமெரிக்காவில் கிறிஸ்தவர்களாக தங்களை அடையாளப் படுத்திக் கொள்ளும் அதிகமான அமெரிக்கர்கள் முஸ்லிம்களாக இருப்பதாக அமெரிக்க மத அமைப்புகளின் கூட்டமைப்பின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

## குர்ஆன் மனனப் போட்டியில் முதலிடம் உம்ரா பயண டிக்கெட் பரிசு



வெலிகம பாரி அரபுக்கல்லூரியின் 130 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அகில இலங்கை ரீதியாக நடத்திய பகுதி நேர மத்ரஸா மாணவர்களுக்கான 5 ஜுஸ்உ அல்குர்ஆன் மனனப் போட்டியில், வெலிகம ஸலாஹியா சர்வதேச பாடசாலை மாணவன் ஷஹீம் அஹமட் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

➡ 16

## 16 முஸ்லிம் எம்பீக்களின் கையெழுத்துக்கு என்ன நடந்தது?

### முஸ்லிம் புத்திஜீவிகள் அதிருப்தி

16 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்துக்கு ஒன்றரை மாதம் கடந்த நிலையிலும் ஜனாதிபதியிடமிருந்து எந்த பதிலும் முஸ்லிம் அமைச்சர்களுக்கோ, உறுப்பினர்களுக்கோ வழங்கப்பட இல்லையென கவலை தெரிவிக்கப்படுகிறது.

பொதுபல சேனா, சிங்கள ராவய மற்றும் ராவண பலய ஆகிய சில பௌத்த தீவிரவாத சக்திகளால் முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் வெறுப்பு பிரசாரங்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் வடக்கு முஸ்லிம்களுக்கு ஏற்படுத்தப்படும் மீள்குடியேற்ற அச்சுறுத்தல் தொடர்பிலும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்ட மஹஜர் ஒன்றும் கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டிருந்தது. அக்கடிதத்துக்கும் ஜனாதிபதியிடமிருந்து இதுவரை எந்த பதிலும் கிடைக்கவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், றிஷாட் பதியுதீன் ஆகியோர் கடந்த மாதம் ஜனாதிபதி தம்மை சந்தித்து முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேசவுள்ளார் என ஆளுக்காள் அறிக்கை விட்டும் இதுவரை எதுவும் நடைபெறவில்லை.




பொலன்னறுவை முஸ்லிம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் ஒன்றுகூடல் அப்பாடசாலைக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் பாடசாலை அதிபர் என்.பி.எம், இப்றாஹீம் உரையாற்றுவதையும் இந்நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படத்தில் காணலாம்.

படமும் தகவலும்: ஏ.எஸ்.எம். இஸ்ஹாக்




ஜூன் 05 உலக சூழல் சுற்றாடல் தினத்தை முன்னிட்டு கொழும்பு 10 அல்ஹிதாயா மகா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்கள் டெங்கு ஒழிப்போம் எம்மைப் பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில் பாடசாலையைச் சூழவுள்ள பகுதிகளில் பாதயாத்திரை ஒன்றை மேற்கொண்டனர். இப்பாதயாத்திரை அதிபர் திருமதி ரீ.பி.எம். ஸாஹிர் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகம்: எந்த மொழியிலும் புகார் வழங்க இலகு வழியை அறிமுகப்படுத்த வேண்டும்

## பிரதேச செயலாளர் எம்.சி. அன்சார்

சர்வதேச சிறுவர் உழைப்பு, ஒழிப்பு தினத்தையொட்டி கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகத்தின் சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி பிரி வின் ஏற்பாட்டில், சிறுவர் தொழிலாளர்கள் அற்ற சமூகத்தை கட்டியெழுப்ப ஒன்றுபடுவோம் எனும் விழிப்பூட்டும் நிகழ்வு கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் எம்.சீ. அன்சார் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள், இராணுவத்தினர், கிராமிய சிவில் சமூக சிறுவர் பாதுகாப்பு அமைப்புக்களின் அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதேச செயலாளர் எம்.சி. அன்சார் பொதுமக்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நல விடயங்களை எவ்வாறு வழங்குவது என்பது தொடர்பாகவும் அவர்களை சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக குரல் கொடுக்கச் செய்வது தொடர்பான அணுகுமுறை பற்றியும் சிறுவர் துஷ்பிரயோகங்களைக் கண்டால் இலங்கை சிறுவர் தொலைபேசி இலவச சேவையான 1929 என்ற இலக்கத்திற்கு பொதுமக்கள் தாம் பேசும் எம் மொழியிலும் தொடர்பு கொள்ளச் செய்வதற்கான இலகுவான வழியினை அறிமுகப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

# தூர சேவை பஸ்கள் நிறுத்தும் உணவகங்களின் தரத்தை மேம்படுத்த நடவடிக்கை

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

தூர சேவை பஸ்கள் உணவிற்காக நிறுத்தும் உணவகங்களின் தரத்தை மூன்று மாதகாலத்தினுள் மேம்படுத்துமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுத் தலைவர் ரேணுக பெரேரா உணவக உரிமையாளர்களுக்கு பணித்துள்ளார். தவறும் உணவகங்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

சுகாதார அமைச்சு மேற்கொண்ட கணிப்பீட்டின்படி தூர சேவை பஸ்கள் நிறுத்தும் உணவகங்கள் 'சீ' தரத்தில்தான் உள்ளன. இது மிகவும் குறைந்த தரமாகும். பயணிகளுக்கு சுத்தமான, தரம் கூடிய உணவு வகைகளை வழங்க வேண்டும். மலசலகூட வசதிகளும் உரிய தரத்தில் இருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# பிரதேச செயலாளர் குறித்து மக்கள் குழப்பமடையத் தேவையில்லை என்கிறார் ஹரீஸ்

எஸ்.எம்.எம். றம்ஸான்



கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்திற்கு பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டமை தொடர்பில் பொதுமக்கள் குழப்பமடையத் தேவையில்லை.

அதனை இலகுவாக தீர்த்துக் கௌ்ளும் சக்தி எம்மிடமுள்ளது என திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கல்முனைத் தொகுதி அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்திற்கு மகா ஓயா பிரதேச செயலாளர் மொகான் விக்ரம ஆராச்சியை நியமித்தது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்;

கல்முனை முஸ்லிம் பிரதேச செயலாளர் பிரிவுக்கான பிரதேச செயலாளர் நியமனத்தை எங்களுடன் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு கலந்தாலோசிக்காமல் செய்துள்ளது. இவ்விடயம் குறித்து கல்முனைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு தலைவர் என்ற ரீதியில் நடவடிக்கை எடுத்துள்ளேன்.

கல்முனை பிரதேசம் நூறு வீதம் தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசமாகும். இப்பிரதேச நிர்வாகக் கடமையினை பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த ஒருவரினால் மேற்கொள்ள முடியாது.

➡ 17

# முஸ்லிம் மீடியா போரத்தின் 19 ஆவது வருடாந்த மாநாடு

எம்.ரீ.எம். பாரிஸ்

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 19 ஆவது வருடாந்த மாநாடு இம்மாதம் ஜூன் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.20 மணிக்கு தேசிய நூதனசாலையின் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம அதிதியாக இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சிய தூதுவர் அப்துல்ஹமீட் அப்துல் பதாஹ் கே. அல் முல்லாஹ் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது தகவல் அறியும் சட்ட மூலம் தொடர்பில் கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் பீடாதிபதி வி.டி. தமிழ் மாறன் சிறப்புரையாற்றவுள்ளார்.

இந்த நிகழ்வின் இறுதியில் அடுத்த வருடத்திற்கான புதிய நிரவாகிகள் தொரிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளராக முஹம்மத் சப்ராஸ்



பறகஹதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த எம்.எஸ். முஹம்மத் சப்ராஸ் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளராக நியமனம் பெற்றுள்ளார். இலங்கை நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையில் கடந்த 2012 ஆம் ஆண்டு தோற்றி திறமைச் சித்தி பெற்று ஒருவருட கால பயிற்சிநெறியின் பின்னர் , பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் குருணாகல் மாவட்ட திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளராக நியமனம் பெற்றதுடன் இத்திணைக்களத்தின் மூலம் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் அனைத்து அபிவிருத்தி திட்டங்களுக்கும் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

வயம்ப பல்கலைக்கழகத்தில் விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட இவர், பின்னர் பட்டப்படிப்பை பேரா தெனிய பல்கலைக்கழகத்தில் நிறுவன முகாமைத்துவப் பிரிவின் கீழ் தொடர்ந்தார். மேலும் சந்தைப்படுத்தல் டிப்ளோமா போன்ற இதர கற்கை நெறிகளையும் பூர்த்தி செய்துள்ள இவர், முஹம்மது சப்வான் - சோஹறாரா உம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல் வராவார்.


# தமிழ் பேசுவோருக்கு சிங்களமும் சிங்களவர்களுக்கு தமிழும் படிப்பிக்க வேண்டும்

## கட்டளைத் தளபதி உதய பெரேரா

தமிழ்மொழிச் சகோதரர்களுக்கு சிங்களமொழியையும் சிங்கள மொழிச் சகோதரர்களுக்கு தமிழ் மொழியையும் கற்றுக்கொடுக்க வேண்டும் என யாழ் மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி உதய பெரேரா தெரிவித்தார்.

தமிழ்மொழி பயிற்சியில் தேர்ச்சி பெற்ற இராணுவ வீரர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு காங்கேசன்துறையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எல்லோரும் ஒன்றாக, ஒற்றுமையாக வாழ்வதற்கு மொழி கட்டாயமானது. அந்த வகையில், நாங்கள் பரஸ்பரம் மொழிகளை கற்றுக்கொள்ள வேண்டும். தமிழ் மொழி மூல பயிற்சிநெறியை சில இராணுவ வீரர்கள் கற்றுத் தேர்ந்துள்ளார்கள். சில வீரர்கள் இப்பாடத்தை சரியாக முடிக்க வில்லை. உங்களால் முடியாதது ஒன்றுமில்லை. உங்களாலும் தமிழ்மொழியை கற்க முடியும். தமிழ்மொழி கற்பது இலகுவானது. நாட்டிலுள்ள மும்மொழிகளில் தமிழ், சிங்களம் கட்டாயமானதாகும். கட்டாயம் நீங்கள் தமிழ்மொழியை கற்றுக்கொள்ள வேண்டும் என்று இராணுவத்தினரை கேட்டக்கொள்கிறேன். சிங்கள மக்களிடமும் கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று தமிழ் பேசும் மக்களும் சிங்கள மொழியை கற்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் பாணந்துறைக் கிளை மற்றும் செரண்டிப் நிவாரணம் அபிவிருத்திக்குமான அமைப்பு (SFRD) ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்ட வெள்ள நிவாரணப் பணிகள் களுத்துறை மாவட்ட வியங்கல்ல பகுதியில் இடம்பெற்றன. இதன்போது வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகள், பௌத்த விகாரைகள் சுத்தம் செய்யப்படுவதையும் பொதுக் கிணறுகள் சுத்திகரிக்கப்படுவதையும் படத்தில் காணலாம்.

பாணந்துறை கிளையின் பொறுப்பாளர் ஆசிர் மக்பூலின் தலைமையில் இச்செயற்திட்டம் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

படமும் தகவலும்: ஹஸன் இக்பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தேசம்

மலர் : 13 இதழ் : 12 ஜுன் 15 - 30



77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு- 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com


## வம்புக்கிழுக்கும் வன்முறைகளுக்கு அறிவுபூர்வமான முன்னெடுப்பு வேண்டும்

அண்மைக்காலமாக பெரும்பான்மை சமூகத்தின் தீவிரவாதக் குழுக்களால் இலங்கை முஸ்லிம் சமூகத்தைக் குறிவைத்து அரங்கேற்றப்படும் வன்முறைகள், தாக்குதல்களை நாம் அறிவோம். இவைகளின் பின்னணியில் யூத, ஹிந்துத்துவ அமைப்புகளின் கரம் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இஸ்ரேல் பல கோடி ரூபாய்களை இந்தியாவின் ஹிந்துத்துவ அமைப்புகளுக்கும் இலங்கையின் பௌத்த தீவிரவாத அமைப்பொன்றுக்கும் நோர்வேயூடாக வழங்கியதாக பிரபல சிங்கள பத்திரிகையின் கட்டுரையொன்று கூறியது. நோர்வே, இஸ்ரேல், இந்தியா என்ற முக்கோண அமைப்பை சதுர வடிவமாக்கி இலங்கையும் இணைக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகின. பௌதீக ரீதியான தாக்குதல்கள், பொருளாதாரத்தை இலக்குவைத்த தாக்குதல்கள், கல்வி மற்றும் தொழில்சார் முன்னேற்றங்களைக் குறிவைத்த முன்னெடுப்புகள், மொத்த சமூகத்தையும் ஒருவகைப் பீதிக்குள் இழுத்துத் தொல்லை கொடுக்கும் காரியங்கள் என்று இவற்றின் வீச்செல்லை நீண்டுகொண்டே செல்கிறது.

மதுரை மாநகரில் பல அசம்பாவிதங்கள் நடந்துவிட்டன. அங்குள்ள முஸ்லிம் வர்த்தக நிலையங்களைக் குறிவைத்தே அவை பெரும்பாலும் நடத்தப்பட்டுள்ளன. கடைக்குள் வந்த யுவதிகளை வீடியோ எடுத்தார்கள் என்பது அப்படியொரு சம்பவத்துக்கான காரணமாகக் கூறப்பட்டது. சீ.சீ.ரீ.வி. கெமராவை இயக்கிப் பார்த்தபோது அப்படியொரு நிகழ்ச்சி நடக்கவேயில்லை என்று தெரிந்தது. ஆனால் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாடுகள், தடுப்புக்காவல் என்று தொல்லைகள் தொடர்கின்றன. ஊர்வலத்தைப் படம்பிடிக்க வந்த குற்றச்சாட்டில் 15 வயது பாடசாலைச் சிறுவன் ஒருவன் காடையர்களால் தாக்கப்பட்டான். இவ்வளவுக்கும் அவனிடம் கெமராக்கூட இருக்கவில்லை. அவன் செய்த குற்றம் தொப்பியணிந்திருந்ததுதான். அவன் பள்ளிவாசலிலிருந்து வீட்டுக்குப் போகும் வழியில் தீவிரவாதிகளின் ஊர்வலம் குறுக்கிட்டுள்ளது. அந்தச் சிறுவன் தனது சொந்த வீட்டை நோக்கி வழமையான பாதையில் பயணம் செய்திருக்கிறான். அவனைத் தாக்கியவர்களது பெயர் விபரம், முச்சக்கர வண்டி இலக்கம் போன்றவை பொலிஸாரிடம் வழங்கப்பட்டும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை என்று கூறப்படுகின்றது. இத்தனைக்கும் சிறுவன் தாக்கப்படும் போது பொலிஸார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.


இப்படி, எத்தனையோ நிகழ்வுகள் இந்த நாட்டின் சட்டத்தை மீறும் செயல்கள், இன நல்லுறவைச் சீரழிக்கும் முன்னெடுப்புகள், மத நிந்தனை முயற்சிகள் என்பவை நாட்டின் சமாதானத்தையும் ஒழுங்கையும் அப்பட்டமாக மீறும் செயற்பாடுகள். ஆனால் சட்டமும் நீதியும் இந்நாட்டின் சிறுபான்மையினருக்கு எட்டாத கனிகளாகவே ஆக்கப்பட்டுள்ளன. திட்டமிட்டு நுணுக்கமாக மேற்கொள்ளப்பட்ட எத்தனையோ கொலை, கொள்ளைச் சம்பவங்களை மிகக் குறுகிய காலத்தில் கண்டுபிடித்து சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்தும் வல்லமை கொண்ட ஒரு பொலிஸ்துறை இலங்கையில் உள்ளது. ஆனால் அது முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல் விடயத்தில் மௌனம் சாதிக்கிறது. அதற்குப் பொறுப்பான அமைச்சுகள், அரச நிறுவனங்கள் என்றும் நடவாதது போல் செயற்படுகின்றன.

முஸ்லிம்களை குறிவைத்துத் தாக்கும் இவற்றின் நோக்கம் என்னவாகவும் இருக்கலாம்.

1915 இல் முஸ்லிம்களுக்கு எதிராக நடந்த கலவரத்தின் நூற்றாண்டை விட, பாரிய கலவரமொன்றின் மூலம் கொண்டாட எடுக்கப்படும் முயற்சிகளாகவும் முஸ்லிம்களை வீணாக வம்புக்கிழுத்து வன்முறையில் இறக்கி அவர்களின் பொருளாதாரத்தை அழித்தொழிக்கும் சதி முயற்சியின் முன்கட்ட நடவடிக்கைகளாகவும் இருக்கலாம். அல்லது இதைவிடப் பாரதூரமான நோக்கங்களும் இருக்கலாம். எதுவாயினும் முஸ்லிம்கள், முஸ்லிம் இளைஞர்கள், இதுவரை கடைபிடித்த பொறுமையை, சகிப்புத்தன்மையை தொடர்ந்து கடைபிடிப்பதன் மூலமும் அறிவுபூர்வமான நடவடிக்கை மூலமே இவற்றை வெல்லலாம்.




## சொல் வெட்டு





விசாரணை விடயத்தை பாராளுமன்றத்தில் முன்னிறுத்தி பெரும்பாலான மக்களுக்கு ஒத்துழைப்பதில் விருப்பம் கிடையாது எனக் காட்டவே முற்படுகிறது, அரசாங்கம்.

**– சுமந்திரன் எம்.பி.**

18 ஆம் திருத்த மசோதாவை அன்றுக் காலையில் சமர்ப்பித்து, பகலில் பேசி, மாலையில் சட்டமாக்கிய தினத்திலேயே பாராளுமன்றத்தின் மகிமை செத்துவிட்டதே.



இனவாதிகளுக்கு இலஞ்சமாக அமைச்சர் பதவி வழங்கும் யாப்பை ஜே.ஆர். ஜெயவர்தனாவே அறிமுகப்படுத்தினார்.

**– அமைச்சர் விமல்வீரவன்ச**

நாட்டிலிருந்தது பயங்கரவாதப் பிரச்சினை ஒன்றுதான். அதுதான் தீர்ந்துவிட்டது. இப்போதைக்கு 13 ஆவது திருத்தம், அரசியல் பகிர்வு என்பதெல்லாம் அவசியமற்றது எனக் குரல் கொடுத்தவர்களும் இனவாதிகள்தானே?



வடக்கிலும் கிழக்கிலும் காணப்படும் இராணுவ மயமாக்கலே பெண்கள் பாதுகாப்பற்ற நிலைக்கு காரணமாகும்.

**– ஐ.நா.**

புலிப் பயங்கரவாதம் தலைதூக்கப்படுவதற்கு தமிழ்ப் பெண்கள் மீதான வன்முறைகளும் ஒரு காரணமாயிருந்தது.



மஹிந்த தேரரினால் கொண்டுவரப்பட்ட பௌத்த போதனைகளை விட நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு வேறு போதனைகள் கிடையாது.

**– மஹிந்த ராஜபக்ஷ**

இயலுமான வரைக்கும் இந்த போதனைகளை நீங்கள் பயன்படுத்தி இருக்கலாம்...?



இந்தியாவையும் சர்வதேச விசாரணையையும் ஏக நேரத்தில் எதிர்த்தால் அரசாங்கத்திற்கு பாரதூரமான விளைவுகளே ஏற்படும்.

**– கலாநிதி தயான் ஜெயதிலக**

ஒரு கொலையை மறைப்பதற்கு ஒன்பது கொலைகள் புரிவது போன்றதுதான் தமது இலங்கை அரசாங்கத்தின் நிலையும்.



சுட்ட மண்ணும் சுடாத மண்ணும் சேராது.

**– முதலமைச்சர் விக்னேஸ்வரன்**

கவலைப்படத் தேவையில்லை. மக்களின் அபிலாஷைகளை உதாசீனம் செய்து, சுயநலத்துடன் வாழும் தலைவர்களை மக்கள் விரைவில் வீட்டுக்கு அனுப்பிவிடுவார்கள்.


**எங்கள் தேசம் சந்தா விபரம்**

உள்நாடு: தனிப்பிரதி: 30.00 / வருட சந்தா: 1200.00 / ஆறு மாதங்கள்: 600.00

வெளிநாடு: இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்: 3600.00 / மத்திய கிழக்கு நாடுகள்: 3750.00 / அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4700.00 / இங்கிலாந்து: 5750.00, அமெரிக்கா, கனடா: 6900.00, ஜப்பான்: 4800.00

எங்கள் தேசத்துக்கு காசுக்கட்டளை அனுப்ப விரும்புபவர்கள்: காசுக்கட்டளை பெறுவோர், Engal Thesam, தபால் நிலையம் Dematagoda எனவும் குறிப்பிட்டு அனுப்பவும். முகவரி: 77, Dematagoda Road, Colombo - 09

Accont Name: SLJEI | Bank Account No. BOC 72132 | Commercial Bank: 1320009182

தொடர்புகளுக்கு: 077 2992220


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றிய கல்முனை பிரதேச செயலாளர் விவகாரம்

ஏ. முஹம்மத் பாயிஸ்

கல்முனைப் பிரதேசம் கிழக்கு முஸ்லிம்களின் முக வெற்றிலை என்று கூறும் அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரதேசமாகும். இங்கு அண்மைக்காலமாக கல்முனைத் தமிழ் பிரதேச செயலகம் தரமுயர்த்தல் தொடர்பில் மூவின மக்களுக்கிடையிலும் கருத்து முரண்பாடு நிலவி வருகிறது.

கல்முனை, முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு பிரதேசம். இப்பிரதேசத்திலுள்ள மூவின மக்களின் நிருவாக விடயங்களைக் கவனிப்பதற்காக மிக நெடுங்காலமாக ஒரு பிரதேச செயலகமே இயங்கி வந்தது. பின்னர், அரசியல் நீரோட்டத்தில் தமிழ் மக்களின் நிர்வாக விடயங்களைக் கவனிப்பதற்காக மேலதிகமாக தமிழ் பிரிவு பிரதேச செயலகம் ஒன்றும் உருவாக்கப்பட்டது.

கல்முனையில் முஸ்லிம்களுக்கென்றும் தமிழ் மக்களுக்கென்றும் இரண்டு பிரதேச செயலகங்கள் இயங்கி வருகின்ற நிலையில், தமிழ் பிரிவு பிரதேச செயலகம் முழு அதிகாரம் வழங்கப்பட்ட தனியான பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை மிக சமீப காலமாக தமிழ் மக்களிடத்திலிருந்து முன்வைக்கப்பட்டு வருகிறது.

இக்கோரிக்கை தொடர்பில் முஸ்லிம் மக்களிடத்தில் உடன்பாடு காணப்படாத நிலையுள்ளது. ஏனென்றால், கல்முனை தமிழ் பிரிவுக்கான எல்லை முஸ்லிம் பிரிவுகளிற்குள்ளும் ஊடறுத்து செல்வதே முஸ்லிம்கள் தமிழ் மக்களின் கோரிக்கையில் முரண்படுவதற்கு காரணமாகும். கல்முனையில் தமிழ் பிரிவு பிரதேச செயலகம் தரமுயர்த்தப்பட வேண்டும் என்ற விடயத்தில் இதனோடு சம்பந்தப்படாத சிங்கள அமைச்சர்கள் சிலரினது தூண்டுதல்களும் பின்புலங்களும் இருந்தன என்றும் இரண்டு இனங்களிடத்திலும் ஏற்படுகின்ற முரண்பாட்டில் குளிர்காயும் நோக்குடன் அவர்களது அத்தகைய செயற்பாடுகள் அமைந்ததாகவும் மக்களிடத்தில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.




இந்நிலையில் இன்னுமொரு விடயமும் இங்கு பூதாகரமெடுத்துள்ளது. கல்முனை வரலாற்றில் ஒரு சிங்கள சகோதரர் பிரதேச செயலாளர் நியமிக்கப்படாத நிலையில் மொஹான் விக்ரம ஆராச்சி என்பவர் நியமிக்கப்பட்டு கடந்த 09 ஆம் திகதி அவர் கடமையினைப் பொறுப்பேற்றுள்ளார். இப்பிரதேச செயலாளர் நியமனம் தொடர்பில் கல்முனை முஸ்லிம் பிரிவு மக்களிடையே அதிருப்தி காணப்படுகின்றது. தமிழ் மொழியில் பரீட்சயமில்லாத இந்தப் பிரதேச செயலாளர் எப்படி இம்மக்களுடன் கடமையின் நிமிர்த்தம் தொடர்பாடலை மேற்கொள்ளப் போகிறார் என்பது ஒரு சவாலாகவே அமைந்துள்ளது.

கல்முனை பிரதேச செயலகத்தில் ஏற்கனவே பிரதேச செயலாளராக கடமையாற்றிய எம்.எம்.எம். நௌபல் என்பவருக்கும் அப்பிரதேச பாராளுமன்ற உறுப்பினர் ஒரு வருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாகவே அவர் இடம் மாற்ற பட்டதாக கதை அடிபடுகிறது. அவருடைய இடத்திற்கே இந்தப்புதிய பிரதேச செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த பிரதேச செயலாளர் நியமனம் தொடர்பில் கல்முனை முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்டிருக்கின்ற அதிருப்தி குறித்து கல்முனைப் பாராளுமன்ற உறுப்பினரான எச்.எம். எம். ஹரீஸ் கருத்துத் தெரிவிக்கவில்லை. கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்திற்கு பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டமை குறித்து மக்கள் குழப்பமடையத் தேவையில்லை. அதனை இலகுவாகத் தீர்த்துக்கொள்ளும் சக்தி எம்மிடமுள்ளது என்று. பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்திருப்பது ஒரு புறமிருந்தாலும் இந்நியமனத்தை ஆரம்பத் திலேயே இவர்களால் தடுக்க முடியாமல் போனதுதான் மக்களிடத்தில் விமர்சனத்துக்குரிய விடயமாக மாறியுள்ளது. முஸ்லிம் காங்கிரஸினால் கல்முனைக் கரையோர மாவட்டம் கோரிவருகின்ற நிலையில், கல்முனை முஸ்லிம் பிரிவில் ஒரு பெரும் பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரின் நியமனம் என்பது அக்கோரிக்கையையும் கேள்விக் குறியாகியுள்ளது.

இலங்கையில் இனப்பிரச்சினை தலைத் தூக்குவதற்கு மொழிப் பிரச்சினை பிரதான காரணமாக அமைந்துள்ளது. அத்தோடு பொதுமக்கள் அரசின் பொதுத்துறை நிர்வாகங்களில் தமது கடமைகளை நிறைவு செய்வதில் மொழிப் பிரச்சினையால் பெரிதும் சிரமப்படுகிறார்கள். வட கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் அரச கரும மொழியாக சிங்களமொழி காணப்படுவதால் தமிழ்மொழியை தாய் மொழியாக கொண்ட மக்கள் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். அத்தோடு வடகிழக்கிலும் சிலபோது ஆவணங்கள் சிங்கள மொழி மூலமாக அனுப்பப்படுவதால் அரச ஊழியர்களும் மக்களும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

➡ 16

# தேசிய ரீதியில் சமூக ஒற்றுமை மற்றும் சகவாழ்வை கட்டியெழுப்புவதற்கான செயலமர்வு

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் ஒத்துழைப்பிற்கும் ஒருங்கிணைப்பிற்குமான கவுன்ஸிலின் (Council for Cooperation and Coordination- CCC) ஏற்பாட்டில் தேசிய ரீதியில் சமூக ஒற்றுமை மற்றும் சகவாழ்வைக் கட்டியெழுப்புவதற்குமான செயலமர்வு அண்மையில் தெஹிவளை முஹைதீன் பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெற்றது.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள், பத்வாக்குழு உறுப்பினர்கள், ஒத்துழைப்பிற்கும் ஒருங்கிணைப்பிற்குமான கவுன்ஸிலின் அங்கத்தவர்கள், ஜம்இய்யதுல் உலமாவின் அனைத்து மாவட்டக் கிளைகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட ஆலிம்கள், துறைசார்ந்தவர்கள், விசேட பிரதிநிதிகள் என 250 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இந்நிகழ்வு, மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை நடைபெற்றது.

இந்நிகழ்வின் வரவேற்புரையை அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் முபாரக் அவர்கள் நிகழ்த்தினார்.

செயலமர்வு நடத்தப்படுவதன் பின்னணியையும் நோக்கத்தையும் தெளிவுபடுத்திய மௌலவி முபாரக் அவர்கள், சமூக ஒற்றுமையும் சகவாழ்வும் காலத்தின் தேவை என்பதை இரத்தினச் சுருக்கமாக விளக்கினார்.

தொடர்ந்து ஒத்துழைப்பிற்கும் ஒருங்கிணைப்பிற்குமான கவுன்ஸிலின் செயலாளரும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பிரதித் தலைவர்களுள் ஒருவருமான அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் அவர்கள், 2008 இல் ஒத்துழைப்பிற்கும் ஒருங்கிணைப்பிற்குமான கவுன்ஸில் உருவாக்கப்பட்டதன் பின்னணி, அதனது கடந்தகால செயற்பாடுகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் என்பவற்றை விலாவாரியாக விழக்கியதோடு சமூக ஒற்றுமை மற்றும் சகவாழ்வைக் கட்டியெழுப்புவதில் ஆலிம்கள், துறைசார்ந்தவர்களின் வகிபாகம் குறித்தும் தெளிவுபடுத்தினார்.



அதனைத் தொடர்ந்து சமூகமளித்தவர்கள் நான்கு பிரதான குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர்.

01. தேசிய மட்டத்தில் சமூக ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கான சவால்களை அடையாளம் காணலும் தீர்வுகளை முன்வைத்தலும்.

02. தேசிய மட்டத்தில் சகவாழ்வைப் பாதிக்கும் அச்சுறுத்தல்களை அடையாளம் காணலும் தீர்வுகளை முன்வைத்தலும்.

03. பிராந்திய மட்டத்தில் சமூக ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கான சவால்களை அடையாளம் காணலும் தீர்வுகளை முன்வைத்தலும்.

04. ரமழானில் சமூக ஒற்றுமையையும் சகவாழ்வையும் பேணுவதற்கான வழிகாட்டல்களை வகுத்தல்.

ஆகிய தலைப்புகளில் குழுக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. பிராந்திய மட்டத்தில் சமூக ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கான சவால்களை அடையாளம் கண்டு தீர்வுகளை முன்வைப்பதற்கான குழு வடக்கு - கிழக்கு, வடமேல், மத்திய மாகாணம், மேல், தென் மாகாணம் என ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அப்பகுதிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

லுஹர் தொழுகையைத் தொடர்ந்து அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் றிஸ்வி முப்தி அவர்கள் சமூக ஒற்றுமை மற்றும் சகவாழ்வைக் கட்டியெழுப்புதலும் இறை தொடர்பும் எனும் தலைப்பில் உருக்கமான உரையொன்றை நிகழ்த்தினார்.

கலந்துரையாடி சமர்ப்பிக்கப்பட்ட சகல முன்மொழிவுகளும் தீர்வுகளும் பரிசீலிக்கப்பட்டு, உடனடியாக தட்டச்சு செய்யப்பட்டு மாவட்ட பொறுப்பாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. மட்டுமன்றி, ஜம்இய்யதுல் உலமாவின் ஒத்துழைப்பிற்கும் ஒருங்கிணைப்பிற்குமான கவுன்ஸிலினால் ஏலவே நாட்டின் பல பாகங்களிலும் விநியோகிக்கப்பட்ட ஒற்றுமைப் பிரகடனம் காலத்தின் தேவை கருதி மீண்டும் சுமார் 3000 பிரதிகள் மீள்பிரசுரம் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

நிகழ்வின் முடிவில் ஒத்துழைப்பிற்கும் ஒருங்கிணைப்பிற்குமான கவுன்ஸிலுக்கு 16 பேர் கொண்ட அமுலாக்கல் குழு (Working Committee) நியமிக்கப்பட்டு, நிகழ்வில் பங்கேற்ற அனைவரும் ஒத்துழைப்பிற்கும் ஒருங்கிணைப்பிற்குமான கவுன்ஸிலின் பொது அங்கத்தவர்களாக பிரகடனம் செய்யப்பட்டதுடன் ஆலோசனைக்குழு ஒன்றும் நியமிக்கப்படுவதற்கான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டமை நிகழ்வின் விசேட அம்சங்களாகும்.

இந்நிகழ்வு இரண்டு மணியளவில் துஆவுடன் நிறைவு பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய ஷூரா சபையின் சகவாழ்வுக்கான நிகழ்சித்திட்டம்

முஸ்லிம் சமூகம் பரந்த நோக்கில் சிந்திப்பதற்கும் தூரநோக்குடன் செயற்படுவதற்குமான நாடளாவிய வழிகாட்டல் நிகழ்ச்சியில், மாவட்டத்துக்கான வழிகாட்டல் நிகழ்ச்சி கண்டி தஸ்கர மஸ்ஜிதுன் நூர் ஜும்முஆ பள்ளி வாசலில் நடைபெறவுள்ளது.

முஸ்லிம் சமூகம் பரந்த நோக்கில் சிந்திப்பதற்கும் தூரநோக்குடன் செயற்படுவதற்குமான நாடளாவிய ரீதியான வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை தேசிய ஷூரா சபை நடத்தி வருகின்றது. இந்நிகழ்ச்சித் திட்டத்தில் முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டுள்ள சவால்கள்களும் அவற்றின் பின்னணிகள் மற்றும் சகவாழ்வுக்கான வழிகாட்டல் எனும் பிரதான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் கண்டி மாவட்டத்தின் அனைத்து மஸ்ஜித்களினதும் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள் உட்பட உலமாக்கள், ஆசிரியர்கள், துறைசார் நிபுணர்கள், அரச சேவை உத்தியோகத்தர்கள், இஸ்லாமிய மற்றும் சமூக சேவை அமைப்புக்களின் பிரதிநிதிகள், முஸ்லிம் வியாபாரிகள் மற் றும் சமூக நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# உரியமுறையில் வடிகான்கள் பராமரிக்கப்படவில்லை

## பிரதேசசபை உறுப்பினர் அதிருப்தி

மட்டக்களப்பு பிரதேசத்தை ஊடறுக்கும் பிரதான வீதியின் இருமருங்கிலும் காணப்படும் கால்வாயில் நீர் தேங்கி நிற்பதால், டெங்கு உட்பட பல்வேறு சுகாதார பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் மாவட்ட அபிவிருத்திக்கு பல்வேறு நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய இவ்வடிகான் புனரமைப்பு வேலைகள் புறந்தள்ளப்பட்டு வருவது கவலையளிக்கின்றது.

இப்பிரச்சினை தொடர்பில் கடந்த பெப்ரவரி மாதம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு நேரடியாக விஜயம் செய்து பிரதான பொறியியலாளரிடம் முறைப்பாடு செய்தபோது, ஒரு மாத அவகாசம் கோரியிருந்தார். ஆனாலும் ஜூன் மாதம் ஆரம்பமான நிலையிலும் எவ்வித பதில் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என ஓட்டமாவடி பிரதேச சபை உறுப்பினர் ஏ.எல். ஜுனைட் (நளீமி) தெரிவித்துள்ளார்.

# கல்முனை பிரதேச செயலகத்திற்கு பெரும்பான்மையைச் சேர்ந்தவர் செயலாளராக நியமனம்

எஸ்.எம்.எம். றம்ஸான்

கல்முனை முஸ்லிம் பிரதேச செயலக வரலாற்றில் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தகள் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டதில் கல்முனை மக்களிடத்தில் அதிருப்தி காணப்படுகிறது.



கல்முனை முஸ்லிம் பிரிவுக்கான பிரதேச செயலாளராக மொஹான் விக்ரம ஆராச்சி கடமைகளை பொறுப்பேற்றார்.

உடனடியாகச் செயற்படும் வண்ணம் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு இந்நியமனத்தை வழங்கியுள்ளது.

கல்முனை பிரதேச செயலாளராக இருந்த எம்.எம்.எம். நௌபல் அம்பாறை கச்சேரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதன் பின்னர், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஐ.எம். ஹனீபா கல்முனை பிரதேச செயலகத்தின் பதில் பிரதேச செயலாளராக கடமையாற்றிய நிலையிலேயே இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மொஹான் விக்ரம மகோயா பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிவிட்டு கல்முனை பதில் பிரதேச செயலாளர் ஐ.எம். ஹனீபா அவர்களிடமிருந்து பொறுப்புக்களை கையேற்றார்.

புதிய பிரதேச செயலாளரை பிரமுகர்கள் பலரும் வாழ்த்தி வரவேற்றனர்.

# மூதூரில் கற்றல் செயலமர்வு

மூதூர் முறாசில்

மூதூர் கல்வி அபிவிருத்தி ஒன்றியம் முஸ்லிம் எயிட் நிறுவனத்தின் அனுசரணையில் மாணவர்களை ஊக்குவித்து அவர்களின் கற்றல் செயற்திறனை விருத்தி செய்யும் நோக்கில் செயலமர்வொன்றை நடத்தியது.

அமைப்பின் தலைவர் டாக்டர் என்.எம். ஹஸ்ஸாலி தலைமையில் மூதூர் அந்நஹார் மகளிர் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற இச்செயலமர்வில், டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ், அஷ்ஷெய்க் எம்.ரி.எம். ஸப்ரி நளீமி, எம்.எம். ஜஸீர், எம்.எம். றியாஜ் அகமட் ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டனர்.

மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த க.பொ.த சாதாரண மற்றும் உயர்தரத்தில் கல்விகற்கும் 350 மாணவர்கள் இச்செயலமர்வில் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.



பாலமுனை அல் அறபா விளையாட்டுக் கழகத்தின் 21 வது ஆண்டு நிறைவையொட்டி கழகத்தினால் நடத்தப்பட்ட மின்னொளி மென்பந்து கிரிகெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இறுதிப்போட்டியில் வெற்றி பெற்ற பாலமுனை அல் அறபா விளையாட்டுக் கழகத்திற்கான வெற்றிக் கிண்ணத்தை நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் அணித் தலைவரிடம் வழங்குவதையும் கௌரவ அதிதியாகக் கலந்துகொண்ட கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.எம். நசீர் மற்றும் பிரதேச சபை தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ. அன்ஸில் ஆகியோர் வெற்றி பெற்ற அணிக்குரிய பண வவுச்சரை வழங்கி வைப்பதையும் அருகில் உதவி தவிசாளர் ஏ.எல். அமானுல்லா, பாலமுனை மத்திய குழுவின் செயலாளர் எம். சதாத் உள்ளிட்டோர் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# மஹ்பலுல் உலமா அரபுக்கல்லூரியின் விசேட கருத்தரங்கு




தெல்தோட்டை மஹ்பலுல் உலமா அரபுக்கல்லூரி எதிர்வரும் 2015 ஆம் ஆண்டில் 40 வருடங்களை பூர்த்தி செய்ய இருப்பதை முன்னிட்டு நடைபெற்ற விசேட கருத்தரங்கும் தெல்தோட்டை பிரதேச கல்வி மற்றும் சமூக அபிவிருத்தியில் சமூகப் பொறுப்பை உறுதி செய்தல் எனும் முழுநாள் செயலமர்வொன்றும் விளையாட்டு அமைச்சின் ரோஸ் கோஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கு தெல்தோட்டை மஹ்பலுல் உலமா அரபுக்கல்லூரியின் பணிப்பாளர் மௌலவி ஏ.ஆர். அப்துல் ரசாக் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதேச அபிவிருத்தியில் சமூக பங்களிப்பை உறுதி செய்தல் என்ற தலைப்பில் வளவாளர் சாபீர் மொஹமட் ஹாசீம் உரையாற்றினார். 40 ஆண்டு நிறைவும் பிரதேச அபிவிருத்தியும் என்ற தலைப்பில் தேசிய சூரா கவுன்ஸிலின் செயலாளர் இஸ்மாயில் அஸீஸும் இஸ்லாத்தின் பார்வையும் சமூக ஈடுபாடு என்ற தலைப்பில் ஜாமிஆ நளீமியாவின் சிரேஸ்ட விரிவுரையாளர் எஸ்.எச்.எம் பழீலும் விரிவுரையாற்றினர்.

இந்நிகழ்வில் அரபுக்கல்லூரியின் பழைய மாணவர்கள், ஊர் பிரமுகர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டதுடன் இக்கல்லூரியை அபிவிருத்தி செய்வதற்கான கலந்துரையாடல்களும் நடைபெற்றன.

படமும் தகவலும்: அஸ்ரப் ஏ. சமத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அரசியல் பார்வை

# பொது வேட்பாளர் கனவு முடிவில் வெறுமைதான் விஞ்சும்?



எம்.எச்.எம். ஹஸன்


நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை இலங்கையில் செயற்படத் தொடங்கி முப்பத்தேழு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் ஐக்கிய தேசியக் கட்சி 17 ஆண்டுகளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான கூட்டணி 20 வருடங்களும் ஜனாதிபதி பதவியை அனுபவித்துள்ளன. ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ ஓர் அசாதாரண சூழ்நிலையில் விடுதலைப் புலிகளால் கொலை செய்யப்பட்டமையும் அப்போது இலங்கையில் நிலவிய சமூக பொருளாதார பாதுகாப்பு நிலைமைகளும் காரணமாக மிகக் குறைந்த பெரும்பான்மையுடன் சந்திரிகா பண்டாரநாயக்கா பிரதமராகப் பதவியேற்றமையால் ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அது முதல் இன்றுவரை இரண்டு தசாப்தங்கள் கடந்தும் மாற்று அரசாங்கமொன்றைக் கொண்டுவரும் நிலைமைகள் வெறும் ஆர்வங்களாகவே காணப்படுகின்றன. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையில் இயல்பை விளங்கிக்கொள்ள இந்த ஒரு சான்றே போதுமானது. மக்களின் ஜனநாயக உரிமையை உரசிப் பார்க்கும் நிலை அல்லது அரசாங்கத்தை மாற்றும் நிலை பொது மக்களில் இருந்து, அதாவது வாக்காளர் பெருமக்களிலிருந்து, எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்பதை இதன் மூலம் விளங்கிக்கொள்ள முடியும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையில் தனியொருவரின் மித மிஞ்சிய அதிகாரத்தைக் கட்டுப்படுத்தவென 1978 அரசியல் யாப்பில் இருந்த முக்கிய இரண்டு விடயங்கள் 17 வது யாப்புத் திருத்தம் மூலம் நீக்கப்பட்டுள்ளன. இரண்டு தடவைகளுக்கு மேல் ஒருவர் ஜனாதிபதியாக பதிவிவகிக்க முடியாது என்பதும் சுதந்திர ஆணைக்குழுக்களின் கீழ் தேர்தல் நீதி பரிபாலனம் பொதுச் சேவைகள் ஒரு சுதந்திர ஆணைக்குழு மூலம் நிர்வகிக்கப்படுதல் என்பனவே அந்த இரண்டுமாகும்.

மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் மூன்றாம் தடவையும் ஜனாதியாகும் செயற்திட்டத்தை மிகக் கவனமாக நகர்த்தி வருவது தெரிகிறது. அரசாங்கம் அண்மைய தேர்தல்களில் பெற்ற வாக்கு எண்ணிக்கை மற்றும் அரசாங்கத்தின் கூட்டுச் சேர்த்துள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், தேசிய விடுதலை முன்னணி, ஜாதிக ஹெல உறுமய, கம்யூனிஸ்ட் கட்சி, சமாஜ கட்சி உட்பட்ட கட்சிகளின் வாக்கு வங்கிகளையும் சேர்த்துப் பார்க்கும்போது, வரும் ஜனாதிபதித் தேர்தலின் வெற்றி தோல்வி கணக்கைப் பார்ப்பது சிரமமாக இருக்காது.

அண்மைக்காலமாக நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கான எதிர்ப்பு அலையொன்று பெரும்பான்மைச் சிங்கள மக்களிடையே ஆரம்பிக்கப்பட்டதை அறிவோம். மாதுலுவாவே சோபித்த தேரரின் நல்லாட்சிக்கான இயக்கம் மற்றும் அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, டியூ குணசேகர, பேராசிரியர் திஸ்ஸ விதாரண ஆகியோரின் முன்னெடுப்புகள், பாரம்பரிய ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பிரமுகர்களிடையே ஏற்பட்டு வரும் மாற்று மனப்பாங்குகள் இந்த சிந்தனைக்கு வலுச் சேர்ப்பவையாக உள்ளன. நாட்டில் சில காலமாக சிறுபான்மை மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள வன்முறைகள், தாக்குதல்களுடன் அரசாங்கத்துக்கு நேரடியாக அல்லது மறைமுகமாக இருப்பதாக கூறப்படும் உறவு, வடக்கு-கிழக்கு தமிழ் மக்களிடையே பெருகிவரும் விடுதலை வேட்கை மற்றும் வாக்களிப்பில் ஏற்பட்டு வரும் ஆர்வம் மட்டுமன்றி தொழிற்சங்கங்களிடையே ஏற்பட்டு வரும் அதிருப்தி, பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே தோன்றி வரும் எதிர்ப்புகள் எல்லாம் சேர்த்து நடப்பு ஆட்சியை மாற்றிவிடலாம் என்ற கருத்து மேலோங்கி வருவதையும் மறுப்பதற்கில்லை. இன்றைய அரசியல் சூழ்நிலை இரண்டு விடயங்களின் ஒன்றிணைப்பாக வளர்ந்து வருவதையும் அவதானிக்க முடியும். நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கவேண்டும் என்பது அதில் ஒன்று. குறைந்தபட்சம் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களில் சில குறைக்கப்பட வேண்டும் என்ற ஜாதிக ஹெல உறுமயவின் கோரிக்கையும் இதில் அடங்கும். ஜனாதிபதி நீதிமன்றத்துக்கு வகைகூற வேண்டும். பாராளுமன்றத்திலிருந்து அங்கத்தவர்களின் கேள்விகளுக்கு பதில் கூற வேண்டும். தேசிய பொருளாதாரத்தை தீர்மானிக்கும் அளவுக்கதிகமான அமைச்சுகளை வைத்திருப்பது போன்ற அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டும் என்று அக்கட்சி கூறுகின்றது.

இவற்றை அடைந்துகொள்ள ஒரு பொது வேட்பாளர் தேவை என்ற விடயம் சில காலமாக சமூகத்தில் பேசப்படுகின்றது. எங்கோ ஒரு வேற்றுக் கிரகத்திலிருந்து அப்படியொரு பொது அபேட்சகர் தோன்றி எமது அபிலாஷைகளை நிறைவேற்றுவார் என்பதுபோல நிலைமை மாறி வருகின்றமையும் அவதானிக்க முடிகிறது.



ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பத்தில் பொது வேட்பாளர் பற்றி வலியுறுத்தி வந்தாலும் அமெரிக்காவிலிருந்து திரும்பியது முதல் ரணில் விக்கிரம சிங்ஹ தானே ஜனாதிபதி வேட்பாளர் என்று கூறி வருகின்றார். அரசுக்கு எதிர்ப்பு அதிகரித்து, ஜனாதிபதி முறைக்கு எதிராக உருவாகும் சர்ச்சையைப் பயன்படுத்தி தனது நீண்டகால ஜனாதிபதி ஆசையை அடைந்துகொள்ள இதுதான் சரியான சந்தர்ப்பம் என்று அவர் யோசிப்பதாக இருக்கலாம். அல்லது அமெரிக்காவில் நடந்த மந்திராலோசனையின் போது அப்படியொரு முடிவு எட்டப்பட்டிருக்கலாம்.

பொது வேட்பாளர் பட்டியலில் பலரது பெயர்கள் சேர்க்கப்பட்டு இப்போது அதில் பலர் நீக்கப்பட்டும் உள்ளனர். யார் சேர்ந்தார்கள், ஏன் நீக்கினார்கள் என்பது தெரியாது. ஒவ்வொரு பொதுக்கட்சியும் குழுவும் ஏதோ ஒன்றை மனதில் வைத்துக்கொண்டு பொது வேட்பாளர் பற்றிப் பேசுவது போன்றே தோன்றுகின்றது. பொது வேட்பாளர் விவகாரத்தை கொச்சைப் படுத்தும் நோக்கிலும் சிலரது பெயர்கள் முன்மொழியப்படுகின்றன. பொது வேட்பாளரை யார் தேடுது, எப்படித் தேடுது? என்ற கேள்விக்கு விடை காணப்படவிலலை. ஆனாலும் எமக்காக ஒரு பொது வேட்பாளர் எங்கிருந்தோ இறங்கி வருவார் என்று நம்புவது போலத் தெரிகிறது.

இந்நிலைமைகளால் மிகவும் மகிழ்ச்சியடைவது தற்போதைய ஜனாதிபதியாக இருக்கலாம். ஒவ்வொருவரும் பொது வேட்பாளருக்குப் பின்னால் சென்று ஒருவருமே சரியாக ஜனாதிபதித் தேர்தலுக்கு ஆயத்தமாகாத நிலையில், ஒரு பொது வேலைத்திட்டம் இல்லாத நிலையில் அரசாங்கம் தருணம் பார்த்து தேர்தலை அறிவித்துவிட்டால் எல்லாமே முடிந்துபோய் விடும். மிக இலகுவாக இன்றைய ஜனாதிபதி மூன்றாம் தடவையும் வெற்றிபெற்று விடுவார். எனவே, அதற்கான முறியடிக்கும் முன்னெடுப்பாக, ஓர் உத்தியாக இந்த பொது வேட்பாளர் பிரச்சினை திட்டமிடப்பட்ட ஒன்றாக வேண்டும். இதற்கான சிந்தனையும் புக்கணிக்கக் கூடியதல்ல. மஹிந்த ராஜபக்ஷவைத் தோற்கடித்து ஜனாதிபதி முறையை ஒழிக்க ஒருவர் வருவார் என்று பலரும் கனவுகண்டு கொண்டிருக்கும் நிலையில், அடுத்த தேர்தலுக்குத் திகதி அறிவிக்கப்பட்டு பெறுபேறும் வந்துவிடும். கனவு கலைந்து பார்க்கும் போது எல்லாமே நடந்து முடிந்திருக்கும். மீண்டும் ஒரு பொது வேட்பாளர் விவகாரம் 2020 இல் அல்லது அதனை அண்மிய காலத்தில் தலைதூக்கப்படும்போது, ஒருவரிடமும் விட்டுக்கொடுப்பு இல்லாதபோது, சொந்த நிகழ்ச்சி நிரலை மாற்ற விரும்பாதபோது, ஜனாதிபதி முறையை மாற்ற எதிர்ப்பார்க்கும் இன்றைய ஜனாதிபதியை எதிர்ப்பவர்களே ஒன்றிணைந்து அவரை மீண்டும் வெற்றிபெறச் செய்யும் காரியம் மிக இலகுவாக முடிந்துவிடும்.

**ஜனாதிபதி நீதிமன்றத்துக்கு வகை கூற வேண்டும்**

**பாராளுமன்றத்திலிருந்து அங்கத்தவர்களின் கேள்விகளுக்கு பதில் கூற வேண்டும்**

**தேசிய பொருளாதாரத்தை தீர்மானிக்கும் அளவுக்கதிகமான அமைச்சுகளை வைத்திருப்பது போன்ற அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய கூறுகின்றது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிகளாரின் சுன்னாவும் சட்டவாக்கமும்



மூலம்: கலாநிதி யூசுப் அல்கர்ளாவி
மொழியாக்கம்: அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி)

(தொடர் 41)

கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் எழுதிய "அஸ்ஸுன்னா மஸ்தரன் லில் மஃரிபா வல் ஹழாரா" (அறிவுக்கும் நாகரிகத்திற்குமான அடிப்படை என்ற வகையில் சுன்னா) என்ற நூலின் மொழிபெயர்ப்புத் தொடர்.

வஹியாக அமையாத நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது கூற்று வசனங்கள் இங்கு எமது ஆய்வு சட்டங்களுடன் தொடர்புடைய ஏவல்களுடனும் விலக்கல்களுடனும் மாத்திரம் சுருங்கியதல்ல. மாறாக அது கூற்று வசனங்களையும் உள்டக்கியுள்ளது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சிலபோது வஹியின் அடிப்படையில் அல்லாமல் தனது சுயபுத்தி, மனித அறிவு மற்றும் சூழலில் பெற்ற அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் சில விடயங்களை கூறியிருக்க முடியும். அவை சிலபோது சரியானவையாக அமையாதிருக்கவும் கூடும். பேரீத்த மகரந்தச் சேர்க்கை குறித்து நபிகளார் கூறியதை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். மகரந்த சேர்க்கை செய்வது அவசியமற்றது என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஆரம்பமாகச் சொன்னார்கள். பின்னர் அது தனது பகுத்தறிவால் சொல்லப்பட்டதேயன்றி அல்லாஹ்வின் வழிக்காட்டலின் அடியாக கூறப்படவில்லை எனவும் மக்களுக்கு தெளிவுபடுத்தினார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தொற்றுநோய் பற்றி கூறியது இதற்கு பிரிதோர் உதாரணமாகும். ஆரம்பமாக "தொற்றுநோய் இல்லை, முதன் முதலில் ஏற்படுத்தியவன் யார்?" என்று கூறி தொற்றுநோய் இல்லை என மறுத்தார்கள். பின்னர் தொற்றுநோய் இருக்கின்றது என்பதை "சிங்கத்திடமிருந்து விரண்டோடுவது போல குஷ்டரோகியிடமிருந்து விரண்டோடு", ஆரோக்கியமான கால்நடைகளுடன் நோய்வாய்ப்பட்டுள்ள கால்நடைகளைச் சேர்க்காதீர்கள் (முத்தபகுன் அலைஹி) என்பவற்றின் மூலமும் "தொற்றுநோய் உள்ளவன் ஊருக்குள் நுழைய வேண்டாம்" என தடுத்ததன் மூலமும் தொற்றுநோய் உண்டு என்பதை உறுதியாக கூறியுள்ளார்கள். இது தொடர்பாக வந்துள்ள அனைத்து ஹதீஸ்களும் ஸஹிஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம் ஆகிய இரண்டு கிரந்தங்களிலும் அல்லது அவற்றில் ஒன்றில் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த தலைப்பின் கீழ் வந்துள்ள முரண்பாடான ஹதீஸ்களுக்கு மத்தியில் உடன்பாடு காண்பதற்காக ஆரம்ப காலந்தொட்டு அறிஞர்கள் பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டுள்ளனர். அவர்களில் சிலர், "தொற்றுநோய் இல்லை" என வந்துள்ள ஹதீஸ்களை தொற்றுநோய் உண்டு எனக் குறிப்பிட்டு வந்துள்ள ஹதீஸ்கள் நஸ்க் செய்துள்ளன என்று கூறுகின்றனர். தொற்றுநோய் உண்டு எனக் கூறும் ஹதீஸ்கள் பிந்தி சொல்லப்பட்டனவாகும். தொற்றுநோய் இல்லை என சொல்லப்பட்ட ஹதீஸ்கள் ஆரம்பமாக சொல்லப்பட்டனவாகும். ஆரம்பமாகச் சொல்லப்பட்ட ஹதீஸ்களை பிந்திச் சொல்லப்பட்ட ஹதீஸ்கள் நஸ்க் செய்யும்.

இங்கு முந்தி சொல்லப்பட்ட ஹதீஸ்கள் கூற்று வசனங்களாக அமைந்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. கூற்று வாக்கியங்கள் நஸ்க் செய்யப்படுவதில்லை. ஏனெனில் கூற்றுக்களைப் பொறுத்தவரை அவை ஒன்றில் உண்மையானதாக இருக்கும் அல்லது பொய்யாக இருக்கும்.

ஹதீஸ்களுக்கு மத்தியில் காணப்படுகின்ற முரண்பாடுகளை களைவதற்காக அறிஞர்கள் மேற்கொண்ட வழிமுறைகளை பேரறிஞர் இப்னுல் கைய்யும் அவரது "மிப்தாஹு தாரிஸ்ஸஆதா"வில் தொகுத்துக் கூறுகின்றார். அவர் குறிப்பிடுகின்றவற்றில் முக்கியமானதை மாத்திரம் இங்கு தருகின்றோம். அவர்களில் சிலர் வேறு வழிமுறைகளைக் கையாண்டுள்ளனர். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறுகின்ற விடயங்கள் இரு வகைப்படும்:

ஒன்று, வஹியை அடிப்படையாகக் கொண்டு சொல்லப்படுகின்ற ஹதீஸ்கள். இது அனைத்து வகையிலும் அறிவியலுக்கும் நடைமுறைக்கும் இயைந்ததாக இருக்கும். இவ்வகை ஹதீஸ்கள் தவறுகளிலிருந்து பாதுகாக்கப்பட்ட ஹதீஸ்களாகும்.

இரண்டு, அல்லாஹ்வின் தூதரை விட மக்கள் நன்கறிந்துள்ள உலக விவகாரங்கள் குறித்து நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) தமது எண்ணத்தினடியாகக் கூறிய ஹதீஸ்கள். இது முதல் வகையின் தரத்திலும் தாழ்ந்ததாகும். இவற்றின் மூலம் சட்டங்களைப் பெற முடியாது. இவ்விரு வகையின் வேறுபாடு பற்றி நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களே கூறியுள்ளார்கள். பேரீத்தம் தோப்பில் மகரந்தச் சேர்க்கை செய்து கொண்டிருந்த தோழர்களின் குரல்களைக் கேட்ட நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், இது என்ன? என வினவினார்கள். மகரந்த சேர்க்கை செய்வதாக தோழர்கள் கூறினார்கள். நீங்கள் அப்படிச் செய்யாவிட்டால் தீங்கேதும் ஏற்படாது என நினைக்கிறேன் என நபிகளார் கூறினார்கள். தோழர்கள் மகரந்தச் சேர்க்கை செய்வதை கைவிட்டனர். அதனால் அந்த முறை விளைச்சல் குறைந்தது. அத்தருணத்தில் நபிகளார் எனது எண்ணப்படியே நான் அப்படிச் சொன்னேன். உங்கள் உலக விகாரங்கள் குறித்து நீங்களே நன்கறிந்தவர்கள் என்று கூறினார்கள்.

# ரமழான் மாதச் சிறப்பு

ரமழான் மாதம் அருள் நிறைந்த மாதம் 'நன்மைகளை அதிகம் செய்யும் மாதம்.' பிழைபொறுப்புத் தேடும் மாதம். அல்லாஹ்வை அதிகம் நெருங்கும் வாய்ப்பைப் பெறும் மாதம். சுவர்க்கத்தின் வாசல்கள் திறக்கப்பட்டு நரகத்தின் வாசல்கள் மூடப்படும் மாதம். ஷைத்தான்கள் விலங்கிடப்படும் மாதம். ஆயிரம் மாதங்களை விட சிறப்புமிக்க ஓர் இரவைக் கொண்ட மாதம். நரகவாதிகள் நரகத்திலிருந்து விடுதலை பெறும் மாதம். அல்குர்ஆனை இப்பூவுலகத்தில் இறக்குவதற்கு அல்லாஹ் தேர்ந்தெடுத்த மாதம். துஆக்கள் அங்கீகரிக்கப்படும் மாதம் என்று இந்த மாதத்திற்கு பல சிறப்புக்கள் நிறைந்துள்ளன.

"இம்மாதத்திலும் நன்மைகள் செய்யாதவர் எல்லா நன்மைகளையும் இழந்தவர் என்றும் இந்த மாதத்தில் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கேட்காதவர் அல்லாஹ்வின் அருளைவிட்டுத் தொலைவில் இருப்பார்கள் என்றும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்."

ரமழான் மாதம் என்றால் பசியோடு இருக்கின்ற, பட்டினி கிடக்கின்ற, தாகத்தால் தவிக்கின்ற மாதமல்ல. பசி, பட்டினி தாகத்திற்கான பயிற்சியை எடுத்துக்கொள்கின்ற மாதமுமல்ல. குர்ஆனை இடைவிடாது நாள்தோறும் ஓதுகின்ற மாதம், இரவெல்லாம் நின்று தொழுகின்ற மாதம் என்றாகியும் விடாது.

மாறாக, ஒருவருக்கொருவர் கனிவோடும் கரிசனத்தோடும் நட்போடும் தோழமையோடும் அர்ப்பணிக்கின்ற மாதம். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கின்ற மாதம்.

"யார்கெட்ட பேச்சுக்களையும் செயல்களையும் விட்டுவிடவில்லையோ அவர் உணவை விடுவதிலும் குடிப்பை விடுவதிலும் அல்லாஹ்வுக்கு எந்தத் தேவையும் இல்லை என் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்" (ஆதாரம்: புகாரி)

"எத்தனையோ நோன்பாளிகள் அவர்கள் பசித்திருந்ததைத் தவிர வேறு எதையும் அவர்களின் நோன்பினால் பெற்றுக் கொள்வதில்லை. இன்னும் இரவில் நின்று வணங்கும் எத்தனையோ பேர் இரவில் கண்விழித்திருப்பதைத் தவிர வேறு எதையும் பெற்றிருப்பதில்லை என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்"

(ஆதாரம்: நஸாயீ, இப்னுமாஜா 3)

## நோன்பின் அனுமதிகள்

- நோன்பின்போது காயங்களுக்கு மருந்து போடுதல், பல் பிடுங்குதல், கண், காதுகளுக்கு சொட்டு மருந்திடுதல் போன்வற்றிற்கு அனுமதியுள்ளது.
- காயங்கள், சிறுமூக்கு உடைதல், பல் பிடுங்குதல் போன்றவை காரணமாக இரத்தம் வெளியானால் நோன்பு முறியாது.
- நோன்பு நாட்களின் பகல் பொழுதில் பல் துலக்குவது தவறில்லை. மாறாக அது நோன்பல்லாத நாட்களில் சுன்னத்தாக இருப்பது போன்றே நோன்பு நாட்களிலும் சுன்னத்தாகும்.
- குளிப்பு கடமையான நிலையில் ஸஹர் செய்வதில் தவறில்லை. அதற்கு அடுத்து வரும் சுப்ஹு தொழுகைக்காக குளித்துக் கொண்டாலே போதுமானது.
- கடும் வெயிலின் காரணமாக குளிர்ந்த நீரை உடலில் ஊற்றிக்கொள்வதோ, குளிர் சாதனங்களை உடல் மீது பயன்படுத்துவதிலோ, பகல் மற்றும் மாலைப் பொழுதில் குளித்துக் கொள்வதிலோ தவறில்லை.
- நோன்பு திறக்க எதுவும் கிடைக்காவிட்டால் நோன்பு திறக்கும் நேரத்தில், நோன்பு திறப்பதாக எண்ணிக்கொண்டு, பிறகு வாய்ப்புக் கிடைக்கும்போது சாப்பிட்டுக் கொண்டால் போதுமானது.
- வாய் கொப்பளிக்கும்போது தன்னை அறியாது தண்ணீர் தொண்டையில் இறங்கிவிட்டால் நோன்பு முறியாது. ஆனால் அடித்தொண்டை வரை தண்ணீரை செலுத்தாமல் இருக்க வேண்டும்.
- நேரம் தெரியாமல் சூரியன் மறைந்துவிட்டது என்று நினைத்து, சூரியன் மறைவதற்கு முன்னரோ அல்லது ஃபஜ்ர் நேரம் வரவில்லை என்று நினைத்து ஃபஜ்ர் நேரம் வந்ததற்கு பிறகு சாப்பட்டு விட்டாலோ நோன்பு முறியாது. எனினும் சரியான நேரம் தெரிந்துவிட்டால் உடனே நிறுத்திக்கொள்ள வேண்டும்.
- மறந்து அல்லது தெரியாமல் சாப்பிட்டோ, குடித்தோவிட்டால் நோன்பு முறியாது. ஆனால் நோன்பின் நினைவு வந்தவுடனே நிறுத்திக்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "அவர்களை விடுங்கோ" ஜனாதிபதி செய்வது சரியா?

தற்போது இலங்கையில் கடுமையான குழப்பத்தில் இருப்பவரென்றால் இலங்கை கடற்படைத் தளபதியாகத்தானிருக்கும்.

ஏனென்றால், இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி வந்து மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களை கடற்படையினர் கைதுசெய்து காண்டுவர, ஜனாதிபதி அவர்களை உடன் விடுவிக்கிறார்.

முன்னரெல்லாம் இப்படிக் கொண்டுவரப்படும் ஆட்களை தடுத்துவைத்து, விசாரித்து, அனுராதபுரம் சிறைக்கோ, மன்னார்க் கோட்டுக்கோ கொண்டுபோய்... இப்படியொரு பெரிய வேலையே நடக்கும்.

பிறகு வாரக்கணக்கிலோ, மாதக்கணக்கிலோ அவர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள். தமிழக அரசு இந்த ஆட்களையெல்லாம் மீட்பதற்காகப் பெரும் போராட்டத்தையே செய்யும்.

தமிழகத்தில் இருக்கின்ற அரசியல் கட்சிகளும் மீனவர் அமைப்புகளும் கூட ஆர்ப்பாட்டம், ஹர்த்தால் என்று ஏதோவெல்லாம் செய்வார்கள்.

ஆனால், இலங்கை அரசாங்கம், தான் நினைத்த மாதிரித்தான் இந்த மீனவர்களை விடுவிக்கும்.

ஆனால், தற்போதெல்லாம் கடலிலிருந்து பிடித்துக்கொண்டு வந்த உடனேயே அவர்களை விடுமாறு ஜனாதிபதியே கூறிவிடுகிறார்.

ஏனென்றால், இந்தியாவின் புதிய அரசாங்கத்துக்கு நல்லெண்ணச் சமிக்ஞையைக் காட்ட வேண்டுமாம்.

அதற்காக இலங்கைக் கடல் எல்லைக்குள் வந்து அட்டகாசம் செய்யும் மீனவர்களை ஒன்றும் செய்யாமல் விடுவதென்றால்...?

நரேந்திரமோடி பிரதமராக தெரிவானதும் தனது பதவியேற்புக்கு மஹிந்த ராஜபக்ஷவையும் அழைத்திருந்தார். அதற்கு டில்லிக்கு செல்லும் முன் மோடியைக் குளிர்விக்க 22 மீனவர்களை விடுதலை செய்ய உத்தரவிட்டார் ஜனாபதிபதி. தற்போது 82 மீனவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர். அப்படியானால், இனி கடலில் அத்துமீறுகின்ற அத்தனை இந்திய மீனவர்களும் உடனுக்குடன் விடுவிக்கப்படுவார்களோ? அப்படி சுடச் சுட மீனவர்களை விடுவித்து நல்லெண்ணப் பயிர் வளர்க்கின்ற திட்டம் பொருத்தமான விடயந்தானா?

அப்படியே கச்சத்தீவையும் மோடி அண்ணனுக்கு எழுதிக்கொடுத்தால் இன்னும் நல்லெண்ணப் பயிரை வளர்களாமல்லவா?

ஜனாதிபதிக்கு ஒன்று சொல்ல வேண்டும்... இப்படிச் சொந்த நாட்டு மீனவர்களுக்கே அநியாயம் செய்து கொண்டு இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கண்டும் காணாமல் விடுவது நல்லதயல்ல.

உண்மையாகவே மோடிக்கு நல்லெண்ணெத்தைக் காட்டுவதாக இருந்தால், இலங்கைத் தமிழர்களுக்கான தீர்வை வழங்க வேண்டும். தமிழர்களுக்குச் செய்ய வேண்டிய நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். சிறுபான்மை மக்களை அன்போடு அரவணைத்து, அனுசரித்து நடப்பது என ஏதாவது உருப்படியான காரியங்களைச் செய்திருக்கலாம்.

அப்படி எதையாவது செய்திருந்தால் மோடிக்கும் பயப்படத் தேவையில்லை, தமிழ்நாட்டில், ஐ.நா. வில் இருக்கின்ற எந்த லேடிகளுக்கும் பயப்படத் தேவையில்லை. மோடிக்கும் டில்லிக்கும் இந்த மாதிரி பல்லை காட்டிக்கொண்டு ஐஸ்போம் வேலையையும் பார்க்க வேண்டியதில்லை.



# செக்குப் பிடித்த பணியாரத்தோடு தமிழ் மக்களும் தமிழ்த் தலைவர்களும்

வடபுலத்தான்

இலங்கைத் தமிழர்கள் வாழும் பகுதிகளைப் பிரித்து தனி ஈழம் அமைக்க இலங்கைத் தமிழர்களின் மத்தியிலும் புலம்பெயர்ந்த தமிழர்களிடமும் பொது வாக்கெடுப்பு நடத்தக்கோரி ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா தீர்மானம் கொண்டுவர வேண்டும் என்று இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடியிடம் கேட்டிருக்கிறார், ஜெயலலிதா.

இதுவொரு சக்குப்பிடித்த பணியாரம் என்று மோடிக்குத் தெரியும்.

என்றாலும் அவர் மறுப்புச் சொல்லவில்லை. பார்க்கிறேன், செய்கிறேன் என்ற கணக்கில் ஜெயா அக்காவைச் சமாளித்து ஆளை அனுப்பியிருக்கிறார்.

ஆனால், இந்த சக்குப்பிடித்த பணியாரத்தைத் திருப்பிச் சுட்டுக்கொண்டிருக்கிறார் வைகோ. அப்படியே தமிழ் ஊடகங்கள் எல்லாமே திரும்பித் திருப்பி இதைச் சலிக்காமல் சுட்டுக்கொண்டிருக்கின்றன.

இப்படி, அடிக்கடி சுட்ட பணியாரத்தையே திருப்பித் திருப்பிச் சுடுகின்ற பழக்கம் தமிழர்களுக்கு ஒரு வழமையாகி விட்டது.

தமிழீழத்துக்கு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு சரியாக நடக்க வேண்டும் என்கின்றனர். நாடு பிரிந்து செல்ல அனுமதிக்க வேண்டும் என்று கூறுகின்றனர்.

இப்படி, அரைத்த மாவை அரைப்பதிலும் பிழிஞ்ச தேங்காய்பூவைத் திரும்பப் பிழிவதிலும் தமிழாக்களுக்கு நிகர் வேறு யாருமில்லை.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை வைத்து எத்தனையோ தேர்தலை நடத்தி விட்டார்கள்.

வடக்கு-கிழக்கு இணைப்பை வைத்து பல ஆண்டுகளை ஓட்டிவிட்டார்கள்.

உள்ளக சுயநிர்ணய உரிமை - வெளியக சுயநிர்ணய உரிமை என்பதை வைத்து பத்துப் பன்னிரெண்டு நாடுகளுக்கு பயணம் போய் வந்தாச்சு.

கடைசியில் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் வந்து நிற்கிறது. அதுக்குள் அடிக்கடி துடிச்சுப் பதைச்செழும்பி இந்த மாதிரிச் சீமானோ, வைகோவோ, நெடுமாறனோ, உருத்திரகுமாரனோ, கருணாநிதியோ தமிழீழத்தைப் பற்றிக் கதைக்கிறார்கள்.

தமிழீழத்துக்காக கருணாநிதியே பல தடவை உயிரைக் கொடுத்தார். நெடுமாறன் அதைவிடப் பல தடவை உயிர் கொடுத்திருக்கிறார். இடையில் வைகோ, சீமான், திருமாவளவன்... என்று ஒரு பெரிய அணி தமிழீழத்துக்காக உயிர் கொடுக்கக் களமிறங்கியது.

ஆனால், தமிழீழம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, தமிழ்நாட்டில் இருக்கின்ற ஈழ அகதிகளையாவது இவர்கள் கவனித்தார்களா என்றால்...?

சொன்னால் வெட்கக்கேடு...

இந்தச் சீரிலயும் சிறப்பிலயும் தனித் தமிழீழத்துக்குப் பொது வாக்கெடுப்பு என்ற சீன் வேறு.

ஆனால், என்ன செய்வது?

தமிழ்ச் சனத்துக்கு கலையாடிகளும் குறி சொல்லிகளும் எப்போதும் தேவை.



சக்குப்பிடித்த பணியாரத்தை திரும்பத் திரும்ப கலியாணப் பந்தலில் வைப்பதில் தமிழ்த் தேசியவாதிகளுக்கு இருக்கின்ற பிரியத்துக்கு அளவில்லை.

இதில் தமிழ்த் தலைவர்களும் ஒன்று தான்; தமிழ்ச் சனங்களும் ஒன்றுதான். இவர்கள்தான் அவர்களை ஆதரிப்பதும் அவர்கள்தான் இவர்களை அரவணைப்பதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப் பண்டங்களை கொள்வனவு செய்யும்போது அதன் உண்மைத்தன்மையை அறிந்து கொள்ளுங்கள்

## ஹலால் சான்றுறுதி பேரவையின் பிரதம நிறைவேற்றதிகாரி அலி பதாரலி

வெளிநாடுகளில் உள்ள ஹலால் கம்பனிகளுக்கு அரசாங்க ஆதரவு காணப்படுகின்றது. எமது நாட்டில் ஆதரவு இல்லாமல் இருப்பதால் வசதிகள் குறைவாக காணப்படுகின்றன. இதனால் ஹலாலை பரிசீலினை செய்வதற்கு நீண்டகாலமும் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதில் காலதாமதமும் ஏற்படுகின்றன. இதுவே எமக்கு பெரிய சவாலாக வுள்ளது என ஹலால் சான்றுறுதி பேரவையின் பிரதம நிறைவேற்றதிகாரி அலி பதாரலி தெரிவித்தார். அவர் எங்கள் தேசத்திற்கு வழங்கிய நேர்காணலின் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் வழங்கிய நேர்காணலை இங்கு தொகுத்துத் தருகிறோம்.



**எங்கள் தேசம்: நீங்கள் ஹலால் சான்றுறுதி பேரவை என்ற இந்நிறுவனத்தை ஆரம்பித்ததற்கான நோக்கம் என்ன?**

*அலி பதாரலி:* இலங்கையின் ஜம்இய்யதுல் உலமா ஹலால் விவகாரத்தை செய்யுமாறு விடுக்கப்பட்ட கேள்வியின் காரணமாக இலங்கையில் பல்வேறுபட்ட அமைப்புக்களையும் இடங்களையும் சேர்ந்த 11 பேர் முன்வந்து இந்த நிருவனத்தை ஆரம்பித்தோம். தற்காலத்தில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்ற எமது முஸ்லிம் சமூகத்திற்கு நன்மை செய்யும் நோக்கத்துடனே நாங்கள் இந்நிறுவனத்தை செய்ய முன்வந்தோம். இதனை ஆரம்பிக்கின்றபோது பிரதான நான்கு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே ஆரம்பித்தோம்:

இலங்கை மக்களிடையே ஹலால் பற்றிய தவறான எண்ணங்களை களைந்து நல்லெண்ணங்களை பரப்புவது, ஹலால் என்று உறுதிப்படுத்தப்பட்ட பொருட்களை நுகர்வோருக்கு தெரியப்படுத்தி வழிகாட்டுவது, இலங்கை கம்பனிகளை சர்வதேச மட்டத்தில் பிரசித்தி பெறச் செய்வது, நுகர்வு பொருட்கள் மூலம் இலங்கையை முன்னேற்றம் அடையச் செய்தவது என்பனவே அந்த நான்கு நோக்கங்களுமாகும்.

மேலும், எமது நிறுவனத்திற்கு ஏதாவது வழிகளில் பணங்கள், உதவிகள் கிடைக்குமாயின் அவற்றை நிறுவனம் பெறாது இந் நோக்கங்களை அடைவதற்காக பயன்படுத்துகின்றோம்.

**எங்கள் தேசம்: ஹலால் அனுமதிப்பத்திரம் பெறுவதில் கம்பனிகளின் ஆர்வம் எவ்வாறுள்ளது?**

*அலி பதாரலி:* தற்போதைய சூழ்நிலையைப் பொறுத்தவரையில் நாட்டில் ஹலால் தொடர்பான தவறான அபிப்பிராயம் மக்களிடையில் காணப்படுவதால், ஆர்வம் சிறிது குறைந்துள்ளது.

இருந்தபோதிலும், சுமார் 2500 பொருட்கள் ஹலால் சான்றிதழ் பெற்றுள்ளன. கடந்த 5 மாதங்களுக்குள் 120 கம்பனிகள் ஹலால் சான்றிதழ் பெற்றுள்ளதோடு, மேலும் 45 கம்பனிகள் ஹலால் சான்றிதழ் பெறுவதற்காக காத்திருக்கின்றன.

ஹலால் சான்றிதழை பெறுவதற்காக விண்ணப்பிக்கும் நிறுவனங்களுக்கு சான்றிதழ் வழங்க முன்பு, அவர்களுக்காக ஹலால் தொடர்பான முழு விபரங்கள் அடங்கிய பயிற்சிநெறி ஒன்றை நடத்தி அதன் முடிவின் பின்னரே சான்றிதழ் வழங்குகின்றோம்.

இப்பயிற்சிநெறி மூலம் அவர்களுக்கு ஹலால் தொடர்பான உண்மை நிலைப்பாடு தெளிவுபடுத்தப்படுகின்றது. பொருட்களுக்கு ஹலால் வழங்கப்படாமல் இருந்தால் ஏற்படும் தீமை பற்றி விளக்கப்படுகிறது. சமகாலத்தில் ஹலால் தொடர்பாக கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டிற்கான காரணங்களும் அதற்கான விழிப்புணர்வுகளும் வழங்கப்படுகின்றன.

**எங்கள் தேசம்: ஹலால் அனுமதிப் பத்திரம் வழங்குவதில் நீங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பற்றிக் கூற முடியுமா?**

*அலி பதாரலி:* ஆரம்ப காலத்திலிருந்தே இலங்கை மக்கள் மத்தியில் தவறான எண்ணங்களை வளர்த்துள்ளமையால் எங்களுக்கு ஹலால் சான்றிதழ் வழங்கும்போது பல சிக்கல்கள் காணப்படுகிறன. இச்சவால்களை எதிர்கொள்வதற்காக ஹலாலின் உண்மைத்தன்மை தொடர்பான பயிற்சி முகாம்களை ஏற்பாடு செய்கின்றோம்.

அடுத்து, மிகவும் முக்கிய விடயமாக ஹலால் சான்றிதழ் வேண்டப்படும்போது, சான்றிதழ் வழங்குவதில் காலதாமதம் எற்படுகின்றது. ஏனைய நாடுகளில் ஹலாலை பரிசீலிப்பதற்காக அதி நவீன இயந்திரங்கள், தொழிநுட்பவியலாளர்களின் வளம் காணப்படுகின்றது. அத்தோடு, வெளிநாடுகளில் உள்ள ஹலால் கம்பனிகளுக்கு அரசாங்க ஆதரவும் காணப்படுகின்றது. எமது நாட்டில் இந்த ஆதரவுகள் இல்லாமல் இருப்பதால் வசதிகள் குறைவாக காணப்படுகின்றன. இதனால் ஹலாலை பரிசீலினை செய்வதற்கு நீண்டகாலம் தேவைப்படுகிறது. எனவே, அனுமதிப்பத்திரம் வழங்குவதில் காலதாம தமும் ஏற்படுகின்றது. இதுவே எமக்கு பெரிய சவாலாகவுள்ளது.

இவ்வாறான சவாலை நாங்கள் எதிர்நோக்கியும் கூட, தற்போது உலகில் 50 இற்கும் அதிகமான நாடுகளில் எமது நிறுவனத்தின் சான்றிதழ் அங்கீகாரம் பெற்றுள்ளது.

**எங்கள் தேசம்: ஹலால் தொடர்பாகவும் ஹலால் சான்றிதழ் தொடர்பாகவும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறீர்களா?**

*அலி பதாரலி:* ஆம், ஏற்படுத்துகின்றோம். முதலில் முஸ்லிம்களுக்கு வேறாகவும் முஸ்லிம் அல்லாத நபர்களுக்கு வேறாகவும் என, நாடுபூராகவும் எமது நிறுவனம் இரண்டு பிரிவுகளாக அவர்களை அணுகி விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துகின்றது.

முஸ்லிம்களைப் பொருத்தவரையில் பள்ளிவாசல்களுக்கு கிராமமட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஹலால் சான்றிதழ் வழங்கியுள்ள பொருட்களின் பட்டியல் அடங்கிய சுவரொட்டியினை அனுப்பியுள்ளோம். மேலும், அக்கிராமங்களுக்குச் சென்று இப்பொருட்கள் தொடர்பாகவும் ஏனைய ஹலால் அல்லாத பொருட்கள் தொடர்பாகவும் ஹலால் பெயர் பொறிக்கப்படாத பொருட்களிலுள்ள விபரீதம் பற்றியும் பயிற்சி முகாம்களை நடத்துவதற்கு தயாராகவுள்ளோம். அத்தோடு, ஊடகங்களிலும் பல இடங்களிலும் ஹலால் சான்றிதழ் தொடர்பான விழிப்புணர்வுகளையும் செய்துள்ளோம்.

முஸ்லிம் அல்லாதவர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு ஹலால் என்றால் என்ன? அதன் அணுகுமுறை, நடைமுறை, அது தொடர்பான சவால்களையும் விளக்கி நாடு முழுவதும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்த இருக்கின்றோம்.

**எங்கள் தேசம்: ஹலால் அனுமதிப் பத்திரம் வழங்கும்போது அதற்காக பணம் அறவிடப்படுவதன் காரணம் என்ன?**

*அலி பதாரலி:* ஹலால் அனுமதியை வழங்குவதற்கு நாங்கள் பூரணமாக அந்த பொருளை பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது. எனவே, இதுபோன்ற சில காரணங்களுக்காக நாம் பணம் அறவிடுகின்றோம்.

மூலப்பொருட்களின் தன்மைக்காக ஆய்வை மேற்கொள்ளும் போது, ஆய்வுகூட உபயோகத்திற்காகவும் ஆய்வுக்காக குறிப்பிட்ட இடத்திற்கு எமது ஆய்வுகூட பொருட்களைக் கொண்டு செல்வதற்கான செலவிற்காகவும், ஆய்வாளர்களுக்கான ஊதியத்திற்காகவும் இதுபோன்ற பல்வேறுபட்ட, இன்னும் சில தேவைகள் ஒரு பொருளை பரிசீலிக்கும்போது ஏற்படுகின்றன. அவ்வாறான தேவையை நிவர்த்தி செய்யும்போது அதிகளவிலான செலவுகள் ஏற்படுகின்றன.

**எங்கள் தேசம்: ஹலால் பொருட்கள் தொடர்பான அவதானங்கள் சிலவற்றை எம்மோடு பகிர்ந்துகொள்ள முடியுமா?**

*அலி பதாரலி:* பாண் போன்ற பொருட்களை கவர்ச்சியாக காட்டுவதற்காக மனித முடியால் செய்யப்பட்ட சில அமினோ அமிலங்களை பயன்படுத்துகின்றனர். அது போன்று சில பானங்களை, பழச்சாறுகளை தயாரிக்கும்போது அதனுடைய நிறம் மாறாமலும் உறையாமலும் இருப்பதற்காக சில பிராணிகளிலிருந்து பெறப்பட்ட ஜெலடினை பயன் படுத்துகிறார்கள். மேலும், சில வகையான யோகட், எண்ணெய்க் கட்டிகளை செய்வ தற்காக பல மிருகங்கள் மூலம் எடுக்கப்பட்ட ஜெலடினை பயன்படுத்துகின்றனர். இவற்றின் மூலமாகவே இவ்வுணவுகள் உறைகின்றன.

நாம் அன்றாட வாழ்வில் பொருட்களை கொள்வனவு செய்யும்போது பல்வேறு சந்தர்ப்பத்திலும் பொடுபோக்கோடு நடந்து கொள்கின்றோம். இதுபோன்ற சில உணவு, குடிபான வகைகளை கொள்வன[illegible] செய்யும்போது நடைமுறையில் எவ்வாறான விடயங்களை கூறுகின்றன என்பதை அலசி ஆராய்ந்து, பொருட்களின் உண்மைத்தன்மையை அடுத்து பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டும்.

**எங்கள் தேசம்: ஹலால் தொடர்பாக நீங்கள் மக்களுக்கு கூற விரும்புவதென்ன?**

*அலி பதாரலி:* மிக முக்கியமாக, யாரும் ஹலால் தொடர்பான விவாதக் கருத்துக்களை கூறி, மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்த வேண்டாம் என்பதை முதலில் தெரிவிக்கின்றேன்.

அத்தோடு, நாம் முஸ்லிம்கள் என்ற வகையில் பொருட்களை கொள்வனவு செய்யும்போது ஹலால் முத்திரியைப் பார்த்து கொள்வனவு செய்யுங்கள். அவ்வாறு கொள்வனவு செய்கின்றபோது நாம் பயன்படுத்தும் பொருட்கள் பற்றி அச்சப்படத் தேவையில்லை.

அத்தோடு, ஹலால் பொருட்களை கொள்வனவு செய்யும்போது ஏற்படும் தெளிவின்மைக்கும் இது தொடர்பான மேலதிக விடயங்களை அறிய எமது இணையத்தினூடாகவும் தொலைபேசியூடாகவும் தொடர்பு கொள்ளலாம்.

எமது தொலைபேசி இலக்கம்:

011 7 425 225

www.hac.lk

நேர்காணல்:
எஸ். சஜாத் முஹம்மத் (இஸ்லாஹி),
எம். வினாசர் ராஜா (இஸ்லாஹி)

**முஸ்லிம்களைப் பொருத்தவரையில் பள்ளிவாசல்களுக்கு கிராமமட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஹலால் சான்றிதழ் வழங்கியுள்ள பொருட்களின் பட்டியல் அடங்கிய சுவரொட்டியினை அனுப்பியுள்ளோம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் கூட்டணி:**

# உங்களுடனும் இருப்போம் எதிராகவும் இருப்போம்



ஆங்கிலத்தில்: கலாநிதி மொஹமட் சலீம்
தமிழில்: தாஸ்மீன் சலீம்

நீங்கள் எங்களைச் சார்ந்தவர்கள் அல்லது எங்கள் எதிரிகள் எனவும் இன்னும் இதுபோன்ற பல கர்வமான கூற்றுக்களும் செப்டம்பர் 11 பாரிய நிகழ்விற்குப் பின்னர் அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஸ் இனால் எச்சரிக்கையாக விடப்பட்டன. மற்றைய நாடுகளை தனக்கு நண்பர்களாக அல்லது எதிரிகளாக இருக்குமாறு நிர்ப்பந்திப்பதாக இவ் எச்சரிக்கை அமைந்தது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஐக்கிய மக்கள் கூட்டமைப்புடன் (UPFA) கொண்டுள்ள அணிச்சேர்க்கையானது இன்னொரு வகையில், உங்களுடன் இருப்போம் எதிராகவும் இருப்போம் என்ற தொனியில் அமைகின்றது. இந்த உறவு உடனடியாக கிடைக்கப் பெறுகின்ற தனிப்பட்ட நன்மையின் அளவினால் தீர்மானிக்கப்படுகின்றது அல்லது எதிர்காலத்தில் மேற்கொள்ள இருக்கின்ற ஒரு பேரம்பேசலுக்கான அழைப்பாக அமைகின்றது. பாராளுமன்றத்தில் 18 ஆம் அரசியல் திருத்தத்தை மேற்கொள்வதற்கு அவசியமான எண்ணிக்கையை அரசாங்கத்திற்கு பெற்றுக் கொடுப்பதற்கும் இதற்குப் பகரமாக ரவூப் ஹக்கீம் அவர்களுக்கு நீதி அமைச்சுப் பதவியை பெற்றுக்கொள்வதற்குமே ஸ்ரீ.மு.கா. UPFA உடன் அணிச் சேர்க்கை செய்து கொண்டுள்ளது. இதிலுள்ள முரண் நகை என்னவென்றால், இவ்விரு தரப்புமே ஒன்று மற்றொன்றிற்கு கடுமையான எதிராளிகளாகும்.


கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீ.மு.கா. சரத் பொன்சேகாவிற்குப் பின்னால் நின்றது. பாராளுமன்றத் தேர்தலின்போது ஐ.தே.க. வுடன் கூட்டணி அமைத்தது. இவ்வாறாக கட்சிக் கொள்கைகளை அடிக்கடி மாற்றுவது யார், எந்த அடிப்படையில் வகுக்கின்றார்கள் என்பதற்கான நியாயமான விளக்கத்தை அக்கட்சியின் முன்னணித் தீவிர ஆதரவாளர்களால் கூட தர முடியாத நிலையில் இன்று கட்சி தட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கின்றது.

அண்மையில் மூலோபாய அபிவிருத்திச் சட்ட மூலமொன்றை அரசாங்கம் பாராளுமன்றத்தில் கொண்டுவந்த போது, முஸ்லிம் காங்கிரஸ் இதற்கு வாக்களிக்காது ஒதுங்கியிருக்கத் தீர்மானித்தது. உண்மையில் இச்சட்டமூலமானது, இது குறித்த இஸ்லாமிய கண்ணோட்டத்தை வெளிப்படுத்தவும் தார்மீக அடிப்படையிலும் அதனால் ஏற்படப்போகும் சமூக பாதிப்பின் அடிப்படையிலும் இச்சட்டமூலத்தை எதிர்த்த தரப்புகளுடன் உறுதியான நிலைப்பாட்டின் அடிப்படையில் இணைந்து செயற்பட்டிருப்பதற்கும் கிடைத்த ஓர் அரிய வாய்ப்பாகும். இந்த வாய்ப்பினை மு.கா. நழுவவிட்டது. மு.கா. இற்கு முன்னாலிருந்த இரு தெரிவுகளின் ஒன்று, இச்சட்டமூலத்தை எதிர்த்து வாக்களித்து UPFA இன் எதிர்ப்பினைச் சம்பாதிப்பதும் அதனிடமிருந்து கிடைக்கின்ற வசதி, வாய்ப்புகளை இழப்பதுமாகும்., அடுத்த தெரிவு, இச்சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களித்து இஸ்லாமிய விழுமியங்களை தமது சொந்த நலன்களுக்காக சமரசம் செய்து கொண்டது என்ற கடுமையான விமர்சனத்தை மக்கள் மத்தியில் எதிர்கொள்வது.

மேற்படி சட்ட மூலத்திற்கான வாக்களிப்பின்போது கலந்து கொள்ளாமல் விட்டதன் மூலமாக மு.கா. தான் UPFA உடன் அணி சேர்ந்தும் இருப்பேன், எதிராகவும் இருப்பேன் என்ற நிலைப்பாட்டினை மீளுறுதி செய்வதாக அமைந்தது. இவ்வாறாக மக்களை முட்டாளாக்குவதில் மு.கா. தலைமையானது இதுவரையும் வெற்றி பெற்று வருவதாகவே தோன்றுகின்றது.

### அணிச்சேர்க்கை இதற்கு மேலும் வாய்ப்புகளை பெற்றுத்தரப் போவதில்லை

நடைமுறையில் எப்படிப்பட்ட நோக்கங்களின் அடிப்படையில் பார்த்தாலும் UPFA இன் பங்காளர் கட்சி என்ற வகையில்,



இன்று நாட்டிற்குக் கொள்கை வழிகாட்டியாக இருந்து நாட்டின் செல்திசையைத் தீர்மானித்து வருகின்ற மஹிந்த சிந்தனைக்கு மு.கா. கட்சியும் கட்டுப்பட்டே ஆக வேண்டும். கடந்த பாராளுமன்றத் தேர்தல் பிரசாரத்தின்போது, மஹிந்த சிந்தனையானது மு.கா. இனால் கடுமையாக பரிகசிக்கப்பட்டு விமர்சிக்கப்பட்டது. ஒவ்வொரு பிரசார மேடையிலும் மஹிந்த அரசு முஸ்லிம்களுக்கு எதிரானதாக தரம் தாழ்த்திப் பேசப்பட்டது. இத்தேர்தலுக்கு சில வாரங்களுக்கு முன்னர் நகைப்பிற்கிடமான நிகழ்வு நடைபெற்றது. மு.கா. தலைமை இந்திய வெளிவிவகார செயலாளர் நிருபமா ராவ் அவர்களைச் சந்தித்தபோது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மிகப் பெரும்பாலான சிங்கள மக்களிடமிருந்து பலமான ஆணையைத் தெளிவாகவே பெற்றிருக்கின்றார். இதன் காரணமாக, அவரால் முன்வைக்கப்படக் கூடிய சகலரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்று பெரும்பாலான சிங்கள மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தாகவே இருக்கும். சிங்கள பெரும்பான்மை ஆதரவு என்பது ஓர் அரசியல் தீர்வினை வடிவமைப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் மிகவும் பிரதானமானதாகும் (ஐலண்ட் 2010 மார்ச் 11) என மு.கா. தலைமை ஒப்புக்கொண்டிருந்தது.

ஏற்கனவே குறிப்பிட்டது போலவே, தேர்தலுக்குப் பின்னர் UPFA குறித்தொரு நோக்கத்திற்காக மு.கா.இனை ஆசைகாட்டி வசீகரித்துத் தன்னுடன் கூட்டணி சேர்த்துக் கொண்டது. உண்மையில், UPFA இற்கு இன்று பாராளுமன்றில் போதுமான பெரும்பான்மை ஆசனங்கள் உள்ளன. மஹிந்த சிந்தனையை நடைமுறைப்படுத்துவதற்கு மு. கா. இன் ஆதரவு அவசியமில்லை. மேலும், UPFA கூட்டணியிலுள்ள முஸ்லிம் எம்பிக்கள் எவருமே முஸ்லிம் சமூகத்தின் நலனில் நின்று அரசுடன் பேரம்பேசுவதற்கான சக்தி அற்றவர்களாகவே உள்ளனர்.

அண்மையில் நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தல்களில், மு. கா. சில மாகாணங்களில் UPFA உடன் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் போட்டியிட்ட அதேசமயம், வேறு சில மாகாணங்களில் (கணிசமான முஸ்லிம் வாக்குகள் உள்ள மாகாணங்களில்) தனது மரச் சின்னத்தில் தனியாகவும் போட்டியிட்டது. ஜோர்ஜ் புஷ் கொடுத்த அதே தெரிவுகளை UPFA மு.கா.வுக்கு கொடுத்திருக்க முடியும். அதாவது, நீங்கள் ஒன்று, எம் பக்கம் அல்லது எமது எதிராளிகள் என்று. ஆனால், தற்போது நிலவுகின்ற அரசியல் சூழலில் மேற்படி தேர்தல் ஏற்பாட்டிற்கு UPFA உடன்பாட்டிற்கு இணங்கியது. இதற்குக் காரணம், மு. கா. பட்டியலில் எவரேனும் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் கூட, அவர்களால் தனித்து நின்று செயற்பட முடியாது. மாறாக, மத்திய அரசாங்கத்தில் மு.கா. கூட்டணி சேர்ந்திருக்கும் வரைக்கும் UPFA இன் ஆணைக்கு மு.கா. உறுப்பினர்கள் கட்டுப்பட்டே ஆக வேண்டும்.

மு. கா. அதிகாரத்துவமானது இவ்வாறான சந்தர்ப்பவாதப் போக்கினை தனது திறமையான அரசியல் நகர்வாக, அரசியல் காய்நகர்த்தலாக பெருமை பீற்றிக்கொள்கின்றது. ஆனால் இப்போக்கானது ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தையே நம்பத்தகுதியற்ற சமூகமாக, கொள்கை கோட்பாடுகள் அற்ற சமூகமாக மற்றைய சமூகங்களின் மத்தியில் தரக்குறைப்புச் செய்கின்றது. இன்று அதிகரித்து வரும் முஸ்லிம் விரோதப் போக்கிற்கு வலுச் சேர்ப்பதில் ஒரு வகையில் இது பங்களிப்புச் செய்வதாகவும் அமைகின்றது.

### பிரதான நீரோட்டத்திற்குத் திரும்புதல்

பயங்கரவாதம் முடிவிற்குக் கொண்டு வரப்பட்டதுடன், முஸ்லிம்களின் குரலுக்கு அதுவரை எல்.ரீ.ரீ.ஈ. தரப்பிலிருந்து வந்த அச்சுறுத்தல் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது. முஸ்லிம் சமூகமும் கூட பல்வேறு அதிகாரத் தரப்புகளில் இருந்தும் காட்டப்பட்ட பாகுபாடுகளுக்குப் பலியான சமூகமாகவே இருந்து வந்தது. ஆனால் தமது துன்ப துயரங்களை வெளிப்படுத்துவதில் அவர்கள் ஒரு தொடர்ச்சியான தன்மையை வெளிக்காட்டுவதில் இயலாமை கொண்டிருந்தனர். எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் மறைவினைத் தொடர்ந்து மு. கா. கட்சியானது கட்டமைப்பு ரீதியில் ஒரு சிதறுண்ட நிலைக்குச் சென்றதற்குத் தொடர்ச்சியாகவே சான்று பகன்றது. தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கூட தன்னுடன் ஓரணியில் வைத்துக்கொள்ள முடியாத நிலைக்கு மு. கா. தள்ளப்பட்டது. ரவூப் ஹக்கீமின் தலைமையின் கீழ் மு. கா. UPFA, UNP ஆகிய அரசாங்கங்களுக்கும் இடையில் அல்லாடிக் கொண்டிருக்கின்றது. பாராளுமன்றத்திற்குத் தெரிவான மு. கா. அங்கத்தவர்களில் பெரும்பாலானவர்கள் அதிகாரத்திற்காகவும் சலுகைகளுக்காகவும் ஆட்சியிலுள்ள அரசாங்கங்களுடன் இணைய விரும்புபவர்களாகவே காணப்பட்டனர். இதன் விளைவாக, மு. கா. கட்சியானது யதார்த்தத்தில், வெவ்வேறு துண்டுகளாக உடைந்து, மற்றைய சமூகங்கள் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கும் நிலைக்கு தகுதியிழந்துபோய்க் கிடக்கின்றது. முஸ்லிம்கள் தாமும் இந்நாட்டின் சம உரிமையுள்ள பிரஜைகளாக கருதி மதிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருவதனை வெளிப்படுத்துவதற்கு முஸ்லிம்களின் குரல்களை ஒன்றுபடுத்துவதற்கென உருவாக்கப்பட்ட ஒரு கட்சியின் நிலை இப்படியானது.

இலங்கை பல்லின, பல் சமூக, பல மொழிகளைப் பேசுகின்ற மக்களைக் கொண்ட ஒரு நாடாகும். இங்குள்ள அனைத்துப் பிரஜைகளும் சமத்துவமான உரிமைகளை அனுபவிப்பதுடன், எந்தவித அச்சமும் பீதியும் இன்றி தமது வாழ்வின் இலக்குகளை அடைவதற்கான வாய்ப்புகளையும் சமமாகப் பெற்றிருக்க வேண்டும். இதுவரை எந்தவோர் அரசாங்கமும் இக்கோட்பாட்டினை இதய சுத்தியாக நடைமுறைப்படுத்தவில்லை.

➡ 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கா இறங்கி வந்து மோடிக்கு அழைப்பு




புதிய பிரதமர் மோடியை அமெரிக்கா வருமாறு ஜனாதிபதி ஒபாமா விடுத்துள்ள அழைப்பை மோடி ஏற்றுக்கொண்டுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 2002 ஆம் ஆண்டு குஜராத் மாநிலம் கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தை காரணங்காட்டி மோடி அமெரிக்கா வருவதற்கான வீஸாவை அமெரிக்கா இரத்துச் செய்திருந்தது. இந்நிலையில் நடந்து முடிந்த தேர்தலில் மோடி அமோக வெற்றி பெற்று பிரதமராக பதவியேற்றுக் கொண்டார். பதவியேற்பு விழாவின்போது சார்க் அமைப்பு நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்து உலக நாடுகளின் தலைவர்கள் கவனத்தை தன்பக்கம் ஈர்த்துள்ளார் மோடி.

மோடியின் வழிகாட்டுதலையடுத்து இங்கிலாந்து, ஜேர்மனி, ஜப்பான் போன்ற நாடுகள் போட்டிபோட்டுக் கொண்டு தங்கள் நாடுகளுக்கு வரும்படி அழைப்பு விடுத்துள்ளன. இதனையடுத்து அமெரிக்காவும் தன்னுடைய நிலையிலிருந்து இறங்கிவந்து மோடியை தங்கள் நாட்டிற்கு வரும்படி அழைப்பு விடுத்துள்ளது.

# முதன்முறையாக மனித உணர்ச்சிகளை அறிந்துகொள்ளும் புதிய ரோபோ அறிமுகம்



மனித உணர்ச்சிகளை அறிந்துகொள்ளும் பெப்பர் என்ற புதிய ரோபோவை ஜப்பானின் சொப்ட் பேங்க் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதனால் குடும்பத்தினரிடமும் நண்பர்களிடமும் தொடர்புகொள்வது போல் இந்த ரோபோக்களிடமும் உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியும் என்றும் அது பல்வேறு பணிகளைச் செய்யும் திறமை கொண்டது என்றும் சொப்ட் பேங்க் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. 1,98,000 யென் விலை கொண்ட இந்த ரோபோ அடுத்த வருடம் பொதுமக்கள் விற்பனைக்கு வரவுள்ளது.

எந்த உணர்வுகளையும் வெளிப்படுத்தாமல் இருப்பவர்களை இதயமற்ற ரோபோக்கள் என்று மக்கள் குறிப்பிடுவதுண்டு. ஆனால் முதன்முறையாக உணர்ச்சிகளையும் இதயத்தையும் கொண்ட ரோபோ தங்களால் அறிமுகப்படுத்தப்படுகின்றது என்று இந்நிறுவனத்தின் தலைமை நிர்வாகியான மசயோஷிசோன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு அமைப்பும் உணர்ச்சிகளை அறியும் ஒரு புதிய தொழிநுட்பமும் இதில் பயன்படுத்தப்படுவதால் இந்த ரோபோவினால் ஒருவரின் சைகைகள், உணர்ச்சி வெளிப்பாடுகள், குரல் தொனிகள் போன்றவற்றை அறிந்துகொள்ள இயலும் என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

# நெல்சன் மண்டேலா விருது அறிமுகம்



நிற வெறிக்கு எதிராக போராடிய தென் ஆபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் சாதனைகளுக்கு மரியாதை செலுத்தும் விதமாக அவர் பெயரில் புதிதாக விருது ஒன்றை வழங்க ஐக்கிய நாடுகள் சபை தீர்மானித்துள்ளது.

நெல்சன் ரோலிலாலா மண்டேலா விருது என்று அந்தப் புதிய விருதுக்கு பெயர் வைப்பதான தீர்மானம் ஐ.நா. சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நெல்சன் மண்டேலாவுக்கு மரியாதை செலுத்துவது, அவரைப் பற்றிப் பேசுவதிலோ அல்லது விழாக்கள் நடத்துவதிலோ அல்ல. அவர் நம்மிடம் அளித்த பொறுப்புக்களை நாம் செயற்படுத்திக் காட்டுவதில்தான் உள்ளது என ஐ.நா. பொதுச் சபையில் அதன் பொதுச் செயலாளர் பான் கீ மூன் கூறினார்.

# இந்திய மாணவர்கள் 24 பேர் மாயம்

ஹைதராபாதைச் சேர்ந்த பொறியியல் துறை மாணவர்கள் 24 பேர் இமாசலப் பிரதேச மாநிலத்துக்கு சென்ற ஞாயிற்றுக் கிழமை (8) சுற்றுலா சென்றிருந்தனர். இதன் போது ஆற்றில் இறங்கி புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தபோது, அங்குள்ள அணையிலிருந்து திடீரென தண்ணீர் திறந்து விடப்பட்டதால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 24 பேரும் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

மாணவர்களை தேடும் பணியில் அதிகாரிகள் மும்முரமாக ஈடுபட்டபோதும், இதுவரையும் அவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன. இச்சம்பவத்துக்கு ஆற்றில் முன்னறிவிப்பின்றி தண்ணீர் திறந்துவிடப்பட்டதே காரணம் என குற்றஞ்சாட்டப்படுகிறது. இதனைக் கண்டித்து அப்பகுதியைச் சேர்ந்த மக்கள், அங்குள்ள தேசிய நெடுஞ்சாலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவர்களை தேடும் பணியில் பாதுகாப்பு படையினர் ஈடுபட்டுள்ளதோடு, ஆற்றின் கரையின் இரு பகுதிகளிலும் வசிக்கும் மக்களிடம், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டவர்களை கண்டால் தகவல் தெரிவிக்கும்படி பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# ரஷ்ய ஜனாதிபதிக்கு ஜி 7 மாநாட்டுக்கு தடை




உக்ரைன் நாட்டில் உள்நாட்டு போரை தூண்டிவிடுவதாக கூறி ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு ஜி 7 மாநாட்டுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா உட்பட பல நாடுகள் ரஷ்யாவுக்கு வெளிப்படையாக மிரட்டல் விடுத்த போதிலும் பிரான்ஸின் நார்மாண்டியில் நடைபெற்ற டிடே கொண்டாட்டங்களில் புடினுடன் பல ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களும் பேச்சு நடத்தியுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

# முதல்வராகிறார் சந்திரசேகர ராவ் உதயமாகிறது தெலுங்கானா மாநிலம்

இந்தியாவின் 29 வது மாநிலமாக தெலுங்கானா தனி மாநிலமாக உதயமாகியது. ஆந்திர மாநிலத்திலிருந்து தெலுங்கானா பகுதி தனி மாநிலமாக பிரிக்கப்பட்டுள்ளது. ஆந்திராவில் சமீபத்தில் மக்களவை தேர்தலுடன் சட்டப் பேரவைக்கும் தேர்தல் நடைபெற்றது. இதில், தெலுங்கானா பகுதியில் டி.ஆர்.எஸ். கட்சியும் சீமாந்திராவில் தெலுங்கு தேசம் பாஜ கூட்டணியும் அமோக வெற்றி பெற்றன. இதன் மூலம், தெலுங்கானாவின் முதல்வராக டி.ஆர்.எஸ். கட்சித் தலைவர் சந்திரசேகர ராவும் சீமாந்திராவில் சந்திரபாபு நாயுடுவும் முதல்வர்களாக பதவியேற்றனர். இதன் மூலம், தெலுங்கானா தனி மாநிலத்தின் முதல் முதல்வர் என்ற பெருமையை ராவ் பெறுகிறார்.

# பாப்பரசர் இலங்கை விஜயம்



புனித 13 ஆவது பிரன்ஸிஸ் பாப்பரசர் எதிர்வரும் ஜனவரி மாதம் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை கத்தோலிக்க திருச்சபை அறிவித்துள்ளது.

ஜனவரி மாதம் 13 ஆம் திகதி இலங்கை வரவுள்ள புனித பாப்பரசர் மூன்று தினங்கள் இலங்கையில் தங்கவுள்ளார். இதற்கு முன்னர் அவர் இலங்கை வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தும் திகதி குறிப்பிடப்படவில்லை. இம்முறை அவர் வருவதற்கான திகதி ஊர்ஜீதப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை கத்தோலிக்கத் திருச்சபையின் அருட் தந்தை காடினல் மல்கம் ரஞ்ஜித் தெரிவித்துள்ளார்.

# விமானம் தொடர்பான தகவல் தருபவருக்கு 50 இலட்சம் அமெரிக்க டொலர்கள்




கடந்த மார்ச் 8 ஆம் திகதி மாயமான எம்.எச். 370 விமானம் தொடர்பில் தகவல் தருபவருக்கு 50 இலட்சம் அமெரிக்க டொலர்கள் வழங்கப்படவுள்ளது.

எம்.எச். 370 விமானம் குறித்த தகவல்களை மலேசிய அரசு சரியாக வெளியிடாததால் இவ்வாறானதொரு முடிவினை முன்னெடுத்துள்ளதாக குறித்த விமானத்தில் சென்ற பயணிகளின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கான பணத்தினை இணைய தளம் மூலமாக வசூலிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# அமெரிக்காவின் நிபந்தனைக்கு ஈரான் இணக்கம்



இந்தியா, சீனா போன்ற நாடுகள் தங்களின் எண்ணெய் தேவைக்காக ஈரானைச் சார்ந்திருப்பதை குறைத்துக்கொள்ளும் அளவுக்கு, சர்வதேச சந்தையில் தேவையான எண்ணெய் வளமுள்ளது. இருப்பினும், அணு ஆயுதத்திட்டத்தில் அமெரிக்காவின் கட்டுப்பாடுகளுக்கு ஈரான் முழு ஒத்துழைப்பும் அளித்து வருவதால், அடுத்த ஆறு மாதங்களுக்கு அந்நாட்டின் மசகு எண்ணெய் விற்பனைக்கு தடை தேவையில்லை என ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற தடைத்தளர்வு நடவடிக்கைகளின் பலனாக, ஈரானும் தனது அணுவாயுத திட்டத்தை நிறுத்திக்கொண்டுள்ளது. இந்த விவகாரத்தில் ஈரான் இணங்கிவருவதை சர்வதேச அணுசக்தி அமைப்பும் உறுதி செய்துள்ளதாக வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளரான ஜேகார்னி தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எகிப்தின் மிக மோசமான பொருளாதாரம் ஸீஸீயின் ஆட்சி நீடிப்புக்கு சவால்விடும்?



ஸகி பவ்ஸ் (நளீமி)

எகிப்தியத் தேர்தல்கள் கீழ்த்தரமான ஒரு நாடகம் மாத்திரமே. தனது நாட்டு மக்களின் மண்டையோட்டின் மீது நடக்கும் இராணுவ அரசுக்கு தேர்தல் போட்டியிட எந்த அருகதையும் இல்லை என டியுனிசிய இஸ்லாமிய சிந்தனையாளர் உஸ்தாத் ராஷித் அல் கன்னூசி குறிப்பிடுகிறார். அது மாத்திரமன்றி, யார் எகிப்தியத் தேர்தல்களில் வாக்களிக்கிறாறோ, அவர் தனது நாட்டுக்கும் மக்களுக்கும் முஸ்லிம் உம்மாவின் எதிர்காலத்திற்கும் தெளிவாக அநியாயம் செய்கிறார் என சர்வதேச அறிஞர்கள் ஒன்றியத்தின் ஊடக அறிக்கையில் கலாநிதி யூசுப் அல்கர்ழாவி தெரிவிக்கிறார். ஐரோப்பிய யூனியன் அமெரிக்க அரச தேர்தல் கண்காணிப்புச் செயற்பாடுகளிலிருந்து விலகிக்கொள்வதாக தேர்தலுக்கு முன்னதாகவே அறிவித்துவிட்டது. எகிப்திய இஃவான் அல் முஸ்லிமூன் இயக்கம் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு நாட்டு மக்களை வேண்டிக்கொண்டது.

இத்தகைய தேசிய மற்றும் சர்வதேச புறக்கணிப்புக்கு மத்தியில் இடம்பெற்ற எகிப்தியத் தேர்தல்களில் இராணுவச் சர்வதிகாரி அப்துல் பத்தாஹ் ஸீஸீ 90 வீத வாக்குகளைப் பெற்று அமோக வெற்றியீட்டியுள்ளார். எகிப்திய தேர்தல் வரலாற்றிலேயே மிகக் குறைவான வாக்குப் பதிவு இடம்பெற்ற தேர்தல்களில் 2014 ஆம் ஆண்டின் போலி ஜனாதிபதித் தேர்தலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இம்முறை ஜனாதிபதித் தேர்தல்களில் வெறும் 30 வீதத்திற்கும் குறைவான வாக்குகளே பதிவு செய்யப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வமற்ற அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. கைரோ நகரில் பல வாக்குச்சாவடிகள் வெறிச்சோடிக் கிடந்த காட்சிகள் ஸீஸீயின் தேர்தல் வெற்றியை அப்படியே கேள்விக்குள்ளாக்கியுள்ளது. நடந்து முடிந்த தேர்தல்களில் இடம்பெற்ற படுமோசமான ஜனநாயக விரோத செயற்பாடுகள் பட்டவர்த்தனமானவை. இதனால், முழுக்க முழுக்க ஸீஸீயை ஆதரித்த மேற்குலகம் தேர்தல் குறித்து வாய்திறக்காமல் மௌனம் காப்பதை சர்வதேச மீடியாக்கள் ஸீஸீயின் தேர்தல் வெற்றியைப் பற்றி அடக்கி வாசிப்பதிலிருந்து புரிந்துகொள்ள முடியுமாக இருக்கிறது.

இம்முறை எகிப்தியத் தேர்தல்களில் எல்லாவற்றையும் விட சுவாரஷ்யமான நகைச்சுவை என்னவென்றால், தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பாதையில் இறங்கி இரவு பகலாக பிரசாரம் செய்த நாஸிரிய ஹம்தீன் சப்பாஹிக்கு வெறும் 3 வீத வாக்குகளும் நேரடியாகத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டால் தான் மக்களால் கொல்லப்படுவேன் என்ற அச்சத்தால், ஒரு முறையாவது மக்கள் முன்னால் தோன்றாமல் இருந்த ஸீஸீ இற்கு 90 வீத வாக்குகளும் கிடைத்தாகும்.

### ஸீஸீ ஆட்சி நிலைக்குமா?

ஸீஸீயின் தேர்தல் வெற்றி குறித்து சமீபத்தில் எழுதிய கட்டுரையொன்றில் எகிப்திய வரலாற்றில் சவால்மிக்க, சிக்கலான மற்றும் பயங்கரமான காலகட்டமொன்றில் ஸீஸீ ஜனாதிபதி பதவியை பொறுப்பேற்கிறார் என எழுதப்பட்டிருந்தது. ஏனென்றால், எகிப்திய தேசம் மிகக் கொடூரமான பொருளாதார மந்த நிலையொன்றினை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது. முதலீட்டாளர்கள் மூட்டை கட்டிக்கொண்டு வெளியேறத் துவங்கியுள்ளனர். பணவீக்கம் முன்னணி அரசியல்வாதிகளின் வயிறுகளையே கடிக்க ஆரம்பித்துள்ளது. நாளுக்கு நாள் வறுமையை நோக்கி தள்ளப்படுபவர்களின் விகிதாசாரம் கட்டுப்பாடில்லாமல் அதிகரித்துக் கொண்டு செல்கிறது. மிக முக்கியமாக, சிறந்த முதலீட்டுக்கான தேசம் பற்றிய சர்வதேச தரப்படுத்தல்களின் அறிக்கைகளின்படி, கடந்த 2013 ஜூலை இராணுவப் புரட்சி நடந்த மாதம் முதல் இவ் வருடம் ஏப்ரல் வரை எகிப்து 16 முறை தரப்படுத்தல்க[illegible] பட்டுள்ளது. [illegible] எகிப்திய திவை வரம் பற்றிய இங்கிலாந்தின் 'த கார்டியன்' பத்திரிகையின் கட்டுரையொன்றில், 1930 இற்குப் பின்னரான மிக மோசமான பொருளாதாரநெருக்கடியை (Egyptisfacing the worst economic crisis since 1930) எகிப்து தற்போது சந்தித்துக் கொண்டிருக்கிறது என ஊடகவியலாளர் கென்ரி பெட்ரிக் குறிப்படுகிறார். சர்வதேச ஆய்வகம் (Global Research) இன்னுமொரு சமூகப் புரட்சியின் விளிம்பில் எகிப்து நிற்கிறது (Egypt at verge of a social explosion) என எகிப்தின் பொருளாதார வீழ்ச்சி பற்றிய ஆய்வறிக்கையில் அடையாளப்படுத்திக் காட்டுகிறது.

உள்நாட்டின் அமைதியின்மையால் எகிப்தின் உல்லாச நகரமான அலக்ஸ்சாரியாவின் ஹோட்டல்களை இழுத்து மூடும் நிலைக்கு நாட்டின் உல்லாசப் பிரயாணத்துறை வீழ்ச்சி கண்டுள்ளது. அது மாத்திரமன்றி, கீழ்வரும் தகவல்கள் எகிப்திய பொருளாதாரத்தின் அவமான நிலை குறித்த ஆய்வகம் (Global Research) வெளியிட்ட அறிக்கையின் சில குறிப்புகளாகும்:

- வறுமைமட்டம் 40 வீதமாக அதிகரித்துள்ளது
- வேலையற்றோர் மட்டம் 13 வீதமாக அதிகரித்துள்ளது
- ஒவ்வொரு வருடமும் 80,000 இளைஞர்கள் தொழிற் சந்தைக்கு வருகின்றனர்
- பொருளாதார மந்தநிலை கல்விமட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது
- உல்லாசப் பயணத்துறையில் 1 மில்லியன் மக்கள் தொழில்வாய்ப்புகளை இழந்துள்ளனர்

2000 ஆம் ஆண்டு 16 வீதமாக இருந்த வறுமைமட்டம் 2013 இல் 26.3 வீதமாக அதிகரித்துள்ளது. நகர்ப்புறங்களில் வறுமைமட்டம் 40 வீதமாக அதிகரித்துள்ளதாகவும் அந்நிறுவனம் சுட்டிக்காட்டுகிறது.

2013 இல் இறுதியில் வேலையற்றோர் மட்டம் 13 வீதமாக அதிகரித்துள்ளது. இன்னும் பதிவு செய்யப்பட்ட ஊழியப் படையை மட்டுமே மையப்படுத்தி இம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளமையும் நோக்கத்தக்கது. Global Research ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ள அம்சம் என்னவென்றால், எகிப்தின் சமீபத்திய மதிப்பீடுகளின்படி, வேலையற்றோரில் அதிகமானவர்கள் 15 இற்கும் 29 இற்கும் இடைப்பட்டவர்கள் ஆவர். ஒவ்வொரு வருடமும் 80,000 இளைஞர்கள் தொழிற் சந்தைக்கு வருகின்றனர். எதிர்வரும் காலங்களில் அதி உச்ச பொருளாதாரத் திட்டமிடல்களும் ஜனநாயக மாற்றங்களையும் காணாமல் இளைஞர்களின் தொழிலுக்கான கேள்விகளை எகிப்திய தொழிற்சந்தையால் நிறைவேற்ற முடியாது என்பதாகும். இதனால், அடுத்த தனது தேவையை, அடுத்த அரசு நிறைவேற்றாத போது எதுவும் எதிர்மறையாக நிகழலாம் என அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

மேலும் உள்ளகப் பொருளாதார மந்த நிலை மிக வேகமாக எகிப்திய கல்வி மட்டத்திலும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. அனைத்து அரச பாடசாலைகளும் தேவையான அளவை விட குறைவாகவே நிதியீட்டம் செய்யப்படுகின்றன. எகிப்தின் மீனா பிராந்தியத்தில் எழுத்தறிவற்ற வீதமானது 36 உம் பயூமில் 34 வீதத்தையும் உஸயூத் பிராந்தியத்தில் 31 வீதத்தையும் அடைந்துள்ளதாக Global Research ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

உல்லாசப் பயணத்துறையே எகிப்திய பொருளாதாரத்தின் பிரதான நிதி உட்பாய்ச்சலுக்கான மூலமாகும. ஆனால், இராணுவப் புரட்சியின் பிற்பாடு ஏற்பட்ட அசாதாரண நிலையானது, எகிப்திய உல்லாசப் பயணத்துறையில் 1 மில்லியன் மக்கள் தங்களது தொழில்வாய்ப்புக்களை இழந்துள்ளனர். இவ்வீழ்ச்சியானது கிட்டத்தட்ட 36 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இறுதியில் 2014 ஆம் ஆண்டு எகிப்திய பாதீடானது 44 பல்லியன் டொலர்கள் நிதிப் பற்றாக்குறையை சந்திக்கலாம் என Global Research ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இத்தனை பயங்கரமான பொருளாதாரப் பிசாசுகள் ஸீஸீயை எதிர்பார்த்திருக்கின்றன. எகிப்திய இராணுவ அரசாங்கம் வெறுமனே வளைகுடா பெருச்சாளி மாமன்னர்களின் பெட்ரோ டொலர்களின் தயவில்தான் தங்கியுள்ளமை மிகத் தெளிவானது. ஆனாலும், அம்மாமன்னர்களால் எகிப்தை தூக்கிநிறுத்த முடியாது என்பது வரலாறு கற்றுத்தரும் படிப்பனை. எனவே, பொருளாதாரப் பிரச்சினை என்ற பகல் பூதம் ஸீஸீயை விழுங்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கேள்வி அல்ப்பரட் நோபலை அழியாப் புகழ் பெற வைத்தது


நோபல் பரிசு பெற்றவர்களை நாம் கொண்டாடுகிறோம். ஆனால், நோபல் பரிசு ஏன் தோற்றுவிக்கப்பட்டது? அந்த நடைமுறையைத் தோற்றுவித்தவர் யார்? என்ற கேள்விக்கு விடை பெரும்பாலானோருக்கு தெரியாது.

தனது மரணச் செய்தியைப் பத்திரிகையில் படிக்கும் பாக்கியம் பெரும்பாலானோருக்குக் கிடைப்பதில்லை. ஆனால், சுவீடனைச் சேர்ந்த, டைனமைட்டைக் கண்டுபிடித்த, அல்பரட் நோபல் என்பவருக்கு 1888 இல் அந்தச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஒரு பிரெஞ்சுப் பத்திரிகை, 'மரணத்தின் வர்த்தகன் மரணம்' என்று பெரிய எழுத்தில் தலைப்புச் செய்தியாக தவறுதலாக அவரது மரணச் செய்தியை வெளியிட்டது. அந்தச் செய்தியை அல்ப்ரட் நோபல் படித்துப் பார்த்தார்.

"மனிதர்களை விரைவாகக் கொன்று குவிக்கும் வழிகளைக் கண்டுபிடித்து கோடிக்கணக்கில் பணம் சம்பாதித்த டாக்டர் அல்ப்ரட் நோபல் நேற்றுக் காலமானார்" என்பதுதான் அந்தச் செய்தியின் கரு. அல்ப்ரட் நோபலை அந்தச் செய்தி மிகவும் பாதித்தது. "நான் இறந்த பின் உலகம் என்னை இப்படியா நினைவு வைத்துக்கொள்ள வேண்டும்?" என்ற ஒரு கேள்வி அவர் மனதில் பிரதானமாக எழுந்தது. அவர் மனம் அவரது வாழ்க்கையை ஏழு கணம் திரும்பிப் பார்த்தது.

அவருடைய தந்தை இம்மானுவல் நோபல் மிகச் சிறந்த அறிவாளி. இப்போது நாம் உபயோகிக்கும் 'பிளைவுட்' டைக் கண்டுபிடித்தது இம்மானுவல் நோபல் தான் என்று சொல்கிறார்கள். அவருக்குப் பிறந்த அல்ப்ரட் நோபல், அறிவில் தந்தையை மிஞ்சியவராக விளங்கினார். பதினேழு வயதிற்குள் ஆங்கிலம், பிரஞ்சு, ரஷ்ய, ஜேர்மன், சுவிடிஸ் என ஐந்து மொழிகளில் நல்ல புலமை பெற்றிருந்தார். பிற்காலத்தில் இத்தாலிய மொழியையும் படித்தார். வேதியியல், பௌதீகம் இரண்டிலும் ஆர்வம் கொண்டிருந்த அவருக்கு ஆங்கில இலக்கியத்திலும் நல்ல புலமை இருந்தது. மகனின் இலக்கிய தாகம் அவருடைய தந்தைக்கு அவ்வளவாக பிடிக்காததால் வேதியியல் பொறியியாளராக மேற்படிப்பு படிக்க வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தார்.

ஒரு பல்கலைக்கழகத்தில் அவருடன் படித்த இத்தாலிய மாணவர் அஸ்கேனியோ சொப்ரேரோ கண்டுபிடித்த நைட்ரோக்ளிசரின் என்ற வெடிமருந்து திரவம் அல்ப்ரட் நோபலை மிகவும் ஈர்த்தது. தன் அறிவுத்



திறமையை நன்றாக வளர்த்துக்கொண்டு தாயகம் திரும்பிய பிறகு, அல்ப்ரட் நோபல் வெடி மருந்துகளைத் தயாரிப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டினார். ஒரு முறை அவருடைய தொழிற்சாலை வெடித்துச் சிதறியதில் அவருடைய இளைய சகோதரர் உட்பட பலர் மரணமடைந்தனர். ஆனாலும் அவருடைய ஆர்வம் அந்தத் துறையில் குறையவில்லை. பின்னர் வெற்றியும் செல்வமும் அவரிடம் பெருக ஆரம்பித்தன.

இத்தனை சாதனைகள், வெற்றிகளுக்குப் பின்னால் தன் மரணத்திற்குப் பிறகு, "மரணத்தின் வர்த்தகன்" என்றுதானா தன்னை உலகம் நினைவுகூற வேண்டும் என்ற கேள்வி அவரை நிறையவே நெருடியது. குறுகிய

> **இத்தனை சாதனைகள் வெற்றிகளுக்குப் பின்னால் தன் மரணத்திற்குப் பிறகு "மரணத்தின் வர்த்தகன்" என்றுதானா தன்னை உலகம் நினைவுகூற வேண்டும் என்ற கேள்வி அவரை நிறையவே நெருடியது**

காலமே அவருக்குக் காரியதரிசியாக இருந்த பெர்தாவோன் சட்னர் என்பவரும் அவர் வாழ்க்கையில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தினார். அவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்கள் பலர் ஒஸ்ட்ரியப் பெண்மணி ஒருவரை அவருடைய காதலி என்று கூறினாலும் அந்தப் பெண்மணி வேறு ஒருவரை மணத்து கொண்டார். ஆனாலும் அவருடைய நட்பு கடிதப் போக்குவரத்து மூலம் அவருடைய மரணம் வரை நீடித்தது. அந்தப் பெண்மணியும் அமைதியின் முக்கியத்துவத்தையும் போரின் கொடுமைகள் குறித்தும் அவரிடம் சொல்பவராக இருந்தார். அந்தப் பெண்மணி எழுதிய, "ஆயுதங்களைக் கைவிடுங்கள்" என்ற புத்தகம் அந்தக் காலத்தில் மிகவும் புகழ் பெற்றது.

அந்தக் கேள்வியும் அந்தத் தோழியின் சினேகிதமும் வாழ்க்கையில் ஆக்கபூர்வமாக ஏதாவது செய்ய அல்ப்ரட் நோபலைத் தூண்டியது. உலகம் தன்னை ஆக்கபூர்வமான விஷயங்களுக்காகவே நினைவுகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில், தான் அது வரை சேர்த்துவைத்த சொத்துக்களை உலக நன்மைக்கும் பயன்படும் மனிதர்களுக்கும் நிறுவனங்களுக்கும் அளிக்கும் நோபல் பரிசுகளாக வருடா வருடம் அளிக்கப் பயன்படுத்துமாறு உயிலை எழுதினார்.

1896 ஆம் ஆண்டு அல்ப்ரட் நோபல் காலமானார். ஆரம்பத்தில் வேதியியல், பௌதீகம், மருத்துவம், இலக்கியம் என்ற நான்கு பிரிவுகளுக்கும் மட்டுமே நோபல் பரிசுகள் வழங்கப்பட்டன. பின்னர் அமைதிக்காகவும் வழங்க முடிவு செய்யப்பட்டது. கடைசியாக பொருளாதாரமும் நோபல் பரிசிற்கான துறையாக சேர்த்துக் கொள்ளப்பட்டது.

1901 ஆம் ஆண்டு ஆரம்பமான நோபல் பரிசுகள் இன்று வரை உலகின் மிகப் பெரிய பரிசாகக் கருதப்படுகின்றன. உலகம் அல்ப்ரட் நோபலை அவர் நினைத்தபடியே இன்று நல்ல விடயங்களுக்காகவே நினைவு வைத்திருக்கிறது.

ஒரு கேள்வி ஒரு மனிதரை அழியாப் புகழ் பெற வைத்தது என்றால் அந்தக் கேள்வி மிக மிக உன்னதமானதுதானே. இந்தக் கேள்வியை நாமும் எமக்குள் கேட்டுக் கொண்டால் என்ன? நாமும் எமக்குள் இவ்வாறான கேள்விகளை கேட்டு திருத்திக் கொள்வோம்.

இம்லா இக்பால்
நாம்புளுவ பஸ்யால

---






# மனிதர்கள் என்றால் பகுத்தறிவுள்ளவர்கள்

முல்லை மலர் என்ற காட்டில் விறகு வெட்டுவதற்காக சென்று கொண்டிருந்தான், விறகுவெட்டி ஒருவன். அப்போது காட்டில் எங்கிருந்தோ சிங்கத்தின் கர்ஜினை கேட்டது. பயத்துடன் ஓடத்தொடங்கினான் அவன். மனிதனே பயப்படாதே! இங்கே வா! நான் உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன் என்ற குரல் கேட்டது.

தயக்கத்துடன் குரல் வந்த திசையை நோக்கிச் சென்றான், அந்த விறகுவெட்டி. அங்கு ஒரு கூட்டில் சிங்கமொன்று அடைபட்டிருந்தது. வேட்டைக்காரர்கள் சிலர் சிங்கத்தை உயிருடன் பிடிப்பதற்காக ஒரு கூடு செய்து அதற்குள் ஓர் ஆட்டை விட்டு வைத்திருந் தனர். ஆட்டிற்கு ஆசைப்பட்ட சிங்கம் கூட்டிற்குள் மாட்டிக்கொண்டது.

அவனைப் பார்த்த சிங்கம், மனிதனே! என்னை இந்தக் கூட்டிலிருந்து விடுவித்து விடு; நான் உனக்குப் பல உதவிகளைச் செய்வேன், என்றது.

நீயோ மனிதர்களைக் கொன்று தின்பவன். உன்னை எப்படி நான் விடுவிக்க முடியும்? என்றான் விறகுவெட்டி.

மனிதர்களைக் கொல்லும் சுபாவம் எங்களுக்கு உண்டுதான். அதற்காக உயிர்காக்கும் உன்னைக் கூடவா அடித்துக் கொன்று விடுவேன். அவ்வளவு நன்றியில்லாதவனா நான்? பயப்படாமல் கூட்டின் கதவைத் திற. உன்னை ஒன்றும் செய்யமாட்டேன் என்று மிக சாதாரணமாகப் பேசியது சிங்கம்.

சிங்கத்தின் வார்த்தையை நம்பிவிட்டான் அவன். கூட்டின் கதவைத் திறந்தான். அவ்வளவுதான்! சிங்கம் அந்த விறகுவெட்டியின் மேல் பாய்வதற்கு தயாராயிற்று.

இதனைக் கண்ட அவன் ஏ.. சிங்கமே! நீ செய்வது உனக்கே நியாயமா? உன் பேச்சை நம்பி உன்னைக் கூட்டிலிருந்து விடுவித்தேனே அதற்கு இதுதானா நீ காட்டும் நன்றி, என்றான்.

என் உயிரைக் காத்துக் கொள்வதற்காக நான் ஆயிரம் பொய் சொல்லுவேன். அதை நீ எவ்வாறு நம்பலாம்? மனிதர்கள் என்றால் பகுத்தறிவுள்ளவர்கள் என்றுதானே பொருள். அந்த அறிவைக் கொண்டு இது நல்லது, இது கெட்டது என்று பகுதித்தறிய வேண்டாமா? முட்டாள்தனமான உன் செய்கைக்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும்? என்றது சிங்கம்.

கடவுள் உன்னை தண்டிப்பார். உன் உயிரை காப்பாற்றிய என்னையே சாப்பிடுவது நியாயமா? உன்னை விடுவித்ததற்கு இம்மாதிரி நடந்து கொள்வது முறையல்ல, என்றான் மீண்டும் அவன்.

அதே சமயத்தில் அவ்வழியாக ஒரு நரி வந்தது.

இதனிடம் நியாயம் கேட்போம், என்று கூறிய விறகுவெட்டி நடந்த கதையனைத்தையும் நரியிடம் கூறினான்.

எங்கள் தொழில் அனைவரையும் அடித்துக் கொன்று சாப்பிடுவதுதான். இது இவனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் என்னைக் கூட்டிலிருந்து விடுவித்தான். முட்டாள்தனமான இந்தச் செய்கைக்கு உரிய பலனை இவன் அனுபவித்தே தீர வேண்டும். நீ என்ன சொல்ற நரியாரே, என்றது சிங்கம்.

அனைத்தையும் கேட்ட நரி,நீங்கள் இந்த மாதிரி சொன்னால் எனக்கு ஒன்றுமே புரியல. ஆரம்பத்திலிருந்து சொல்லுங்கள், என்றது நரி.

உடனே சிங்கம் சொல்லத் தொடங்கியது...

நான் அந்தக் கூட்டிற்குள் அடைந்து கிடந்தேன்.

எந்தக் கூட்டிற்குள்? என்றது நரி.

அதோ இருக்கிறதே அந்தக் கூட்டிற்குள், என்றது சிங்கம்.

எப்படி அடைந்து கிடந்தீர்கள்? என்றது நரி.

சிங்கம் விடுவிடுவென்று கூட்டிற்குள் சென்றது. இதுதான் சமயம் என்று கருதிய நரி சட்டென்டு கூட்டின் கதவை இழுத்து மூடியது.

நரியாரே! இது என்ன அயோக்கியத் தனம்! நியாயம் கூறுவதாகக் கூறி என்னை மறுபடியும் கூட்டில் அடைத்துவிட்டீரே! என்று கத்தியது சிங்கம்.

நீங்கள் பேசாமல் கூட்டிற்குள்ளேயே இருங்கள். நான் ஒன்றும் இந்த மனிதனைப் போல் முட்டாள் அல்ல. உங்களுக்குச் சாதகமாக நியாயம் சொன்னால் முதலில் இந்த விறகுவெட்டியை அடித்துக் கொல்வீர்கள். பிறகு என்னையே அடித்துக் கொன்றுவிடுவீர்கள். அதனால்தான் உங்களைக் கூட்டிற்குள் செல்லுமாறு செய்து கதவைப் பூட்டிவிட்டேன், என்று நரி.

நன்றி மறந்த சிங்கம் தன் நிலையை நினைத்து நொந்துபோனது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்கள் தேசம்

தயாரிப்பு: சமீலா யூசுப் அலி

# கருமையான நீண்ட கூந்தலைப் பெற வீட்டு வைத்தியம்



கூந்தல் உதிர பல காரணங்கள் உள்ளன. அந்த காரணங்களைக் கண்டறிந்து நிவர்த்தி செய்தால் கூந்தல் உதிர்வை தடுக்கலாம். கூந்தல் அடர்த்தியாக, கருமையாக வளர சில எளிய இயற்கை முறைகள் உள்ளன.

விட்டமின் பி குறைவினால் விரைவில் தலை முடி நரைக்க ஆரம்பிக்கும். ஊட்டச் சத்துமிக்க உணவே இக்குறைபாட்டை நீக்கும். நெல்லிக் காயையும் ஊறவைத்த வெந்தயத்தையும் நன்றாக அரைத்து, அந்த விழுதைத் தலையில் பூசி, ஊறவைத்து குளித்தால் உடலுக்கு குளிர்ச்சி ஏற்படுவதுடன், கண் எரிச்சலையும் போக்கும்.

அழுகிய தேங்காயை தூக்கி எறியாமல், அதனுடன் சிறிது சுடு நீர் சேர்த்து அரைத்து, தலையில் தடவி ஊறவைக்கவும். பிறகு நன்றாக மசாஜ் செய்தால் மயிர்க்கால்கள் வலுப்பெறும்.

இரண்டு ஸ்பூன் வினிகருடன் கடலை மாவைக் குழைத்து கால் மணி நேரம் ஊறவைக்கவும். இதை மயிர்கால்களில் படும்படி பூசி, அரை மணி நேரம் கழித்து அலசினால் பொடுகுத் தொல்லை போய்விடும்.

தேங்காயை தண்ணீர் சேர்க்காமல் அரைத்து பால் பிழியவும். இதை இரும்பு கடாயில் காய்ச்சினால் எண்ணெய் தனியாக வரும். அந்த எண்ணெயை, தலையில் தடவி ஊறிய பின், சீயக்காய் அல்லது கடலை மாவு தேய்த்து அலசவும்.

நல்ல மரச் சீப்பினால் அழுத்த வாரினால், மயிர்க்கால்களில் இரத்த ஓட்டம் அதிகமாவதோடு முடி வளர்வதும் தூண்டப்படுகிறது.

சாதம் வடித்த கஞ்சியில் வெந்தயப் பொடி, பயத்த மாவு கலந்து ஊறவைத்து தேய்த்துக் குளிக்கலாம்.

விளக்கெண்ணெயை போல உடலுக்கு குளிர்ச்சி தருவது வேறு எதுவும் இல்லை. விளக்கெண்ணெய் இரண்டு டேபிள் ஸ்பூன், தேங்காய் எண்ணெய் ஒரு டேபிள் ஸ்பூன் எடுத்து இலேசாக சுடவைத்து, மயிர்க்கால்களில் நன்றாகப் படும்படி தடவவும். ஒரு பழைய துணியை வெந்நீரில் நனைத்து பிழிந்து, தலையின் மீது சுற்றவும். அந்த சூடு உள்ளே இறங்கும். சற்று ஆறியதும் மீண்டும் அவ்வாறு செய்யவும். பிறகு தலையை ஷாம்பூ போட்டு அலசி விடவும். முடி உதிராமல் இருக்க முத்தான வழி இது.

தலைமுடிக்கு போஷாக்குத் தரும் ஷாம்பூவை வீட்டிலேயே தயாரிக்கலாம். ஒரு பங்கு சீயக்காய், வெந்தயம் கால் பங்கு, பச்சைப் பயறு அரைப் பங்கு, புங்கங்காய் கைப்பிடியளவு எடுத்து மிக்சியில் அரைத்துக் கொள்ளவும். இரசாயனப் பொருட்கள் இல்லாத இந்தப் பொடி, எந்தவித தீங்கும் ஏற்படுத்தாது.

பித்தம் உடலில் அதிகமானாலும் நரை ஏற்படும். இதற்கு, கசகசாவும் அதிமதுரமும் சம அளவு எடுத்து பொடி செய்து, பசும்பாலில் குழைத்து, தலையில் தடவி ஊறிய பின் குளித்தால் விரைவில் குணம் தெரியும்.

தேங்காய் எண்ணெய் தடவிக்கொள்ளும் வழக்கம் இருப்பவர்கள், அந்த தேங்காய் எண்ணெயில் காயவைத்த செம்பருத்திப் பூ மற்றும் ஆல மரத்தின் இளம் வேர்களை பொடி செய்து கலந்து வைத்துக்கொண்டு, தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் முடி கருப்பாக வளரும்.

வெயிலில் அலைந்து வேலை செய்வோர், தினமும் உச்சந்தலையில் விளக்கெண்ணெயை தடவி வந்தால் கண்ணுக்குக் குளிர்ச்சி, முடியும் உதிராது.

## மாதவிலக்கு பிரச்சினைக்கு இயற்கை வைத்தியம்



- எள்ளை தண்ணீரில் போட்டு ஊறவைத்து மறுநாள் காலை அந்த தண்ணீரை குடித்து வந்தால் மாதவிலக்கு பிரச்சினை தீரும்.

- கசகசா, வாழைப் பூ, மிளகு, மஞ்சள் சேர்த்து கஷாயம் வைத்து குடித்தால் இரத்த உற்பத்தி அதிகரிக்கும்.

- கடுக்காய், மருதம் பட்டை, ஆவாரம் பூ ஆகியவற்றில் தலா 200 கிராம் எடுத்து பொடித்துக் கொள்ளவும். ஒரு டம்ளர் தண்ணீரில் 5 கிராம் பொடியை போட்டு கொதிக்கவிட்டு கஷாயமாக்கி குடித்தால் தடைபட்ட மாதவிலக்கு சரியாகும். அதிக இரத்தப்போக்கும் நிற்கும்.

- கருஞ்சீரகத்துடன் பனை வெல்லம் சேர்த்து சாப்பிட்டால் தடைபட்ட மாதவிலக்கு சரியாகும்.

- கல்யாண முருங்கை இலையை கருப்பு எள் ஊற வைத்த தண்ணீரில் அரைத்து காலை, மாலை இரண்டு வேளையும் சாப்பிட்டால் தடைபட்ட மாதவிலக்கு சீராகும்.

- கல்யாண முருங்கைக் கீரை, மிளகு, பூண்டு சேர்த்து வேகவைத்து சாப்பிட்டால் இரத்தச் சோகை குணமாகும்

- கீழாநெல்லி வேரை இடித்து சாறு பிழிந்து, பாலில் ஒரு ஸ்பூன் கலந்து குடித்தால் அதிக இரத்தப்போக்கு நிற்கும்.

- கீழாநெல்லி, கரிசாலை இரண்டையும் சம அளவில் எடுத்து அரைத்து தினமும் பத்து கிராம் அளவுக்கு சாப்பிட்டு வந்தால் இரத்தசோகை குணமடையும்.

# வாய் நாற்றத்திற்கு இயற்கை மருத்துவம்

ஒரு சிலர் வாயைத் திறந்தாலே நமக்கு தலைசுற்றி மயக்கமே வந்துவிடும். இருப்பினும் நமது வாய் நாறுகிறதா என நம்மால் அறிந்துகொள்ள முடியாது. வாயை சுத்தமாக வைத்துக்கொள்ளா விட்டால் வாய் துர்நாற்றம் வரும். இருப்பினும் கவலை வேண்டாம் வாய் நாற்றம் குணப்படுத்த தக்கதே.


- எலுமிச்சை பழச் சாறையும் புதினாச் சாறையும் சரிபாதியாக அரை லீற்றர் நீரில் கலந்து வாய் கொப்பளித்தால், வாய் துர்நாற்றம் நீங்கும்.

- வாய் துர்நாற்றமுள்ளவர்கள் கிராம்பை வாயில்போட்டு மென்று வந்தால் அந்த தொல்லையிலிருந்து விடுபடலாம்.

- வாய் நாற்றத்தை போக்க எலுமிச்சை பழத்தை ஒரு தம்ளர் நீரில் பிழிந்து அதனுடன் சிறிதளவு உப்புக் கலந்து சாப்பிட்டு வரவும். அந்த தண்ணீரைக் கொண்டு வாய் கொப்பளித்து வந்தாலும் நல்லது.

- வாய் துர்நாற்றம் உடையவர்கள் தினமும் காலை எழுந்தவுடன் வெறும் வயிற்றில் குறைந்தது நான்கு டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும்.

- வாயை உப்புக்கரைத்த நீரில் கொப்புளித்து சுத்தமாக வைத்திருப்பதும் பற் குழிகளை பல் மருத்துவர்களிடம் சென்று அடைத்துக்கொள்வதும் தினமும் இரண்டுமுறை பல் துலக்குவதும் வாய் நாற்றத்தை தவிர்க்க உதவும்.



## ஆரோக்கிய தேசம்



## முகப்பரு நீங்க...

### சித்த மருத்துவ முறை

முகப்பருவைக் கிள்ளுவதால் ஏற்படும் கரும்புள்ளியைப் போக்க ஜாதிக்காய் ஒன்றை எடுத்து தேங்காய்ப்பால் சிறிது விட்டு, அரைத்து இரவில் கரும்புள்ளியின் மேல் போட்டு வரவும். தினமும் இதுபோல் செய்து வர சில நாட்களில் கரும்புள்ளி மறைந்து விடும்.

**முகப்பரு கரும்புள்ளி தழும்புகள் நீங்க**

- கோப்பி சந்தனம் ஒரு டீ ஸ்பூன் அளவு
- பாதாம் பருப்பு மூன்று (நீரில் ஊற வைத்தது)
- தயிர் 2 டீ ஸ்பூன்
- எலுமிச்சை சாறு 2 டீ ஸ்பூன்

இவைகளை அரைத்தெடுத்து முகம், கழுத்து பகுதிகளில் பூசி ஒருமணி நேரம் கழித்து கழுவவும். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை செய்துவர முகப்பரு, கரும்புள்ளி தழும்புகள் நீங்கி, முகம் அழகு பெறும்.

**முகத்தில் தழும்புகள் தீப்புண் தழும்புகள் மறைய**

- அரச மர பழுப்பு இலைகளை சேகரித்து எரித்து கரியாக்கி தூள் செய்து தேங்காய் எண்ணெயில் விட்டு குழைத்து வைத்துக்கொள்ளவும். இதனை இரவில் தழும்புள்ள இடங்களில் தடவிவர, தழும்புகள் படிப்படியாக மறையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐக்கிய மக்கள்...

(11 ஆம் பக்கத் தொடர்)

80 களின் பிற்பகுதியில் இன உணர்வினை அடிப்படையாகக் கொண்டு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டமையானது, பிரதான நீரோட்டத்திலிருந்து முஸ்லிம்களை மேலும் தனிமைப்படுத்தும் நிலைக்குத் தள்ளியது. பொதுவான பிரச்சினைகளை மையப்படுத்தி மற்றைய சமூகங்களுடன் மேற்கொள்ளக் கூடிய கலந்துரையாடல்களுக்கான கதவுகளையும் இத்தனிக் கட்சிப் பிரவேசம் மூடிவிட்டது.

தற்போது, இலங்கையின் தேசிய அபிவிருத்திக்கான உபாயங்களை வகுக்கும் வாதப் பிரதிவாதங்களில் கலந்து கொள்ளவோ, இவ்வாறான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கோ ஆர்வமற்ற கட்சியாக மு. கா. உள்ளது. இதற்கு அவசியமான நிபுணர்களை ஒன்று திரட்ட முடியாத கட்சியாகவும் மு. கா. மாறிவிட்டது. மேலும், முஸ்லிம்களையும் உள்ளடக்கி அனைத்து சமூகங்களையும் பாதிக்கின்ற பாரதூரமான பல்வேறு பொதுப் பிரச்சினைகளை அனைவருடனும் இணைந்து அரசாங்கத்துடன் பேரம்பேசித் தீர்வுகளைக் காண்கின்ற வேலை முறைகளை முன்னெடுக்க முடியாத கட்சியாகவும் இது உள்ளது. துரதிஷ்டவசமாக, இந்த கட்சி தான் எதிர்கொள்கின்ற சகல பிரச்சினைகளுக்கும் ஒரு முஸ்லிம் சாயத்தைப் பூசிக்கொள்ளும் போக்கினை வெளிப்படுத்தி வருகின்றது. மு.கா. என்ற தொப்பியை அணிந்திருந்தமையின் காரணமாக, ஒவ்வொரு விசயத்திற்கும் இனவாதச் சாயம் கொண்டு பார்க்கும் போக்கின் ஆபத்தான தன்மையினை காலம் சென்ற எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள் உணர்ந்து கொண்டதுடன், பிரதான தேசிய நீரோட்டத்திற்கு முஸ்லிம்கள் திரும்ப வேண்டியதையும் உணர்ந்து கொண்டதனால்தான் அவர் தேசிய ஐக்கிய முன்னணி (NUA) என்ற கட்சியினை உருவாக்குவதற்கான அடித்தளத்தை இட்டார். ஆனாலும், இத்தீர்க்கதரிசனத்தைப் புரிந்து கொள்ளாமல், தேர்தல் சுவரொட்டிகளில் அச்சிட்டு மறுவாழ்வு கொடுப்பதற்கு மாத்திரமே மர்ஹூம் அஷ்ரஃப் அவர்கள் பயனுள்ளவர் என்ற ரவூப் ஹக்கீமின் அறிவுக்கூர்மை பரிதாபகரமானதே.

**சமூகத்தைப் பிளவுபடுத்துவதற்கு முடிவுகட்டுதல்**

பயங்கரவாத அச்சுறுத்தலைகளை முடிவிற்குக் கொண்டு வருவதற்கு இலங்கை நிறையவே விலைகளைக் கொடுத்துள்ளது. இனவாதத்தைத் தூண்டும் சுலோகங்களைப் பயன்படுத்தி சமூகங்களுக்கிடையில் குரோதத்தையும் காழ்ப்புணர்வுகளையும் ஏற்படுத்துவது இன்று தீவிரமாக நடைபெறுகின்றன. இது காழ்ப்புணர்ச்சிகளை இல்லாதொழிக்கும் வரைக்கும், இந்நாட்டில் சமாதானத்தை அடையவே முடியாது. இந்த வெளிச்சத்தின் உண்மையில்தான் ரவூப் ஹக்கீமும் அவரது கட்சியும் எதிர்காலம் குறித்த ஒரு மீள்பார்வையினைச் செய்துகொள்ள வேண்டும். முஸ்லிம்கள் இந்நாட்டின் பிரஜைகளாவர். அரசியல் சாசன அடிப்படையில் மற்றைய சமூகங்கள் அனுபவிக்கின்ற உரிமைகளும் வாய்ப்புகளும் முஸ்லிம்களுக்கு மறுக்கப்படுகின்றபோது, சிவிலிய உணர்வும் மனச்சாட்சியும் உள்ள ஒவ்வொருவருமே இவ்வாறான அரசியல் சாசன மீறல்களுக்கும் பாகுபாடுகளுக்கும் எதிராக குரல் எழுப்புவதற்கு அணி திரட்டப்படல் வேண்டும்.

அரசியல்வாதிகள் தமது கட்சி நலன்களையும் அதிகாரத்தையும் சலுகைகளையும் பாதுகாத்துக் கொள்வதற்கு கூக்குரலிடுகின்றனர். இதன் காரணமாக, தள்ளி வீழ்த்தப்பட்ட பொதுமக்கள் களைப்படைந்து, விரக்தியடைந்து சோர்ந்துபோய்க் கிடக்கின்றனர். நாட்டில் தற்போது மேலோங்கிக் கிடக்கின்ற விரக்தி நிலைக்காக மக்கள் அரசியல்வாதிகளைத் திட்டித் தீர்க்கின்றனர். அரசியல் தலையீடுகளோ, பிளவுபடுத்தல்களோ இல்லாத ஒரு சூழலில் சமூகங்கள் வைக்கப்படுவதாக கற்பிதம் செய்து கொள்வோம். இவ்வாறான சூழலில், முன்பின் தெரியாத ஓர் அந்நிய அயலவரைக் கூட மக்கள் ஆரத்தழுவிக் கொள்ளவே செய்வர். அடிப்படையில் இப்படிப்பட்ட பண்பினைக் கொண்ட மக்களோ, இன்று அரசியல் இலாபம் பெறுவதற்காக இனத்துவ அடிப்படையில் பிளவுபடுத்தி வைக்கப்பட்டுள்ளனர். சுவாரஸ்யம் என்னவென்றால், தற்போது நாட்டின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் ஒரு புதிய ஆரோக்கியமான சூழல் ஏற்படல் வேண்டும் என்ற குரல்களை நம்மால் கேட்க முடிகின்றன. சமத்துவம், நீதி என்பவற்றை உறுதி செய்யக்கூடியதும் சிந்தனை மற்றும் கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரத்திற்கு வழிவகுக்கக் கூடியதும் தனிமனித மற்றும் சமூக உரிமைகளையும் கௌரவத்தையும் பாதுகாத்து மேம்படுத்தக் கூடியதும் அச்சமும் சந்தேகமும் இன்றி வாழ்வின் இலக்குகளை அனைவரும் அடையக்கூடியதும் தேசிய அபிவிருத்தி முயற்சிகளுக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஒரு புதிய சூழல் என்பதே அக்குரல்களாகும். இவ்வாறானதோர் உன்னதமான சூழல் இனவாத அரசியலின் மூலமாக நிச்சயமாக உருவாக்கப்பட முடியாது என்பதே உண்மையாகும்.

## சாட்சிகளிறி...

முன் பக்கத் தொடர்



புனித ஹஜ் கடமையை முடித்துவிட்டு ஊர் திரும்பிய ஹாஜிகள் உட்பட பட்டப்பகலில் கடத்தி படுகொலை செய்தவர்கள் புலிகள்தான் என்பதை உலகமே அறியும். இந்நிலையில் சாட்சியங்கள் இல்லை எனக் காரணம் கூறப்படுவது தமக்கு ஏமாற்றமளிப்பதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும், குறித்த படுகொலை இடம்பெற்றபோது தற்போதைய பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் எனும் கருணா அம்மான் கிழக்கு மாகாணப் பொறுப்பாளராக இருந்துள்ளார் இவர் இப்படுகொலை குறித்து சாட்சியமளிக்க முன்வருவாரா? எனவும் பாதிக்கப்பட்டோர் கேள்வி எழுப்புகின்றனர்.

## பதுளை வர்த்தக ...

முன் பக்கத் தொடர்



குறித்த சம்பவம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

பதுளை புடவை வியாபார நிலையத்தில் இடம்பெற்ற அசம்பாவிதச் சம்பவம் ஒரு திட்டமிட்ட சதியாகும். கடந்த 11 ஆம் திகதி குறித்த விற்பனை நிலையத்தில் இடம்பெற்றதாக கூறப்படுகின்ற முறைகேடான நடவடிக்கையின் அடிப்படையிலேயே மேற்படி அசம்பாவிதம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஒரு முறைகேடு நடைபெறுமானால் அதனை முறையிடுவதற்கு பொலிஸும் நீதிமன்றமும் இருக்கின்ற நிலையில், மக்கள் இனவாத கும்பல்களை நோக்கியும் கடையர்களை நோக்கியும் செல்வதன் உண்மை நிலை இன்னும் புலப்படவில்லை.

இவ்வாறான சம்பவங்களின்போது பொதுபல சேனா போன்றவர்கள் எங்கிருந்துதான் வருகின்றார்களோ தெரியவில்லை, மின்னல் வேகத்தில் வந்து விடுவர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பொலிஸார் முறைப்பாடுகளை ஏற்பதில் தாமதம் காட்டுவதும் இனவாதிகளுக்கும் அவர்களுக்குப் பின்னாலிருக்கின்ற அரசியல்வாதிகளுக்கும் ஒத்திசைவாக நடப்பதும் எந்தளவுக்கு நியாயமானது?

பதுளை நகரில் ஏற்படுகின்ற இத்தகைய நிகழ்வுகள் எம்மை ஆழமாக சிந்திக்கத் தூண்டுகின்றன. மிகக் கச்சிதமாக திட்டமிடப்படுகின்ற செய்கையான இனவாத சூழ்நிலைக்குள் முஸ்லிம் சமூகம் தள்ளப்படுவதாக நாம் உணருகின்றோம்.

இந்த நாட்டில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் இனவாதம் இந்நாட்டில் இல்லையென்றும் அடிக்கடி குறிப்பிடுகின்ற ஜனாதிபதி, இவ்வாறான நிகழ்வுகளின்போது தனது கவனத்தை செலுத்துவது மிக அவசியமாகும்.

## தர்கா நகர்...

முன் பக்கத் தொடர்

முறுகல் தொடர்பில் பிரதி பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக தலைமையில் விசேட கலந்தாலோசனைக் கூட்டம் ஒன்று களுத்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்றது.

அங்கு கருத்துத் தெரிவித்த பரதி பொலிஸ் மா அதிபர், இக்கூட்டத்திற்கு முஸ்லிம்கள் கருசனையுடன் கலந்து கொண்டமைக்கு நன்றி தெரிவித்தார். மேலும், சட்டத்தை கையிலெடுக்காமல் குற்றவாளிக்கு சட்டத்தின் அடிப்படையில் தண்டனை வழங்கப்பட வேண்டும் என முஸ்லிம்கள் விரும்புவதை பாராட்டினார்.

இந்த சம்பவத்தில் தொடர்புபட்டவர்களுக்கு நீதிமன்றம் மூலம் சட்டரீதியான நடவடிக்கை வழங்கப்படுவதாகவும் இவ்வாறான சூழ்நிலையில் முஸ்லிம் மக்கள் மிக நிதமாகவும் பொறுமையுடனும் பாராட்டப்படும் வகையிலும் நடந்து கொண்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## வட்டமடுவில்...

முன் பக்கத் தொடர்

ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் பல வருடங்களாக தாங்கள் நெல் பயிரிட்டு வருவதாக இந்த முஸ்லிம் விவசாயிகள் கூறுகிறார்கள்.

இம்முறை நீர்ப் பற்றாக்குறை காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட ஏக்கரில் விவசாயம் செய்வதற்கு அரச தரப்பு அனுமதித்துள்ள போதிலும் அதற்கு இராணுவம் தடை ஏற்படுத்துகிறது என்று விவசாயிகள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

ஏற்கனவே வட்டமடு பிரதேசத்திலுள்ள நிலங்கள் வனபரிபாலன திணைக்களத்துக்குரியது எனக் கூறப்பட்டு பல நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள தங்களுக்கு, தற்போது இராணுவத்தினாலும் நெருக்கடி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலையும் விசனமும் வெளியிட்டுள்ளனர்.

## நீதியில்லா...

முன் பக்கத் தொடர்

அளுத்கமையில் அப்படிதான் இடம்பெற்றது. இந்நாட்டில் இதுதான் சட்டத்தின் கதி. அதனால்தான் இந்த நாடு சட்டத்தை துச்சமென மதிக்கும் நாடு என்று நாம் அடிக்கடி கூற வேண்டியுள்ளது. இது நாட்டுக்கு நல்லதல்ல. பொலிஸார் இவ்வாறான விடயத்தில் கவனம் செலுத்தி உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

## அரசாங்கம்...

முன் பக்கத் தொடர்

பொதுமக்கள் தமது குரல்கள் மூலமே வெற்றியடைய வேண்டும் எனவும் ஜய கொட தெரிவித்தார்.

## தம்புள்ளை...

முன் பக்கத் தொடர்

இவ்விவகாரத்தினால் அரசாங்கத்திலுள்ள 16 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் வெட்கப்பட வேண்டும். தம்புள்ளை பள்ளிவாசல் விவகாரம் ஒரு தேசிய பிரச்சினையாக உருவெடுத்திருக்கின்ற நிலையில், இவ்விடயத்தில் அதிகாரமற்றவர்கள் தலையிடுவதானது வேறு பல பிரச்சினைகளுக்கும் வழிவகுக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் பள்ளிவாசல் நிருவாக சபையினர் தவிர்ந்த ஏனையோர் பள்ளிவாசல் தொடர்பில் மூக்கை நுழைப்பதானது நாட்டில் முஸ்லிம்களின் இருப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும். இது தேசிய பிரச்சினை மட்டுமல்ல, சர்வதேச ரீதியிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

## எரியும் நெருப்பில்....

(05 ஆம் பக்கத் தொடர்)

அம்பாறை மாவட்டத்தில் காணப்படுகின்ற 19 பிரதேச செயலகங்களில் 8 பிரதேச செயலகங்கள் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேச செயலகங்களாகும். இதில் கல்முனை பிரதேச செயலகத்திற்கு மாத்திரமே இவ்வாறு பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்நியமனம் தொடர்பில் பல சந்தேகங்கள் முஸ்லிம்கள் மத்தியில் காணப்படுகின்றன.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் திருகோணமலை மாவட்டத்திலும் பிரதேச செயலாளர் நியமனம் தொடர்பில் பிரச்சினை காணப்படுகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் 11 பிரதேச செயலகங்களில் ஒன்றிற்கும் முஸ்லிம் பிரதேச செயலாளர் நியமிக்கப்படவில்லை என கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் அண்மையில் தெரிவித்திருந்தார்.

பிரதேச செயலாளர் அரசாங்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் பிரதேச மட்டத்தில் நடைமுறைப்படுத்தும் பிரதிநிதியாவார். இவர் மக்களோடு மிக நெருக்கமாகவும் ஒருங்கிணைந்தும் செயற்பட வேண்டியுள்ளதால் மக்களினது கலாசார பாரம்பரியங்களை நன்கு விளங்கியவராகவும் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படக் கூடியவராகவும் அவர்களது பிரச்சினைகளை ஆக்கபூர்வமாக தீர்க்க முயற்சி எடுப்பவராகவும் இருக்க வேண்டியது தேவையாகும். இதன் மூலமாகத்தான் மக்களோடு இணைந்து திட்டங்களை நடைமுறைப்படுத்தி அபிவிருத்தி காணச் செய்ய முடியும்.

மக்கள் பிரதிநிதிகள் இந்நிலைமைகளை தக்கவைத்துக் கொள்ள வேண்டியதும் உறுதிப்படுத்த வேண்டியதும் அவர்களது கடமையாகும். ஆனால், முஸ்லிம் காங்கிரஸின் கோட்டைக்குள்ளேயே பல எதிர்ப்புக்களையும் தாண்டி மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற இந்நியமனம், முஸ்லிம் காங்கிரஸின் வங்குரோத்து அரசியலையும் அதன் அரசியல் பிரதிநிதிகளினது கையாலாகத்தனத்தையுமே காட்டுகிறது. ஆனால், இதைக் கூட அரசின் இனவாத அத்துமீறல் என்று கூறி நமது அரசியல்வாதிகள் அரசியல் லாபம் தேடுவார்கள் என்பதே நகைச்சுவைக்குரிய விடயமாகும்.

## குர்ஆன் மனனப்...


(02 ஆம் பக்கத் தொடர்)

திக்குவல்லை முஹம்மட் நுஸ்பைல் தம்பதியினரின் புதல்வனான வஷீம் அஹமட் பாடசாலை மற்றும் ஏனைய வெளிக்களப் போட்டிகள் பலவற்றிலும் வெற்றி பெற்றுள்ளார்.

இதனால் இம்மாணவனது உம்ராவுக்குச் செல்வதற்கான விமான பயணச் சீட்டைப் பரிசாக வழங்க உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் அறிமுகம்





**பெண்கள் தொழில் புரிதல் சில வழிகாட்டல்கள்**

**ஆசிரியர்:** அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத்

**வெளியீடு:** Rifa Publication

**விலை:** *120/=*





**21 ஆம் நூற்றாண்டில் இறுதித்தூதர்**

**ஆசிரியர்:** ஸஹீம் கமால்

**வெளியீடு:** மாற்றீட்டுக்கான அல் இர்பான் ஊடகமையம்

**விலை:** *150/=*




**இஸ்லாமிய ஷரீஆ சட்டம் அவசியமும் சாத்தியமும்**

**வெளியீடு:** இஸ்லாமிக் புக் ஹவுஸ்

**விலை:** *250/=*

## புரூணையில் சில நாட்கள்...

தொடர்-28

——பஷீர் அலி

kinniyabasheerali@gmail.com



- யாராவது தெரிந்த ஒருவரைக் கண்டால்...

- ஓவர்டேர்க் பண்ணும் போது...

- சிக்னலில் பச்சை விளக்கு ஒளிர்ந்து ஒரு செக்கன் முன்னாலுள்ள வாகனங்கள் தாமதித்தால்...

- கொஞ்சம் அதிக நேரம் சிவப்பு விளக்கு ஒளிர்ந்துகொண்டே இருந்தால்...

- நாயொன்று வீதியால் குறுக்கறுத்தால்...

இப்படி, இப்படியாக இன்னும் நூறு காரணங்களுக்காக வாகன ஓட்டுனர்கள் ஹோர்ண் அடித்து தொலைப்பார்கள் அல்லவா, நமது நாட்டில்?

(மீண்டுமொரு தடவை மேலிருந்து படிக்கவும்)

ஆனால், இவை உட்பட எந்தவொரு காரணத்துக்காகவும் ஹோர்ண் அடிக்கும் பழக்கமே இல்லை, புரூணையில்.

'அது சரி, நான் வந்து இவ்வளவு நாட்கள் கழிந்துவிட்டன. ஆனால், இதுவரை ஒரு வாகனத்திலிருந்து ஹோர்ண் அடிக்கும் சப்தத்தை காணவில்லையே என்றேன்.

கொஞ்சம் பொறுங்கள் என்ற நண்பன் சிஹான், கொஞ்சம் தவறான பாதை ஒழுங்குடன் காரை செலுத்தினார். உடனடியாக பின்னால் கார் ஒன்றை செலுத்தி வந்தவன் பலமாக ஹோர்ண் அடித்தான்.

இப்போது தெரிகிறதா? வீதியில் யாராவது ஒழுங்கின்றி வாகனம் செலுத்தினால் மட்டுமே ஹோர்ண் அடிப்பார்கள் மற்றப்படி நமது நாட்டினைப் போல் கண்டவன் நிண்டவனுக்கெல்லாம் ஹோர்ண் அடிக்கும பழக்கம் இங்கில்லை என்றார் சிஹான்.

புரூணை வந்ததற்கு கற்றுக்கொண்ட நல்லதொரு படிப்பினையாக இதனை நாட் குறிப்பில் பதிந்துகொண்டேன்.

புரூணைக் கதைகளைக் கேட்பதற்கென்றால் நன்றாகத்தான் இருக்கிறது, தொடர்ந்து எழுதுங்கள்... என்று கூறும் நூற்றுக்கணக்கான அன்பர்களுக்காக இதுவரை புரூணையில் நான் கண்ட பல விடயங்களை உங்களோடு பகிர்ந்து கொண்டுள்ளேன்.

இவற்றில் நல்ல பழக்கங்கள் என்று நான் கூறிய ஒன்றிரண்டையாவது நமது நாட்டில் அறிமுகப்படுத்தக் கிடைத்தால் அதுவே இத்தொடருக்கான பெரிய வெற்றியாக இருக்கும்.

'எப்ப முடிக்க போறீங்க?' என்று பல அன்பர்கள் கேட்பார்கள், கல்யாணம் முடிக்காமல் கிடக்கும் கிளட்டு இளைஞனைப் பார்த்து கேட்பது போல!

புரூணை பற்றி இன்னும் நூறு தொடர்கள் வேண்டுமானாலும் எழுதலாம் எனுமளவு விடயங்கள் தேங்கிக் கிடக்க, இன்னொரு நாட்டுத் தகவலுடன் சந்திக்கும் வரை விடைபெறுகிறேன்.

என்னை புரூணை அழைத்த நண்பர் இஸ்மத் அலிக்கும் அப்வர்தீன் சேர் குடும்பத்தாருக்கும் நாடு சுற்றி அது பற்றி எழுத ஊக்கமும் அனுமதியுமளித்த பத்திரிகையாசிரியர் அப்துல்லாஹ் அஸாம் அவர்களுக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக எனக்கு தமிழ்ப்பால் ஊற்றி வளர்த்த அன்புக்குரிய ஆசிரியர் இஸ்ஹாக் அவர்களுக்கும் இத்தருணத்தில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

- முற்றும் -



## பிரதேச செயலாளர்...

(03 ஆம் பக்கத் தொடர்)

இந்நியமனம் குறித்து மக்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

இந்நியமனம் அண்மையில் கல்முனை தமிழ் பிரதேச செயலக தரமுயர்த்தல் சம்பந்தமாக தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கிடையிலான கலந்துரையாடலைத் தொடர்ந்தே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது. எது எவ்வாறாயினும் மக்களின் விருப்பத்திற்கு முரணாக அரசாங்கம் செயற்பட்டுள்ளது.

இதில் பொதுமக்கள் குழப்பமடையத் தேவையில்லை. நான் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் எனக்கென்று ஒரு தார்மீகப் பொறுப்பு இப்பிரதேச அபிவிருத்தியிலும் சரி, ஏனைய மக்கள் நலன்சார்ந்த விடயங்களிலும் சரி இருக்கின்றது. இதில் ஒருபோதும் பின்நிற்கமாட்டேன்.

இவ்விடயம் பற்றி நானும் கட்சித் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமும் நேற்று விரிவாக கலந்தாலோசித்துள்ளோம்.

இவை சம்பந்தமாக பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகளை சந்தித்து பேசவுள்ளோம். மேலும் இவ்விடயம் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கும் கொண்டு செல்லவுள்ளோம்.

முஸ்லிம் காங்கிரஸுக்கு தற்போதுள்ள பேரம்பேசும் சக்தியைக் கொண்டு இதனை இலகுவாக தீர்த்துக்கொள்ள முடியும். இந்நியமனத்தை வைத்து சிலர் மக்கள் மத்தியில் பிழையான கருத்துக்களை கூறி அரசியல் செய்ய முற்படுகின்றனர். இதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் எனவும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோம்பு புடிக்கப் போறேம்மா

அன்புள்ள மாணவச் செல்வங்களே, புனித ரமழான் நோன்பு எம்மை நோக்கி வந்துவிட்டது. இந்த வருட ரமழானில் நாம் நடந்துகொள்ள வேண்டிய முறைபற்றி அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். நல்லவைகளை ஏற்போம், தீமைகளைத் தவிர்த்திடுவோம் என்ற சிந்தனையுடன் அவதானமாக நாம் செயல்பட வேண்டும்

...அற்புதப் பொக்கிஷமான அல்குர்ஆனையும் இந்த மாதத்திலேயே அருளாளன் அல்லாஹ் இறக்கியிருக்கின்றான். பத்து வயதைத் தாண்டிய இஸ்லாமிய ஆண், பெண்கள் அனைவருமே ரமழான் மாதத்தில் ரஹ்மத்தான நோன்பை நோற்கவும் கட்டளை பிறப்பித்திருக்கின்றான். இதில் என்ன விசேஷமெனில் பசி தாகங்களை அடக்கி அந்த வல்ல நாயனுக்காக நோன்பிருப்போமானால் இறையருளையும் இறையன்பையும் நாம் பெற்றுக்கொள்வோம்

...மாணவ மாணவிகளே! நோன்பு நோற்பதற்காக கூலியை அவனே நமக்குத் தந்தருள்வான். இந்த நாட்டு அரசாங்கமும் நோன்பு நோற்பதற்காகவே உங்களுக்கெல்லாம் இந்த விடுமுறையைத் தருகின்றது. வீணான விளையாட்டுக்களிலும் சண்டை சச்சரவுகளிலும் ஈடுபடாமல் இந்த மாதத்தை திருக்குர்ஆன் ஓதுவதிலும் ஐங்காலத் தொழுகைகளுடன் சுன்னத்தான தராவீஹ், தஹஜ்ஜத் தொழுகைகளையும் தவறாமல் மேற்கொண்டு வருவோமானால் நிச்சயமாக வெற்றி பெற்றவர்களாக, அல்லாஹ்வின் நல்லடியார்களாக நன்மதிப்பையும் பெற்றுவிடுவோம்..."

நோன்புடைய மகத்துவங்களை விரிவாக எடுத்தியம்பினார் அந்த கத்தீப்.

"என்னடா அஜாத் எப்போதும் போல் நோன்பு விடுமுறையில் மகிழ்ச்சியாக விளையாடிக் களிக்கலாம் என்று பாத்தால் இந்த மனுசன் இந்தப்போடு போட்டுட்டாரே"

"இல்லேடா கபீல், அவர் பேசினதிலேயும் ஞாயம் இருக்குடா"

"என்ன ஞாயம், சொல்லு பாக்க"

"இப்போ நமக்கு பன்னெண்டு வயசு. கட்டாயம் நோம்பு பிடிக்கத்தான் வேனும். நோம்பு பிடிச்சால் எத்தனை எத்தனை நன்மை கிடைக்குமென்றெல்லாம் எவ்வளவு அழகாக எடுத்துச் சொன்னாருடா, நீ நல்லாக் கேக்கல்ல போல"

"என்ன சொன்னாலும் சரிதான்டா அஜாத்... தின்டு, தின்டு பழகிப்போன எனக்கு பட்டினியெல்லாம் கெடக்கேலாது"

"எனக்கென்டா பட்டினி கெடந்த பழக்கமெல்லாம் இருக்குடா. எங்க வாப்பாவுக்கு காச்சல் வந்து கூலிவேலை செய்யப் போகாமல் இருந்தா எங்கட ஊட்டுல பட்டினிதான்டா கெடப்போம். நான் இன்னும் நோம்பு பிடிக்கலேதான்... இந்த கதீபுட பேச்சிக்குப் பொறவு நோம்பு பிடிக்கனும்னு தோனுதுடா கபீல்"

அன்று பாடசாலையில் நோன்புக்காக விடுமுறை வழங்கப்பட்டது. மாணவர்களுக்கெல்லாம் ஒரே குதூகலமாகத்தான் இருந்தது. அதிலும் நோன்பு காலங்களில், விளையாட்டுக்களிலும் வீணான காரியங்களிலும் ஈடுபடும் மாணவர்களின் முகங்களில் சந்தோஷம் பன்மடங்கு ஜொலித்துக் கொண்டிருந்தது.

ஆனால் அஜாத் மட்டும் எந்த சந்தோஷத்தையும் காட்டாமல் தன் வீட்டையடைந்தான்.

இன்னல்கள் பலவற்றை அனுபவித்த குடும்பம்தான் முனீரின் குடும்பம். தன் மனைவி அமீராவுடனும் மகள்மார்களான ஆபிலா, ஷாமிலாவுடனும் அஜாத் அனீஸிடனும் வாழ்ந்து வரும் சாதாரண கூலித் தொழிலாளிதான் முனீர்.

முனீரின் மனைவி அமீரா பாய், சுளகு போன்றவைகளை இழைத்துக் கொடுக்க அவைகளை வாராந்தச் சந்தையில் விற்றுவருவதும் மற்றைய நாட்களில், கொள்வனவுக் கடைகளுக்கு லொறிகளிலிருந்து இறக்குமதி செய்யும் பொருட்களை சுமந்து கொடுப்பதுந்தான் இவரது தொழிலாகும். நோன்பு காலம் வந்துவிட்டால் அமீராவுடன் சேர்ந்து ஆபிலாவும் ஷாமிலாவும் வடை, பெற்றீஸ், சமூஸா என்பவைகளைத் தயாரித்து குறிப்பிட்ட இரண்டொரு கடைகளுக்கு விநியோகிப்பார்கள். வழமையாக கடைகளுக்கு கொண்டு செல்லும் பொறுப்பை அஜாத்தின் தலையில் கட்டிவிடுவார்கள். இதனால் நோன்பெல்லாம் நோற்பதில்லை அஜாத். காலை நேரம் முற்றாக விளையாட்டில் ஈடுபடுவான், அவன்.

இன்று நாடு பூராகவும் ஒரே பரபரப்பு. ரமழான் மாதத்திற்கான தலைப்பிறை பார்த்தவர்கள், குறிப்பிட்ட தொலைபேசி இலக்கங்களுடன் பிறைக் குழுவினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டிருந்தார்கள்.

அன்றிரவு ஏழு மணிக்கெல்லாம் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் நாட்டின் சில பகுதிகளில் வானம் தெளிவாக இருந்ததினால் ரமழான் மாத தலைப்பிறை தென்பட்டதாக ஆதாரபூர்வமான தகவல்கள் கிடைத்ததினால் இன்று அதிகாலை நோன்பு நோற்க நாடு பூராகவுள்ள முஸ்லிம்களுக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

முனீரின் வீட்டில் அன்றிரவு எல்லாம் செய்வதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

"உம்மா... உம்மா... நான் இந்தத் தடவை முப்பது நோம்பையும் புடிக்கப்போறேம்மா, ஸஹருக்குக் கட்டாயம் என்னையும் எழுப்பிடுங்க நீங்க எழுப்பாட்டி நான் பட்டினி நோன்பு தான் புடிப்பேன்..."

"என்ட அல்லாஹ்வே...! நீயா மவன் நோம்பு புடிக்கப் போறேங்கிறாய், பசி தாங்கமாட்டாய் மவன். இன்னும் மூனு, நாலு வயசு போகட்டும் அப்போ நோம்பு புடிச்சிக்கலாம்"

"இல்லேம்மா நோம்பு புடிக்கிறதாலே எவ்வளவோ நன்மைகள் இருக்காம். ஒரு கெழமைக்கி முந்தி ஸ்கூல்லே கதீப் ஒராள் வந்து எங்க எல்லாருக்கும் பேசினாரும்மா. நான் அன்டைக்கே நிய்யத் வெச்சிடேம்மா. அதாலேதாம்மா சொல்றேன் நோம்பு புடிக்கப் போரேனென்டு"

இரண்டு ராத்தாமாரும் சேர்ந்து,

"பரவாயில்லை தம்பி, நாங்க ஸஹருக்கு எழுப்பி விடுகிறோம், பசி வந்து தாங்காமல் போனால் சொல்லு... எடையிலே நோம்பை விட்டுடலாம்."

"அல்லாஹ் எனக்கு பசி வாரத்துக்கு உடமாட்டான் ராத்தா. நீ இருந்து பாரேன்"

அஜாத்தின் ஆசை நிறைவேறியது. ஸஹர் செய்து சுபஹீத் தொழுதுவிட்டு ராத்தாமார்கள் குர்ஆன் ஓதும் இடம் சென்று அஜாத்தும் திக்கித் திக்கி சிறிது நேரம் குர்ஆனை ஓதிவிட்டு அப்படியே தூங்கிவிட்டான்.

அஸர் தொழுகைக்குப் பின்னர், நோன்பு காலங்களில் வழமையாக செய்வது போன்று வீட்டில் தயாரித்த நோன்பு திறப்பதற்கான வடை, சமூஸா, பெற்றீஸ் இவைகளைக் கொண்ட கூடையைச் சுமந்து சென்றான் அஜாத். இடையில் கண்ட கபீல்,

"டேய் இன்டைக்கு என்ன வெளையாட்டுத் தெரியுமாடா... நீயும் வராம இருந்திட்டியே. நாளைக்காவது வாடா"

"இது வெளையாடுற மாசமில்லடா, நோம்பு புடிக்கிற மாசம் கபீல்"

"அது செரி, இதென்னடா இந்தக் கூடையெல்லாம் சொமந்துக்கிட்டு"

இதைச் செமக்கிறதாலேதான்டா எங்கவூட்டில ஒரளவாவது பெருநாள் கொண்டாட ஏலும். நீ பணக்காரனப்பா ஒனக்கு ஒன்னும் புரியாது"



எம்.எம். அலி அக்பர்
கிண்ணியா

நோன்பு திறப்பதற்காக மஃரிப் தொழுகை அதான் ஒலிக்கிறது. வீட்டில் எல்லோருடனும் சேர்ந்து நோன்பைத் திறந்தான் அஜாத்தும்

"ஏன் மவன் உனக்கு பசி, தாவம் எதுவும் வரலையாப்பா"

"இல்லேம்மா, சில நேரங்களில் வாப்பாவுக்கு சுகமில்லாம இருந்தப்போ நாம பட்டனி இருந்திருக்கிறோம்தானே! அந்தப் பழக்கத்தாலே எதுவும் எனக்கு காட்டலேம்மா, நான் எல்லா நோம்பையும் புடிப்பேம்மா"

"என்ட தங்க மகனே..! அந்த அல்லாஹ் உன்னை நல்லா வெச்சிருக்கனும் என்று அஜாத்தை மார்போடணைத்து உச்சி முகர்ந்தாள், தாயார் அமீரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உண்மை யாதெனில் - நீ
உடனடியாகக் கிடைக்கக்கூடிய
அதாவது
இம்மையை இச்சிக்கின்றாய்
மறுமையை மறக்கின்றாய்

இம்மையை இச்சிப்பதால் - நீ
இறைவனையே மறக்கின்றாய்
இறைவனை மறப்பதால்
உனக்கென்ன

அவனுக்கு அடுத்த
அந்தஸ்தில் இருப்பவர்களான
பெற்றோர் பெரிசா?
அன்னாரைப்
பேணாதிருப்பதுதான் நீ!
பெற்றோர்களுக்கும் பரிசா?

சந்திரன் ஒளி குன்றிப்போகும்
மாத முடிவில்
மறைந்தேபோகும்
சூரியன் ஒளி மங்கி
மாலைப் பொழுதில்
மேற்கில்
மறைந்தே போகும்

ஆனால்
அவை மீண்டும்
வந்து தோன்றும்

உனக்கந்த வாய்ப்பில்லை
ஆதலால் நீ
உன்னைப் பற்றி
நன்கு அறிந்தவனாக இரு

அது
இம்மைக்கும் நல்லது
மறுமைக்கும் நல்லது

முதலில் உன்னை ஈன்றெடுத்த
பெற்றோரைப் பேணு!
தாயென்று பார்
தந்தையென்று பார்

அன்னவரை நோக்கி
சீயென்று ஒரு சொல்லேனும்
செப்பாதே
மரிக்கும் நாள்
இன்றைக்கே என்று
நினைக்கப் பயமா?

நிலை குத்திவிடும் பார்வை - நீ
நீட்டிப் படுப்பதுபோல் கிடப்பாய்
நின்னை வந்து
மூடும் கபன் போர்வை

சுவாசிக்க முடியாமல்
மூச்சுத் தட்டுவது
உயிர் தொண்டை வரை
வந்து எட்டுவது

உலகைவிட்டுப் பிரியும்
நேரம் வருவது
உடலம் மையத்தென்ற
நாமம் பெறுவது
நடக்காமலா போகும்?
இவ்வெல்லையை வாழ்வு
கடக்காமலா போகும்?

எங்கே?
ஓடி ஒளிவது
நீயே சொல் - உன்னுடன்
நானும் வருகிறேன்!

கலாபூஷணம் எ.எம்.எம். அலி
கிண்ணியா

## இன்ஷா அல்லாஹ்!


ஈமானியக் கூர்வாள் கொண்ட
இஸ்லாமிய இளவலே
சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப உன்னை
உன் உணர்வுகளை
எழுப்பவும் அடக்கவும் கற்றுக்கொள்!
காவியுடைக் காடையர் சிலரின்
அடாவடிகள் கண்டு
ஆத்திரப்படவோ
அவசரப்படவோ வேண்டாம்!

பொங்கி வரும் சினத்தீயை
பொறுமை நீர்வார்த்து
தணித்துக்கொள் தம்பி!
இஸ்லாத்தின் பால் நீ கொண்டுள்ள
இறுக்கமான நெருக்கத்தின்
பெறுபேறாய்...
களத்தில் இறங்கிவிடாதே!

முள்ளை முள்ளால்தான்
எடுக்க வேண்டும்
என்கிறாயா?
இல்லை நிதானமாக விரல்
நகத்தாலும் எடுக்கலாம் அல்லவா?
அந்த நகம்...
அதே 'சாது' க் கூட்டத்தின்
நகமாகவும் இருக்கலாந்தானே!

அவசரப்படாமல் காய்களை
அவதானத்துடன் நகர்த்திப் பார்
வெற்றி உனக்குத்தான்!
ஏனெனில்
முள்ளில் விழுந்த சீலையை
நிதானமாக கழற்ற வேண்டும் தம்பி!
தவறினால்....
வெறும் கந்தல்தான் மிஞ்சும்!
எனவே உன்
கத்தியை தீட்டுவதற்குப் பதிலாய் – உன்
புத்தியைத் தீட்டிக்கொள்!
'அஸ்ஸப்ரு நிஸ்புல் ஈமான்' என்ற
அண்ணலாரின் அமுத வாக்கை – உன்
அக நிலத்தில் ஆழமாய்
ஊன்றிப் பதித்துக்கொள்!
இறுதி வெற்றி
நிஜமாய் உனதே
இன்ஷா அல்லாஹ்!

கலாபூஷணம்
ஏறாவூர் தாஹிர்




இதயச் சுமைகளை
எழுத்துக்களாக
இறக்கி வைத்தேன்
இதமாக தோன்றியது


எனினும்
இன்னும் தேடுகின்றேன்
காணாமல்போன நிம்மதி
தொலைந்துபோன
இடத்தை!

ஒரு நாள்
ஒரு வருடம்
ஒரு யுகமென
தேடித் தேடியே
தோற்றுக் கொண்டிருக்கிறது
வாழ்க்கை!

அங்கே என்றனர்
இங்கே என்றனர்
எங்கெங்கோ என்றனர்
எல்லா இடங்களிலும்
தேடியாயிற்று...

தொடர் தேடல்களின்
தோல்விகளின் பின்...
அங்கலாய்த்து
சலித்துப்போன பிறகுதான்
புரிந்தது
சிதைந்து வீழ்ந்த நிம்மதி
"சிதறி"
காற்றோடு
கலந்துவிட்டதென்று!

ஏ.ஏ. ஜீனா முஸ்தபா
வெளிவிட்ட



## முதலில் பிரிந்த முதல் சொந்தம்

உங்கள் நினைவில் நானழுத காலம்
என் தலையணை மட்டுமா அறியும்
என் கவியின் ஆரம்ப மூலம்
உம் பிரிவென்று யாருக்கு தெரியும்??

என் கனவுகளுக்குக்கூட பிறர்
வேலியடித்த காலத்திலே
என் நனவுகளை அதி வேக
பாதைகளால் அலங்கரித்தவரே!

வாழ்வின் நிதர்சனங்கூட
விளங்காத வயதில்
வாழ்வியல் பண்பாடுகளை
என்னில் விதைத்தவரே!


பிறரின் ஆதங்கமும் அனுதாபமும்
எம் துயர் போக்கிய வேளை
எம்மைச் சுற்றி அதிகார வட்டங்கள்
கோலமிட்டு வேல்தரித்த வேளை
உங்கள் பாசமழையில் என்னை
நனைத்தீர்
உங்கள் நேசப் புன்னகையால்
எம் மனம் வென்றீர்...

நான் சுவைத்த பாலில்
என் தாகம் தீரவில்லை
தீர்க்கிறார் என் தந்தை
என் அறிவுத் தாகத்தையும்...

இறுதியாய்
நான் உங்களை வேண்டாமலே
நீங்கள் என்னை சுமந்தீர்கள்
நான் உங்களை சுமக்க
ஆசைப்படு முன்
ஏனையோர் உங்களை சுமந்தனர்

அஸ்லம் அஹ்மத்
ஜாமிஆ நளீமிய்யா



## என் எதிரிகளுக்கு

உங்கள் சுடு சொற்கள் எதுவும்
என்னை சுட்டுப் பொசுக்கி
சாம்பலாக்கி விடாது
இறைவனின் நியதியை
உங்களின் பொறாமையும்
பொல்லாமையும்
எப்போதும் வென்றுவிடாது
நெஞ்சுரமும் நேர்மையுமற்ற
உங்கள் செயற்பாடுகள்
எனது பயணப் பாதையில்
ஒரு போதும்
தடுத்து நிறுத்தமாட்டாது
எனது கிராமத்தை நான்
வெகுவாக நேசிக்கின்றேன்
அதில் வசிக்கின்ற
அப்பழுக்கற்ற
அப்பாவிகளையும்
நேசிக்கின்றேன்
உங்கள் மீதான
எனது வெறுப்பானது
நியாயமற்றது என்று
நீங்கள் நினைக்கலாம்
ஏதுமறியா அப்பாவிகளை
ஏமாற்றி வாழ்க்கை நடத்தும்
உங்கள் ஏகாதிபத்தியத்தின்
எதிரி நான்...
அன்றாடம் காய்ச்சிகளிடம்
பணம் பறிக்கும்
உங்கள் அயோக்கிய தனத்தை
என்னால் அங்கீகரிக்க முடியாது
உங்களின் வாளின்
கூர்மைக்கு எனது கழுத்தை
தாரை வார்க்கவும்
உங்கள் துப்பாக்கி ரவைகளுக்கு
எனது நெஞ்சை பரிசளிக்கவும்
எப்போதும் நான் தயாராகவே உள்ளேன்
நயவஞ்சகர்களான உங்களோடு
சமரசம் செய்து கொள்வதைக்காட்டிலும்
அதற்குப் பகரமாய் என் உயிர்
பறிக்கப்படுவதை
நான் மிகவும் விரும்புகிறேன்
வேஷம் போடும் விசமிகளே
விசத்தை நாவில்
தேக்கி வைத்து
தேவாரம் பாடுகிறீர்கள்

நீங்கள் என் பரம்பரை எதிரியல்ல
ஆனாலும் எதிரிகள்
மக்களைக் காட்டி
பிச்சை எடுப்பதை நிறுத்துங்கள்
மகான் வேஷம் போட்டு
காய்நகர்த்தும் உங்கள்
காவலித்தனத்தை நிறுத்துங்கள்
பொறுக்கிகளான உங்களை
நான் வெறுத்தாலும்
பொறுக்க முடியாத வேதனை
நம்மூர் தெருக்களில் நடக்கையில்...

நாச்சியாதீவு பர்வீன்

எங்கள் தேசத்திற்கு கவிதை எழுதுபவர்கள் A4 தாளின் ஒரு பக்கத்திற்குள் அடங்கத் தக்கவாறு எழுதியனுப்பவும்.

- ஆ-ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே...
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த
விற்பனையில் சாதனை படைத்த
**எனது டயறியின் மறுபக்கம்**
**மீள்பதிப்பு செய்யப்பட்டுள்ளது**




பிரபல சிறுவர் நோய்நல விசேடநிபுணர்
டாக்டர் முஸ்தபா றயீஸ் அவர்கள் எழுதிய
எனது டயறியின் மறுபக்கம்
உங்கள் கைகளில்...

விலை ரூபா. 250.00

ALHASANATH PUBLISHERS
77, Dematagoda Road, Colombo - 09
TEL: 011 -268 9324

UNIVERSITY OF WOLVERHAMPTON




# BTEC HND in Quantity Surveying

Leading to **BSc (Hons)** From **UK**

## Why Choose BCAS for Quantity Surveying?

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக QS கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி.
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க QS நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
- முன்னணி நிறுவனங்களினூடாக வழங்கப்படும் நடைமுறைப்பயிற்சிகள்.
- RICS, CIOB, IQSL போன்றவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்.
- தற்போது இலங்கையிலேயே Top-Up கற்கைநெறியினை University of Wolverhampton அல்லது London South Bank University உடன் இணைந்து பூர்த்தி செய்யும் அறிய வாய்ப்பினை BCAS Campus உங்களுக்கு வழங்குகின்றது.
- தற்போது இலங்கையிலேயே MSc கற்கைநெறியினை பூர்த்தி செய்துகொள்ளும் வாய்ப்பு.

5 MSc in Construction Project Management From University of Wolverhampton
4 BSc (Hons) in Quantity Surveying Top-Up From University of Wolverhampton or London South Bank University
3 BTEC HND in Quantity Surveying
2 Foundation Course
1 After O/L
After A/L

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

For Details: 077 283 4595

Corporate Office:
32, Dharmarama Road, Colombo 6, Sri Lanka.
011 255 9255 info@bcas.lk

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

**இப்போது இணைய உலகில் இணைந்துள்ளது**

**எங்கள் தேசம்**
**இணையம்...**

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே!

**செய்திகள்**
**சிறப்புக் கட்டுரைகள்**
**அரசியல் அலசல்**
**விஷேட செவ்விகள்...**
**என பல்சுவை அம்சங்களுடன்**
**இணைய உலகில் உலா வரும்**
**உங்கள் உள்ளத்தை கொள்ளை**
**கொள்ளும்!**

**எங்கள் தேச இணையம்...**
**www.engalthesam.lk**

எங்கள் தேசம் செய்திகளை உங்கள்
கையடக்கத் தொலைபேசியில் பெற்றுக்கொள்ள
F (இடைவெளி) engalthesam என Type செய்து
40404க்கு SMS செய்யுங்கள்

JUST MEDIA FOUNDATION
77, DEMATAGODA ROAD, COLOMBO 09, SRI LANKA
Tel: 011 2698771 E-Mail: jmflanka@gmail.com

## பாடசாலை மாணவர்களுக்கான புனித ரமழான் மாத ஆன்மீக வதிவிடப் பயிற்சி முகாம்

வருடாந்தம் ரமழான் மாதத்தில் பராஇமுல் ஈமான் கலாசார நிலையம் நடாத்தி வருகின்ற மேற்படி பயிற்சிநெறியை இம்முறையும் நடாத்த திட்டமிட்டுள்ளது

- **கற்பிக்கப்படும் பாடங்கள்:** இஸ்லாமிய வரலாறு, ஒழுக்கநெறிகள், தஜ்வீத், குர்ஆன் மனனம், சந்தர்ப்ப துஆக்கள்.
- **பயிற்சிகள்:** இபாதத்துககளை முறையாக செய்தல், நேரத்துக்கு இயங்குதல், ஆளுமை விருத்திக்கான பயிற்சிகள்.
- **வழிகாட்டல்கள்:** வாழ்வின் இலக்கை தீர்மானித்தல், உளவள ஆலோசனைகள், மற்றும் கற்றல், பரீட்சைக்குத் தயாராகுதல், பெற்றோர், ஆசியர்கள் மற்றும் சமூக உறவு என்பவற்றுக்கான வழிகாட்டல்கள்.

உங்கள் விண்ணப்பங்களை 20.06.2014 முன் கிடைக்கக்கூடியதாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்
dharulquranlibara@gmail.com

ஆரம்பம்: 02.07.2014 முதல் 24.07.2014
இடம்: பராஇமுல் ஈமான் கலாசார நிலையம்.
வயதெல்லை: 10 முதல 13 வரை

BARA-IMUL IMAN CULTURAL CENTER
No,40/7, AmbagahaJuction,
Gothatuwa

மேலதிக விபரங்களுக்கு: 0777 56 50 51, 011-2685415, 0773 59 55 53

**புனித ரமழானில் உங்கள் இல்லங்களை**

**அல்ஹஸனாத்**

ரமழான் சிறப்பிதழ்
அலங்கரிக்கட்டும்



77, [illegible] வீதி, கொழும்பு - 09 தொ.பேசி: 077 6621448, 077 2649151

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org